# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 07 சனிக்கிழமை (21-06-1997) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 3


# தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த சிலர் காணாமற்போனவர்களாகக் கணிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 21

தென்மராட்சிப் பகுதியில் இருந்து கைதாகிய பின்னர் தகவல் எதுவும் தெரியாத நிலையில் உள்ள மிகச் சிலரை காணாமற் போனவர்களாகக் கணிப்பது என்று பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு முடிவு செய்திருப்பதாக நம்பகமாக அறிய வருகிறது.

காணாமற் போனோர் தொடர்பாக குடாநாட்டுக்கு வந்து விசாரணை நடத்தி வரும் பந்துவ குலதுங்கா தலைமையிலான விசாரணைக் குழு தனது முதலாவது, இரண்டாவது விசாரணைகளின் பின்னர் இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

பாதுகாப்பு அமைச்சு பிரஸ்தாப விசாரணைக் குழு பலாலியில் மூன்று கட்டங்களாக விசாரணைகளை மேற்கொண்டது.

முதல், இரண்டாம் கட்டங்களில் நடத்திய விசாரணைகளில் சாட்சியமளித்த 112 பேர் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் தேடுதல்கள் மேற்கொண்ட பின்னரே விசாரணைக் குழு இந்த முடிவுக்கு வந்துள்ளதாக அக்குழு வட்டாரங்கள் யாழ். செயலக அதிகாரிகளிடம் கோடி காட்டியதாக அறிய வந்தது.

காணாமற் போனவர்களாகக் கணிக்கப்பட்டு இனம் காணப்பட்டவர்கள் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒரு சிலரே என்றும் தெரிய வந்தது.

இனங்காணப்பட்டவர்கள் காணாமற் போவதற்குப் பொறுப்பாக இருந்ததாகக் கருதப்படும் படை அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து ஆலோசிக்கப்படுவதாகவும் தெரிய வந்தது.

இதே வேளை விசாரணைக் குழு இவ்வாரம் ஆரம்பித்த விசாரணைகள் இன்று முடிவடையும் என்றும்—

இன்று கொழும்பு திரும்பும் இக்குழுவினர் மீண்டும் பலாலியில் தமது விசாரணைகளை நடத்துவர் என்றும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் இயங்க இணக்கம்!

## 'தமிழர் மன்றம்' என்ற அமைப்பு உதயம்

கொழும்பு, ஜூன் 21

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஒன்றிணைந்து - ஓரணியின் கீழ்--செயற்படுவதற்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணங்கியுள்ளன.

இது தொடர்பாக எட்டுத் தமிழ்க் கட்சிகளும் நேற்று முன்தினம் ஒன்று கூடி 'தமிழர் மன்றம்' (Tamil Forum) என்ற அமைப்பை ஸ்தாபித்துள்ளன.

நேற்று முன்தினம் நாடாளு மன்றத்தில் உள்ள ஈ. பி. டி. பி. அமைப்பின் அலுவலகத்தில் கூடிய தமிழ் கட்சிகள் அங்கு இந்த அமைப்பை ஆரம்பித்தன.

இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி., புளொட், ஈ. பி. ஆர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் இணங்கிப் போவதற்கு ரணில் இதயசுத்தியுடன் வரவில்லை!

### குற்றம் சாட்டுகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 21

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் அரசுடன் உடன்பட்டு செயல்படுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணங்கியுள்ள போதிலும், அவர் இதய சுத்தியுடன் அந்த உடன்பாட்டுக்கு வரவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

ஈ.பி.டி.பி. அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இராமேஸ்வரன், இராமமூர்த்தி ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்த சமயம் அவர்களிடம் ஜனாதிபதி இப்படித் தெரிவித்தாராம்.

"அரசுக்கும் - எதிர்க்கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கப்பாடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தை இலகுவாக்கி விட்டது'' என்று இரு எம். பிக்களும் ஜனாதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி அமைச்சர்களின் பொறுப்புகளில் மாற்றம்

### திங்களன்று நடக்கும்

கொழும்பு, ஜூன் 21

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப் கடந்த புதன் கிழமை இரவு நடத்திய பேச்சுக்களை அடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை பிரதியமைச்சர்களின் பொறுப்புக்களில் சிறிய மாற்றம் செய்யப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற —

அமைச்சரவை மாற்றத்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியுற்றிருப்பதை அடுத்து அதனை ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எடுத்துக்காட்டும் வகையில் அமைச்சரவைக் கூட்டத்தை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய மாணவர்களைச் சேர்ப்பதை யாழ்.மருத்துவபீடம் இடைநிறுத்தும்?

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மருத்துவ பீடத்தில் போதிய விரிவுரையாளர்கள் இல்லாத காரணத்தால் புதிய மாணவர் அணியை அனுமதிப்பதைத் தத்காலிகமாக நிறுத்த வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பேரவை தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் பல்கலைக் கழக மூதவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, இந்த விவகாரம் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக் கழக மூதவை எதிர் வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு விசேடமாகக் கூடவிருக்கிறது.

1991, 92, 93, 94 ஆகிய ஆண்டுகளில் ஜி. சீ. ஈ. (உயர் தரப்) பரீட்சைக்குத் தோற்றி அதனடிப்படையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெற்ற — நான்கு அணிகளைச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமா - சிறிமானி திங்கள் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 21

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவி சிறிமானி அத்துலத் முதலி எதிர் வரும் திங்கட்கிழமையன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவியும் பிரதமருமான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிப்பது தொடர்பாக முன்னணியின் தலைவியான ஸ்ரீமாவோவுடன் உடன்பாடு ஒன்றுக்கு வந்து, அதனடிப் படையில் சிறிமானியின்கட்சி அர

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் விரைவில் அமைச்சராவார்!

கொழும்பு, ஜூன் 21

ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா விரைவில் அமைச்சராக நியமிக்கப் படுவார் என்று தமிழ் அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டித் தனியார் தொலைக்காட்சி நிறுவனமான ரி.என்.எல். நேற்றிரவு அறிவித்தது.

அமைச்சர் பதவியை ஏற்க டக்ளஸ் தேவானந்தா இணங்கியுள்ளதாக அந்தவட்டாரங்கள் தெரிவித்ததாகவும் அச்சேவையில் மேலும் அறிவிக்கப்பட்டது. (உ-21-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கந்தசாமி வசந்தினி என்பவருடைய 605241646V இல. தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கறுத்த பேஸ் உடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ''நிரு'' ரியூசன் சென்ரர், கோண்டாவிலில் ஒப்படைக்கவும்.
[47904]

இராசநாதன் ஸ்ரீதரன் ஆகிய எனது 641930148V இலக்க தேசிய அடையாள அட்டை கோப்பாயில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'குறிஞ்சி பார்மசி', திருநெல்வேலிச் சந்தி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [47918]

துரைநாயகம் துஷ்யந்தன் என்பவரின் விசேட அடையாள அட்டையும், பாடசாலை அடையாள அட்டையும் பூனாறி மரத்தடிக்கும், நாச்சிமார் கோயிலடிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலயத்தில் ஒப்படைக்கவும்.
[47919]

### திருமணசேவை

33 வயதுடைய B Sc. (வெளிநாடு) 2இல் செவ்வாய் மணமகனுக்கு பட்டதாரி மணப்பெண் தேவை. வேறு தொழில்களிலும் மணமக்கள் உண்டு. தொடர்பு:- இராசகுலசிங்கம், ''விநாயக'' திருமண சேவை 128, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
[47905]

எம் நிறுவனத்தில் சகல மதத்திலும், உத்தியோகத்திலும் மணமகன், மணமகள் உண்டு. ஜாதகம், புகைப்படத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும், தொடர்பு:- ''துர்க்கா'' திருமண சேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், [47906]

### மரம்

'மரம் இல்லாமல் மனிதன் வாழ முடியாது', சர்க்கரை வேம்பு, பலா, வேம்பு, கரிசலாங்கண்ணி, கற்பூரவல்லி, பொன்னாவரசு, மில்க்வைற் நீலசோப்/சலவைத்தூள் வெற்றுறை பத்து அல்லது ரூபா 10/- ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் ரூபா 20/-உங்களுக்கு உதவிட எங்களுக்கு உதவுங்கள்.
[C/ 967]

### விற்பனைக்கு

மருந்துக் கடைக்குரிய கண்ணாடி சோக்கேஸ், முதிரை இறாக்கை, வெட்டி நிமித்திய பெரல் தகரம், கட்டில், அலுமாரி, மேசை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சீலன், இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
[47913]

## கலந்துரையாடல்

யாழ். காங்கேசன்துறை, யாழ். பருத்தித்துறை இறங்கு துறைகளில் பொருள்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடும் லொறி உரிமையாளர்கள், சாரதிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் (23-06-97) திங்கட்கிழமை காலை ஒன்பது மணி அளவில் வாகன அணி பரிபாலன காரியாலயத்தில் நடைபெற இருப்பதால் அனைவரையும் தவறாது சமுகம்தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வண்ணம்:
**செ. இராசசேகரமும்**
**சக வாகன உரிமையாளர்களும்.**
(47924)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

## கலைப்பீடப் பரீட்சைகள் 1995

**முதலாம் ஆண்டு கலை, வர்த்தகம், முகாமைத்துவப் பரீட்சை - 1995**

பொதுக்கலை மாணிப் பரீட்சை, பகுதி 1, 11, - 1995

சிறப்புக்கலை மாணிப் பரீட்சை 1, 11, 111-1995

வர்த்தகமாணிப் பரீட்சை, பகுதி 1,11, 111 - 1995

முகாமைத்துவமாணிப் பரீட்சை, பகுதி 1. 11, 111 - 1995

மேற் குறித்த 1995 ஆம் ஆண்டு பரீட்சைகளுக்குத் தகுதியுடைய மாணவர்கள், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையிலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை பிரதிப் பதிவாளருக்கு, 1997-07-31 ஆம் திகதிக்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது நவீனசந்தை, யாழ்ப்பாண மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1997 - 07 - 31 ஆம் திகதிக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997 - 06 - 17

(ஸி-981)

வடமராட்சி மாணவர்களுக்காக!

## COMPUTER COURSES

- ★ BASIC
- ★ d BASE III +
- ★ PASCAL
- ★ LOTUS 1 2 3

**Next sessions starting on 23 rd June 97**

**For further details contact:**

**Institute of Informatics Studies,**
**Navalar Madam, Karaveddy.**

★ மாணவர்களுக்கான அனைத்து செய்முறைப் பயிற்சிகளும் எமது நெல்லியடி கிளையிலேயே நடத்தப்படும்.
(C/982)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் முத்து தமபிராஜா

(கட்டைப்பிராய், இருபாலை)

அன்னை மடியில்: **16-05-1936**
ஆண்டவன் அடியில்: **22-05-1997**

பாசத்தின் திருவுருவே, பண்பின் உறைவிடமே!
அன்புநெறி காட்டி எம்மை அரவணைத்த தெய்வமே!
பாதிவழியில் எம்மை பரிதவிக்க விட்டு
வாழ்ந்தது போதுமென்று
விண்ணுலகம் சென்றனையோ?
வற்றாத கண்ணீருடன் நாம் இங்கு வாடுகிறோம்;

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**பொன்னையா குடும்பத்தினர்**

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.
(47923)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 27 — 07 — 1956



இறைவன் அடியில்: 15 — 07 — 1992

### திருமதி சுந்தரலிங்கம் அரியமலர்

என் அன்புச்சுடரே — ஏன் அணைந்தாய்...?
உன் ஒளியிழந்த என் வாழ்வு
நரகமாகி விட்டதம்மா!
நான் பெற்ற செல்வி — உன் நினைவு
என் நெஞ்சை விட்டு நீங்காதம்மா,
நான் மீண்டும் ஒளி பெற்று வாழ முடியாதம்மா...
தனிமையாய் நான் தெருவோரம்
அழுது அழுது கலங்குகின்றேன்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் பிரிவால் வாடும்:
**அன்பு அம்மா, அண்ணா குடும்பம்,**
**தம்பி ரூபன்.**

பொன்னையா சின்னம்மா,
''மலர் இல்லம்,
சாந்த வளவு,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.
(47827)

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு: 05 — 06 — 1941



உதிர்வு: 01 — 07 — 1996

### திருமதி கந்தசாமி சின்னத்தங்கம்

(சிங்காரம்)

**திதி: பிரதமை 21-06-1997**

ஓ! அம்மா,
உயிர்காக்க
ஊர் விட்டுப்போய்
உனை இழந்தோமே!

சிருங்கார நம் வாழ்வினிலே
சிங்காரப் பெயர் கொண்ட
உண்மைப் பெயர் ஒன்றே
எமை என்றும் வழி நடத்தும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**கணவர், பிள்ளைகள், மருமகன்.**

தம்பக்கடவை,
சந்நிதி வீதி,
இடைக்காடு,
அச்சுவேலி.
(47757)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷிய மற்றும் அல்ஜீரிய தேர்தல்கள் வெறும் கேலிக் கூத்து!

## ஜனநாயகப் போர்வையில் பதவியை தக்க வைக்க ஆட்சியாளர்கள் முயற்சி

இந்தோனேஷியாவில் மே 29 ஆம் திகதி தேர்தல் நடந்தது. அல்ஜீரியாவில் ஜூன் 5 ஆம் திகதி தேர்தல் நடந்தது.

இரண்டு தேர்தல் முடிவுகளும் எதிர்பார்க்கப்பட்டவைதான்.

இந்தோனேஷியாவில் ஜனாதிபதி சுஹார்ட்டோவின் கோல்கார் கட்சி (Golkar Party) 90 சதவீத வாக்குகளுக்கு மேல் பெற்று அமோக வெற்றி ஈட்டியுள்ளது. அதேபோன்று அல்ஜீரியாவில் 380 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி லியாமைன் செறோவலின் (Liamine Zeroual) தேசிய ஜனநாயகக் கூட்டணி 155 இடங்களையும் இதற்கு ஆதரவான தேசிய விடுதலை முன்னணி 64 இடங்களையும் கைப்பற்றின.

இந்த இரு நாடுகளிலும் நடைபெற்ற தேர்தல்களை பிரதான எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்திருந்தன; தேர்தலில் மோசடி இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டி வருகின்றன.

### இந்தோனேஷியாவில்

இந்தோனேஷியா நாட்டில் மேகவதி சுகர்ணபுத்ரி (Megawati Sukarno Putri) தலைமையிலான இந்தோனேஷிய ஜனநாயகக் கட்சி தேர்தலில் பங்குபற்றவில்லை.

இந்தோனேஷியாவின் முன்னாள் ஜனாதிபதியும், சுதந்திர இந்தோனேஷியாவின் தேசியத் தலைவருமான சுஹார்ட்டோவின் புத்ரியான மேகவதி சுகர்ணபுத்ரி அரசியலில் பங்குபற்ற இந்தோனேஷிய அரசாங்கம் தடைவிதித்துள்ளது. கட்சியின் தலைமைப் பதவியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று அல்ஜீரியாவில் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளின் கட்சியான FIS எனபடும் இஸ்லாமிய மீட்பு முன்னணி தேர்தலில் பங்குபற்றவில்லை. 1992 ஆம் ஆண்டு இந்தக் கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்டு இந்தக் கட்சியின் இரு தலைவர்களும் இன்னும் சிறையில் இருந்து வருகின்றனர். இந்தோனேஷியாவிலும், அல்ஜீரியாவிலும் நடைபெற்ற தேர்தல்கள் வெறும் கேலிக்கூத்து என்றே கருதப்படுகிறது. ஜனநாயகம் என்ற போர்வையில் தமது சர்வாதிகார ஆட்சியைத் திணிப்பதில் இந்தோனேஷிய ஜனாதிபதி சுஹார்ட்டோவும் அல்ஜீரிய இராணுவ ஆட்சியாளர் லியாமைன் செறோவலும் வெற்றி அடைந்துள்ளனர்.

அல்ஜீரியாவில் கடந்த ஐந்தரை ஆண்டுகாலமாக இடம்பெற்று வரும் அர்த்தமில்லாத கொலைகளோ

இந்தோனேஷியாவில் கடந்த சில ஆண்டுகளாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களோ இத்தேர்தல்கள் மூலம் முடிவுக்கு வரப் போவதில்லை.

இந்த இரு நாடுகளும் பெரும் அரசியல் நெருக்கடிகளை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### அல்ஜீரியாவில்

அல்ஜீரியாவில் 35 வருடங்களின் பின்னர் பல கட்சிகள் கலந்துகொண்ட தேர்தல் நடைபெற்றுள்ளது.

1992 ஆம் ஆண்டு தேர்தல்

**உலக உலா**
என்.பி.சீலன்

நடத்தப்பட்டு அதில் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளின் இஸ்லாமிய மீட்பு முன்னணி வெற்றி பெறும் தறுவாயில் இருந்த சமயம் இராணுவ ஆட்சியாளர்கள் தேர்தலை செல்லுபடியற்றதாக்கினர். இஸ்லாமிய மீட்பு முன்னணிக்கு தடைவிதிக்கப்பட்டு அதன் தலைவர்களான அப்பாஸ் மதானியும் (Abbas Madani), அலி பெல்ஹாட்ஜீம் (Ali Belhadj) சிறையில் அடைக்கப்பட்டனர்.

அல்ஜீரியாவில் பெரும் மதிப்பு மிக்க மதத் தலைவர்களாகக் கருதப்பட்டு வந்த இந்த இரு தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்ட நிலையிலேயே அல்ஜீரிய இராணுவ ஆட்சியாளர்கள் தேர்தலை நடத்தி அதில் அமோக வெற்றியும் ஈட்டி உள்ளனர்.

1979 ஆம் ஆண்டு ஈரானில் ஆயத்துல்லா கொமேனி தலைமையினான இஸ்லாமிய தீவிரவாதிகள் புரட்சி மூலம் சாதித்ததை 1992 இல் அல்ஜீரியாவில் இஸ்லாமிய தீவிரவாதிகள் தேர்தல் மூலம் சாதிக்க முற்பட்டிருந்தனர்.

ஈரானியப் புரட்சியின் போது மன்னர் ஷாவுக்கும் அவர்களது ஆட்சியாளர்களுக்கும் ஏற்பட்ட கதிதான் 1992 தேர்தலில் அல்ஜீரியாவில் இஸ்லாமிய தீவிரவாதிகள் பதவிக்கு வந்திருந்தால் இராணுவ ஆட்சியாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கும்.

மதசார்பற்ற ஜனநாயக முறையைப் பாதுகாப்பதற்காகவே 1992 தேர்தலை செல்லுபடியற்றதாக்கியதாக அல்ஜீரிய இராணுவ ஆட்சியாளர்கள் தற்போது நியாயம் கற்பிக்கின்றனர்.

ஆனால் அதனை இஸ்லாமிய மீட்பு முன்னணியோ அல்லது அல்ஜீரியாவில் உள்ள வேறு எந்த ஓர் இஸ்லாமிய தீவிரவாத அமைப்போ ஏற்கும் நிலையில் இல்லை.

### 60 ஆயிரம் பேர் பலி

அல்ஜீரியாவில், இராணுவ ஆட்சியாளர்களுக்கும், இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் இடையில் கடந்த ஐந்தரை வருடகாலமாக இடம்பெற்ற மோதல்களில் 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

சித்திரவதைகள், காணாமற்போதல், கொலைகள், குண்டுத்தாக்குதல்கள்பெரும் அளவில் இடம்பெற்றன.

வேறு எந்தநாட்டிலும் இல்லாதவாறு குடிமக்களே பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டனர். சில புறநகர்ப் பகுதிகளில் விவசாயிகள் குடும்பமாக அழிக்கப்பட்டனர். இந்தக் கொலைகளுக்கு இஸ்லாமிய தீவிரவாதிகள் இராணுவ ஆட்சியாளர்களையும் இராணுவ ஆட்சியாளர்கள் இஸ்லாமிய தீவிரவாதிகளையும் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இஸ்லாமிய தீவிரவாதிகளின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்படுத்துவதற்காக இராணுவமே இக்கொலைகளைச் செய்வதாகப் பெரும்பாலான அல்ஜீரிய மக்கள் கருதுகின்றனர்.

அல்ஜீரியத் தேர்தல், பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதை தேர்தல் நடந்து 2 நாள்களில் குண்டுத் தாக்குதல் மூலம் இஸ்லாமிய தீவிரவாதிகள் வெளிக்காட்டி விட்டனர்.

### அபிவிருத்தி பாதிப்பு

இந்த உள்நாட்டுக் குழப்பங்கள் இன்னும் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு உற்பத்தியைப் பாதிக்கவில்லை. ஆனால் அல்ஜீரியாவின் தொழிற்சாலைகளில் உற்பத்தி அரைவாசிக்குமேல் குறைந்துவிட்டது. வேலை இல்லாதோர் எண்ணிக்கை 28 சதவீதமாக உயர்ந்த விட்டது. வீடில்லாப் பிரச்சினை இருந்து வருகிறது. சரியான பொருளாதார — சமூகக் கொள்கை இன்றி அரசாங்கம் நாளை ஓட்டி வருகிறது.

### சுஹார்ட்டோவின் ஆட்சியில் முன்னேற்றம்

ஆனால் இந்தோனேஷியாவின் நிலைமை முற்றிலும் வேறானது.

சுஹார்ட்டோவின் ஆட்சியில் இன்று இந்தோனேஷியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

**மத்திய கிழக்கு நாடுகளில் அரபு தேசியவாதத்துக்கு — அதாவது இஸ்லாமிய தீவிரவாத எழுச்சிக்கு — வித்திட்டவர் முன்னாள் எகிப்திய ஜனாதிபதி காமல் அப்துல் நாஸர் ஆவர். 1953 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த நாஸர் சிரியாவுடன் எகிப்தை இணைத்து ஐக்கிய அரபுக் குடியரசை நிறுவினார். 1958 ஆம் ஆண்டு ஈராக்கில் இடம் பெற்ற ராணுவப்புரட்சியை அடுத்து ஈராக்கும் ஐக்கிய அரபுக்குடியரசில் இணைந்து கொண்டது. ஆனால் காலத்துக்குக் காலம் அந்த நாடுகளில் இடம் பெற்ற அரசியல் நிகழ்வுகளால் ஐக்கிய அரபுக் குடியரசு பலமிழந்து போனது. 1967இல் மத்திய கிழக்கு யுத்தத்தில் எகிப்து தோல்வி அடைந்து நாஸரின் வீழ்ச்சி ஆரம்பமானதுடன் அரபு தேசியவாதமும் வேகமும் குன்றியது. தற்பொழுது அரபு தேசிய வாதத்தின் பின்னணியில் இருந்து செயற்படும் நாடுகளில் லிபியாவே முன்னணி வகிக்கிறது.**

**தாய்லாந்து, பிலிப்பீன்ஸ் போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அரசியல் நிலைமையுடன் ஒப்பிடும் போது இந்தோனேஷிய அரசியல் நிலைமை வேறுபட்டது. இந்தோனேஷியாவில் மேகவதி சுகர்ண புத்ரியின் ஆதரவாளர்கள் றிக்ஷோ இழுப்பவர்கள், டாக்சி சாரதிகள், கூலியாட்கள் போன்ற சமுதாயத்தில் உள்ள அடிமட்ட மக்கள்தான். ஆனால் சுஹார்ட்டோவின் 30 வருட கால ஆட்சியில் இவர்களது வாழ்க்கைத் தரமும் எவ்வளவோ உயர்ந்து விட்டது. சுஹார்ட்டோ எதிர்ப்புக் கிளர்ச்சிகளை வெற்றிகரமாக முன் எடுத்துச் செல்வதில் மேகவதி சுகர்ண புத்ரிக்கு இருந்து வரும் பின்னடைவுகளுக்கு நாட்டின் அபிவிருத்தியும் ஒரு காரணம் ஆகும்.**

## திறந்த அரங்கு

**யாழ்.** மாவட்டப் பாடசாலை மாணவர்கள் திருகோணமலையில் நடைபெறும் மாகாணத் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றச் செல்வதற்கு இலவச கப்பல் போக்குவரத்து வசதி வழங்கப்பட்டுள்ளது. முந்நூறுக்கும் அதிக மாணவர்கள் நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றனர்.

கடந்த வாரம் இப்பத்தியில் நாம் கவலையோடு சுட்டிக்காட்டிய ஒரு விடயத்துக்கு விரைந்து — ஆக்கபூர்வமான—நடவடிக்கை எடுத்த யாழ். கல்விப் பணிப்பாளர்கள், அவர்களின் அதிகாரிகள், மாகாணக் கல்வி அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் இது விடயத்தில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

கப்பல் வசதி செய்து கொடுத்தது மட்டுமல்லாமல், யாழ். ரயில் நிலையம் வரை நேரில் சென்று மாணவர்களையும் ஆசிரியர்களையும் துறைமுகத்துக்குச் செல்வதற்கு பஸ் ஏற்றி விடுவது வரை பொறுப்பாகச் செயற்பட்ட கல்விப் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகளுக்கும் பாராட்டுக்கள்.

அடுத்த மாத முற்பகுதியில் அம்பாறையில் நடைபெறும் மாகாணப் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றச் செல்லும் பாடசாலை மெய்வல்லுநர்களுக்கும் கப்பல் வசதி மட்டுமல்லாமல் திருகோணமலையில் இருந்து அம்பாறைக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீண்டும் முனைப்பாகச் செயற்படுவார்கள் என நம்பலாம்.

★ ★ ★

குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக இயங்கிய அமைப்புக்களில் ஒன்று யாழ். ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கமாகும். அந்த நெருக்கடியான காலகட்டத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயாளருக்கு அது வழங்கி வந்த சேவை பாராட்டுக்குரியது. இச்சங்கம் இயங்குவதற்கென யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு வாசலில் தனியான கட்டடத் தொகுதி ஒன்றை பல ஆண்டுகளுக்கு முன்னரே யாழ். றோட்டறிக் கழகம் கட்டி அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் நோயாளர் நலன்புரிச் சங்கம் செயல் இழந்து விட, ''கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொண்ட கதை'' மாதிரி நோயாளர் நலன்புரிச் சங்கக் கட்டடத்தை ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவும் மரணவிசாரணைப் பிரிவும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டன.

செவ்வனே இயங்கும் நோயாளர் நலன்புரிச் சங்கமும் அதன் சேவையும் இப்போதைய ஊரடங்கு காலகட்டத்தில் மிக அவசியமானவை.

சம்பந்தப்பட்டோர் விலகி நின்று, சங்கம் மீண்டும் புத்துயிர் பெற்று சுயாதீனமாகச் செயற்பட அனுமதிப்பார்களா? அதற்கு வழி செய்வார்களா?

★ ★ ★

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் படையினாரால் தாக்கப்படுவது பற்றி இதே பத்தியில் இரு வாரங்களுக்கு முன்னர் பிரஸ்தாபித்திருந்தோம். மீண்டும் ஒரு சம்பவம்.

கடந்த ஞாயிறு பிற்பகல் 2.15 மணியளவில் அவசர அலுவலக வேலையாக பஸ் ஒன்றில் பஸ் சாரதி, நடத்துநர், டிக்கெட் பரிசோதகர், வ. பி. போ. சபையின் பொது முகாமையாளர் ஆகியோர் யாழ். பஸ் நிலையத்திலிருந்து கோண்டாவில் டிப்போவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

பலாலி வீதி — பல்கலைக்கழக வீதிச் சந்தி சோதனை நிலையத்தில் கடமையிலிருந்த படையினர் இந்த பஸ்ஸின் சாரதியை ''அவசரமா?'' என்று கேட்டு, கெட்ட வார்த்தைகளால் பேசித் தாக்கினர். இடையில் பேசச் சென்ற பொது முகாமையாளரும் தாக்கப்பட்டார்.

அதன்பின் அருகிலிருந்த கட்டடம் ஒன்றில் சுமார் இரண்டு மணிநேரம் மறித்து வைக்கப்பட்ட பின்னரே அவர்கள் மேலே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் படையினர் — பொதுமக்கள் உறவை மேம்படுத்த அக்கறையாக நிற்கும் 51 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல, யாழ். நகரக் கமாண்டர் பிரிகேடியர் காமினி ஜயசுந்தர ஆகியோருக்கு இத்தகவல் சமர்ப்பணம்.

★ ★ ★

யாழ். பல்கலைக்கழகத்துக்கு கடந்த ஆண்டும் இவ்வாண்டும் நூல்கள் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட ஒரு கோடி 68 லட்சம் ரூபா நிதி பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடப்பதாக திடுக்கிடும் தகவல் வெளியாகியிருக்கின்றது.

பல்கலைக்கழக நூலகப் பொறுப்பாளர்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், ஆசிரியர்களும் தமது துறைகளுக்குத் தேவையான நூல்களின் பட்டியலை இன்னும் வழங்காததே இந்நிலை ஏற்படக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப — வருடம் தோறும் 80 லட்சம் முதல் 90 லட்சம் ரூபா என்ற அடிப்படையில் — நூல் கொள்வனவுக்காக நிதி ஒதுக்கப்படுவது வழக்கம் என்றும்—

இந்த நிதியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாது என்றும்—

சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

இந்த நிதியை இவ்வருடம் பயன்படுத்தாவிட்டால் அடுத்த வருடம் நூல் கொள்வனவுக்கான நிதி ஒதுக்கப்படாத நிலையும் ஏற்படலாம் என்று அவ்வட்டாரங்கள் அபாய அறிவிப்புச் செய்துள்ளன.

மாணவர்களின், உயர் கல்வியின் அதிக அக்கறை தேவை. அடுத்த நூற்றாண்டை எதிர்கொள்ளப் போகும் எமது சமூகம், நவீன உலகின் மாற்றங்களை— கல்வியை— அறிவைப் பெறுவதற்கு புத்தகங்கள் பெரிதும் உதவுகின்றனவே! அவற்றின் அவசியத்தைப் பெரியோர்கள் புரிந்து கொள்ளவில்லையா? அல்லது அவை எமது மாணவர்களுக்குத் தேவையில்லை என்று கருதுகின்றார்களா?

- மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் தாக்குதல் நடவடிக்கை;

# கிழக்கில் தக்க வைக்கும் நடவடிக்கை

## இருவித இராணுவத் தந்திரோபாயங்கள்

"வீதியைச் செப்பனிட பயன்படுத்தப்படும் றோலர்களை 'ஸ்டார்ட்' செய்து விட்டால் அது இடையில் நிற்காமல் முன்னேறிச் செல்லும். பள்ளம், மேடு எதுவும் அதனை ஒன்றும் செய்யாது; தடுத்து நிறுத்தவும் முடியாது. அது போல புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் முன்னேறத் தொடங்கி விட்டன. எந்த இழப்பும், சமரும் அதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. தமது இலக்கை அடையும் வரை — புலிகளின் பலத்தை பூச்சியமாக்கும் வரை — படையினர் செயற்பாடுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும்."

— அண்மையில் உத்தியோகப்பற்றற்ற முறையில் உரையாடிய போது யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல இவ்வாறு மிகுந்த உறுதிபடக் கூறினார்.

இராணுவ வெற்றியில் படை அதிகாரிகளுக்கு இருக்கும் அதீத நம்பிக்கையை அவரது தெளிவான கருத்துக்கள் எடுத்துக்காட்டின.

### புலிகளின் கருத்து

"குடாநாட்டின் இழப்பு தற்காலிகமானதுதான். எங்கள் பரவலான தாக்குதல்களை இனிமேல்தான் நீங்கள் பார்க்கப் போகின்றீர்கள். குடாநாட்டில் எமது செயற்பாடு பகிரங்கமாக இல்லாவிட்டாலும் அதன் விளைவுகளை நீங்கள் உங்கள் பத்திரிகையில் தினசரி பிரசுரிக்கும் போது புரிந்து கொள்வீர்கள். வன்னியிலும் படையினருக்கு சரியான பாடம் புகட்டப்படும். கிழக்கில் எங்கள் கை ஓங்கி வருவது உங்களுக்குத் தெரியும். அரசுப் படைகள் வடக்கு — கிழக்கு இரண்டையும் இழந்து தவிக்கப்போகின்றன"

"யாழ்ப்பாணத்தில் தமக்குக் கிடைத்த வெற்றி தற்காலிகமானதுதான் என்பது படையினருக்கு விரைவில் உணர்த்தப்படும்." — இவ்வாறு அண்மையில் வலிகாமத்தில் மறைவிடம் ஒன்றில் பத்திரிகையாளனைச் சந்தித்த — புலிகளின் உள்ளூர் தலைவர் ஒருவர் — கூறினார்.

அடுத்த நாள் ஆனைக்கோட்டைப் பகுதியில் படையினருடன் நடந்த மோதலில் அந்தப் போராளி களப்பலியானார் என்றாலும், அவரின் திடமான பேச்சு விடுதலைப் புலிகள் போராளிகளின் உறுதிக்கும் நம்பிக்கைக்கும் ஓர் உதாரணமாக இருந்ததைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இரு தரப்புத் தொடர்புகளிலிருந்தும் ஒன்றைப் புரிந்து கொள்ள முடிந்தது.

யுத்தம் மேலும் மேலும் தீவிரமாகிக் கொண்டு போகின்றது. இரு தரப்பிலும் மட்டுமல்லாமல் பொதுமக்கள் தரப்பிலும் அழிவுகள் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கின்றன. ஆனால் போரிடும் வேகத்தில் எந்தத் தரப்பும் களைக்கவில்லை; சளைத்துவிடவுமில்லை. முன்னிலும்விட முனைப்புடன் — தீவிரத்துடன் — களத்தில் குதித்த வண்ணம் இருக்கின்றார்கள் என்பதுதான் அது.

புலிகளின் போராளி மூன்று விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

1. குடாநாட்டில் புலிகளின் செயற்பாடு அதிகரிக்கும்.

2. வன்னியில் படையினருக்குப் பாடம்புகட்டப்படும்.

3. கிழக்கில் புலிகளின் கை ஓங்கிவருகின்றது.

### குடாநாட்டு நிலைமை

இதில் குடாநாட்டில் புலிகளின் செயற்பாடு முதலாவது விடயம்.

யாழ். நகரிலும் அதை அண்டிய பகுதிகளிலும் உள்ள சந்திகளிலிருந்து வாபஸ் பெறப்பட்ட தமது காவல் நிலைகளை படையினர் மீண்டும் மும்முரமாக அமைத்து வருவதை கடந்த வாரத்திலிருந்து அவதானிக்க முடிந்தது.

யாழ். நகரப்பகுதியிலிருந்து வலிகாமம் வடக்கு, தெற்கு, மேற்குப் பகுதிகளுக்குச் செல்வதற்கு ஏதுவாக இருந்த பாதைகளில் ஒன்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் முற்பக்கத்தில் உள்ள ஆத்திசூடி வீதியாகும். அங்கிருந்த தடைநிலையத்தை சில காலங்களுக்கு முன்னர் வாபஸ்பெற்று, படையினரின் தொடர் அணைக்கு வெளியேயும், உள்ளேயும் கட்டுப்பாடின்றி மக்கள் சென்றுவர படையினர் அனுமதித்திருந்தனர். ஆனால் மீண்டும் அங்கு தடைநிலையம் செயற்படத்தொடங்கியுள்ளது.

சில வாரங்களாக குடாநாட்டில் தமது கெடுபிடி நடவடிக்கைகளைத்தவிர்த்து வந்தபடையினர், தற்போது மீண்டும் தமது நடவடிக்கைகளை இறுக்கத் தொடங்கியிருப்பதை நேரில் அவதானிக்க—உணர—முடிகின்றது.

குடாநாட்டில் தமது நடவடிக்கைகளைத் தீவிரமாக்க புலிகள் திட்டமிட்டிருப்பது பற்றிய உளவுத்தகவல் படையினருக்குக் கிடைத்திருப்பது இதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

இந்தவாரத்தில் குடாநாட்டில் புலிகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ள போதிலும் புலிகளைக் கட்டுப்படுத்துவதில் படையினரும் கணிசமான முன்னேற்றம் கண்டிருக்கின்றனர்.

இந்த வாரத்தில் பல்வேறு இடங்களிலும் நடந்த சண்டைகளில் கொல்லப்பட்ட பத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர்களின் சடலங்கள் ஆஸ்பத்திரிகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் புலிகளே என்று படைவட்டாரங்கள் கூறுகின்றன. அது உண்மையா, பொய்யா என்பதை இப்போது திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது. ஆங்காங்கே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களில் இருந்து சில நாள்கள் கழித்து கசியக்கூடிய உண்மைத் தகவலில் இருந்தே உண்மை, பொய்யைக் கண்டுபிடிக்கமுடியும்,

எனினும் இந்த வாரத்தில் வட்டுக்கோட்டை, சுழிபுரம், யாழ்ப்பாணம்—கன்னாதிட்டி, உரும்பிராய் போன்ற பகுதிகளில் புலிகளின் தாக்குதல்கள் அல்லது படையினர் — புலிகள் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

குடாநாட்டில் மீண்டும் தமது நடவடிக்கைகளை முளைவிடச் செய்வதில் புலிகள் முனைப்பாக இருப்பதும் —

அதை முளையிலேயே கிள்ளி எறியப் படைகள் திடமாக முயல்வதும் —

**சமர்க்களம்!**

குடாநாட்டில் பொதுமக்களால் உணரப்படக்கூடிய விடயங்களாக உள்ளன.

### வன்னி நிலைமை

அடுத்த விடயம் வன்னி நிலைமை பற்றியது.

போன வாரத்தில் தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதிகளில் 55 ஆவது படையணியின் கட்டளைத் தலைமையகத்தை ஊடுருவித் தாக்கியதன் மூலம் தாங்கள் வெறும் 'இழந்த சக்தி' அல்ல என்பதைப் புலிகள் உணர்த்தியிருக்கின்றனர்.

தாண்டிக்குளம் சமரில் (Battle) வெற்றி புலிகளுக்கு என்பது என்னவோ உண்மைதான். ஆனால் வன்னி யுத்தத்தில் (War) புலிகளின் நிலைமை என்னவென்பது அடுத்து வரும் வாரங்களில் அல்லது மாதங்களில்தான் தெரிய வரும்.

குடாநாட்டு யுத்தத்தில் தமது வலுவை நிரூபித்த அரச படைகள், வன்னியிலும் புலிகளின் நிலைகளை நோக்கி முன்னேறும் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

நில விஸ்தீரணத்தில் குடாநாட்டைப் போல் எட்டு, ஒன்பது மடங்கு பெரியது வன்னி நிலப்பரப்பு. அங்கு படையினரின் கைப்பற்றும் உத்தி பலிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கலாம்.

### கிழக்கு நிலைமை

மூன்றாவது விடயம் கிழக்கு நிலைமை.

கிழக்கில் புலிகளின் கை ஓங்கி வருவது அப்பட்டமாகத் தெரிகின்றது. அங்கு பல முனைகளிலும் தாக்குதல்களை நடத்தி படையினருக்குப் பெரும் நெருக்கடி கொடுத்து வருகின்றார்கள் புலிகள்.

இந்த வாரத்தில் மட்டும் அங்கு அறுபதுக்கும் அதிக படையினர் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்திருக்கிறார்கள்.

கிழக்கு சூடான களமாக (Hot bed) மாறிவருகின்றது. கிழக்கு தமது கட்டுப்பாட்டிலிருந்து போய்விடாமல் இருக்க தீவிர நடவடிக்கைகள் சிலவற்றை உடன் எடுக்க வேண்டும் என்பதை படை உயர்வட்டாரங்கள் உணர்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

வன்னியிலும் கிழக்கிலும் ஒரே நேரத்தில் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துவது படையினருக்குக் கஷ்டமான காரியமாகத்தான் இருக்கப் போகின்றது.

**-பாசுபதன்-**

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளுக்குள் ஊடுருவி, முன்னேறி தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

கிழக்கில் புலிகள் ஊடுருவுவதை முறியடித்து, அவர்களின் தாக்குதல்களை எதிர்கொண்டு சமாளிக்கக் கூடிய ஆயத்தங்களைச் செய்து, தமது பிரதேசத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது வன்னியில் தாக்குதல் நடவடிக்கை. கிழக்கில் தக்கவைக்கும் நடவடிக்கை.

வன்னியிலும் கிழக்கிலும் இரண்டு முரண்பட்ட இராணுவ தந்திரோபாயங்களை வகுத்து படையினர் செயற்படவேண்டியிருக்கும்.

★ ★ ★

'யுத்தம் என்று ஒன்று வந்து விட்டால் முதலில் அதற்கு இரையாவது உண்மை' என்றார் ஓர் அறிஞர்.

இலங்கை யுத்தத்திலும் அதுதான் நிலைமை.

புலிகளின் தாக்குதல்கள் குறித்து அவ்வப்போது தகவல் வெளியிடும் அரச மற்றும் கொழும்பு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள், படையினரின் பதில் தாக்குதலில் பல நூற்றுக் கணக்கில் புலிகள் இறந்துள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர் என்பதை அவர்களின் தொலைத் தொடர்புச் செய்திகளை வழிமறித்து ஒற்றுக் கேட்டதில் படையினருக்குத் தெரியவந்ததாக அறிவிப்பது இப்போது வாடிக்கையாகியுள்ளது.

இவ்வாறு ஒரே சாரப்பட —ஒரு தலைப் பட்சமாக— செய்திகளை வெளியிட்டு உண்மை நிலை குறித்து மக்களுக்கு தவறான தகவல்களை முன்வைக்கும் போக்கை கண்டித்து முன்னாள் விமானப்படை அதிகாரியான விங் கமாண்டர் ஒருவர் ஆங்கிலக் கட்டுரை ஒன்றை வரைந்திருக்கின்றார்.

ஜானகபுரவில் தாக்குதல் நடத்த வந்த புலிகளுக்கு கடும் பதிலடி கொடுக்கப்பட்டபோது, வரிசை வரிசையாக புலிகளின் சடலங்களைப் போட்டு, படம் பிடித்து புலிகளின் இழப்புக்களைப் படம் மூலம் காட்டிய அரச தரப்பு, இப்போதெல்லாம் புலிகளின் இழப்பை ஆதாரப்படுத்த புலிகளின் தொலைத் தொடர்பை ஒற்றுக்கேட்கும் முறையை மட்டும் நாடுவது ஏன்?— என்ற சாரப்பட அவர் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

புலிகளுக்கு ஏற்படும் இழப்புக் குறித்து புலிகளின் தொலைத் தொடர்பை ஆதாரம் காட்டி அண்மைக் காலத்தில் அரசுத் தரப்பில் வெளியிடப்பட்ட எண்ணிக்கைகள் உண்மையாக இருக்குமானால் இவ்வளவுக்கும் புலிகள் அமைப்பு ஒரு படையாகச் செயற்பட முடியாத நிலைக்குக் குன்றிப் போயிருக்க வேண்டும், ஆனால் நிஜத்தில் நடப்பது என்ன?

### கன்னாதிட்டி சம்பவம்

யாழ். கன்னாதிட்டிப் பகுதியில் — பெருமாள் கோயிலுக்கு அண்மையாக கடந்த சனியன்று படையினர் சென்ற டிரக் ஒன்றில் கிரனேட் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் சில படையினர் காயமுற்றனர்.

படையினர் வைத்திருந்த கிரனேட்டே வெடித்ததாக மக்கள் மத்தியில் பேசப்பட்டாலும் அது கிரனேட் வீச்சுச் சம்பவம் என்றே பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன. அந்த அறிவிப்பு உண்மை என்று தெரிகிறது.

இந்த கிரனேட் வீச்சை அடுத்து இடம் பெற்ற துப்பாக்கிச் சமரில் சிக்கி அப்பாவிப் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார் என்பதை குடாநாட்டு மக்கள் நன்றாக அறிவர்.

யாழ். அன்னசத்திர ஒழுங்கையைச் சேர்ந்த — நான்கு பிள்ளைகளின் தந்தையான— யாழ். நகரச் சந்தையில் பழ வியாபாரம் செய்கின்ற— ஓர் அப்பாவிப் பொதுமகனே அப்பகுதியில் சூட்டுக்கு இரையானார்.

ஆனால் இந்தச் சம்பவம் குறித்து திங்களன்று தகவல் வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சு, "யாழ். நகரில் இடம்பெற்ற கிரனேட்வீச்சை அடுத்து பயங்கரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்று தெரிவித்ததாக ரூபவாஹினி அறிவித்தது.

இறந்தவர் அப்பாவித் தமிழர் என்பது ஊரறிந்த உண்மை. இத்தகைய உண்மைகளை குழிதோண்டிப் புதைக்கும் விதத்தில் — பிரசார நோக்கத்துக்காக — சில விடயங்களை பாதுகாப்பு வட்டாரங்கள் மறைக்க முயல்வதால், சில சமயங்களில் இது போன்று பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிடும் உண்மைத் தகவல்களையும் மக்கள் நம்ப மறுக்கும் நிலையே ஏற்படுகின்றது.

கடந்த செவ்வாயன்று மூளாய்—வட்டுக்கோட்டைப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்பின் போது இடம்பெற்ற மோதலில் நான்கு புலிகள் உயிரிழந்தனர் என்பதை ஊர்ஜிதப்படுத்த முடிந்தது. ஆனால் உயிரிழந்த நால்வரும் புலிகள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிடும் போது 'இதுவும் கன்னாதிட்டிச் சம்பவம் போன்ற புரளியோ? உயிரிழந்தவர்கள் அப்பாவிப் பொதுமக்களோ?' —என்ற ஐயம் மக்கள் மத்தியில் எழுந்ததை உணர முடிந்தது.

மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் கீழ் மட்டத்தினரால் முன்வைக்கப்படும் — இத்தகைய திரிக்கப்பட்ட — தகவல்கள் குறித்து படை உயர்வட்டாரங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அப்போது தான் படையினர் தரப்பு அறிவிப்புகளில் மக்களுக்கு நம்பிக்கை வரும்.

★

### இந்தோனேஷிய...

*(3 ஆம் பக்கத்தொடர்ச்சி)*

எவ்வளவோ முன்னேறி விட்டது.

1965 ஆம் ஆண்டு சுஹார்ணோவைக் கவிழ்த்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றி சுஹார்ட்டோ, பதவிக்கு வந்ததும் நெடுஞ்சாலைகள் அமைப்பதிலும், கல்வி அபிவிருத்தியிலும், நவீன தொலைத்தொடர்பு சாதனங்களை அறிமுகம் செய்வதிலும் வெற்றி கண்டார்.

கடந்த 25 வருட காலத்தில் நாட்டின் வருமானம் உயர்ந்துள்ளது.

ஆனால் பேர்டினன்ட் மார்க்கோஸ் போன்று தமது குடும்பத்தவர்களுக்கும் குடும்பநண்பர்களுக்கும் அரச சலுகைகள் வழங்குகிறார் என சுஹார்ட்டோ மீது பொதுவாகக் குற்றஞ் சாட்டப்பட்டு வருகிறது. 1986 ஆம் ஆண்டு பிலிப்பீன்ஸில் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் போது, பேர்டினன்ட் மார்க்கோஸ் பதவி இழந்து நாட்டை விட்டு வெளியேறி இருந்தார்.

இந்தோனேஷியாவிலோ அல்லது அல்ஜீரியாவிலோ தேர்தல்களில் மோசடி செய்து ஆட்சியாளர்கள் தமது பதவிகளைத் தக்க வைத்தாலும் மக்கள் எதிர்ப்பு இருந்தால் மக்கள் எழுச்சிக்கு முன் அவர்களால் நின்றிருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சிகள்

ஆச்சுவேலி, ஜூன் 21

வட்டுக்கோட்டை இணைந்த தொலைக் கல்வி நிலைய போதனாசிரியர்களுக்கான சேவைநலம் பாராட்டு விழா இன்று மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி ஆர். இருதய நாதன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-11)

* * *

யாழ். மாநகர சபைப் பகுதிக்கு உட்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ''மீளாக்க நலவியல்'' சம்பந்தமான இரு நாள் செயலமர்வு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உதவியுடன் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் நடத்தும் இச்செயலமர்வில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்களை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் உள்ள அடிப்படை நகர்ப்புறச் சேவைகள் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

* * *

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடத்தும் முன்பள்ளி (பாலர் பள்ளி) கற்கை நெறியை நெறிப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுண்டுக்குளியிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை மண்டபத்தில் முன்பள்ளி பாடவிதான குழுத் தலைவரும், யுனெஸ்கோ இணைப்பாளருமான கோ. சி. வேலாயுதம் தலைமையில் நடைபெறும். (ஐ-135)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்ட அமைச்சூர் மெய்வன்மைச் சங்கம் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தோருக்காக ஏற்பாடு செய்துள்ள மெய்வன்மைச் சட்ட விதிகள் தொடர்பான பயிற்சி வகுப்புகள் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இதேவேளை — மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்காக ஸ்ரீ லங்கா அமைச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்த உத்தேசித்துள்ள பரீட்சை யாழ்ப்பாணம், அனுராதபுரம், கொழும்பு ஆகிய இடங்களில் அடுத்த மாதம் 20 ஆம் திகதி நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

* * *

''கல்வியின் விளைவு ஒழுக்கம்'' என்ற தலைப்பில் வட பிராந்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழு யாழ். மாவட்டத்தில் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும், பாராட்டு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ஐ-4)

* * *

யாழ். கொக்குவில் ஞானக் குழந்தை இல்லம் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8-30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் எஸ். அழகுரட்ணம் தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டு விழாவில் சென் ஜோன் அம்புலன்ஸ்படை பிரதேச ஆணையாளர் க. அருந்தவராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

## சிறிமானி கட்சி விலகும்?

கொழும்பு, ஜூன் 21

இம் மாதம் 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது சிறிமானி அத்துலத்முதலி அமைச்சரவையில் இருந்து விலக்கப்பட்டார்.

இதனால் அதிருப்தியடைந்துள்ள அவரது கட்சி பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசிலிருந்து இன்னும் ஒரு சில தினங்களில் வெளியேறும் என கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

## சூழல் பாதுகாப்பு குழுக்கள்

திருநெல்வேலி, ஜூன் 21

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற பிரிவு ரீதியாக சூழல் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை ஒன்பது உள்ளூராட்சி மன்ற பிரிவுகளில் இக் குழுக்கள் அமைக்கப்பட்டு இவ் வருடத்திற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. இருஷ்ணசாமி தெரிவித்தார். (ஐ-135)

## சமய சந்நிதிகளில்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆயர் அதி வந் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப ஆசீரும் இடம் பெறும்.

அந்தோனியார் பெருவிழாவை ஒட்டி இன்று சனிக் கிழமை காலை முதல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை வரை விசேட பஸ் சேவை யாழ். பஸ் நிலையத்திலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 7 வருடங்களின் பின் மேற்படி தேவாலய பெருவிழா இம்முறை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ஐ - 4)

★ ★ ★

கொக்குவில் - நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் இறுதி நாளான இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பூங்காவனத் திருவிழா நடைபெறும். (ஐ - 4)

★ ★ ★

உரும்பிராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவ நிறைவாக இன்று சனிக்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும். (ஐ - 154)

★ ★ ★

நல்லூர் சிவன் கோயில் வருடாந்த கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை அதிகாலை 6 மணி முதல் 108 கலச சங்காபிஷேகமும் தொடர்ந்து மணவாளக் கோலத் திருவிழாவும் நடைபெறும். (ஐ-30)

### நாளை

ஆனி 8

ஞாயிற்றுக்கிழமை

திதி: துதியை

முன்இரவு 10.09 வரை:

நட்சத்திரம்: பூராடம்

பிற்பகல் 2.06 வரை:

சுபநேரம்: 8.54-10.24

ராகுகாலம்: 4.24-5.54

(பகலுக்குரிய வழமையான பழைய நேரப்படி)

## தாக்குதல்

ஏறாவூரில் கடந்த புதனன்று பிற்பகல் 1-30 மணியளவில் காவல் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஒரு றிசேவ் பொலீஸார் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (இ 4)

## துர்நாற்றம் வீசும் சடலம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

மீசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் — சுமார் 35 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத ஒருவரின் சடலம் — பழுதடைந்து துர்நாற்றம் வீசிய நிலையில் சாவகச்சேரிப் பொலீஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

மீசாலையில் இடம்பெற்ற இராணுவ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இவர் இறந்திருக்கலாம் எனப் பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டது. சடலம் இனம் காணும் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-15)

## மீனவர்கள் அச்சம்

கடந்த சில நாள்களாக மண்டைதீவுப் பகுதியில் இருந்து பகல்வேளையில் குடாக்கடல் பகுதி நோக்கி அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவதால் இப் பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடந்த செவ்வாயன்று குருநகர் மீனவர் ஒருவர் காயமடைந்தார். (ஐ-51)

## விசேட அ. அட்டை வழங்கல்

இருபாலை தெற்கு ஜே — 257, இருபாலை கிழக்கு ஜே — 258, கல்வியங்காடு ஜே — 259 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை கட்டப்பிராய் வட்டக்குளத்தடியில் வைத்து வழங்கப்பட விருப்பதாக கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

★ ★ ★

குப்பிளான் வடக்கு (ஜே-211), குப்பிளான் தெற்கு (ஜே-210) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிமுதல் புன்னாலைக் கட்டுவன் சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பண்டிதமணி பிறந்ததின வைபவம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 98 ஆவது பிறந்த தின வைபவம் இம் மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் திருநெல்வேலியில் அமைந்துள்ள பலாலி ஆசிரிய கலாசாலையில் இடம் பெறும்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தலைமை வகிப்பார்.

பண்டிதமணி அவர்களின் ஆசிரியப்பணி, இலக்கியப் பணி, சமயப்பணி குறித்து அறிஞர்கள் பலரும் உரையாற்றுவர். (அ)

## உரும்பராய் கண்ணியில் சிப்பாய் உயிரிழப்பு!

உரும்பராய் பலாலி வீதியில் நேற்று முன்தினம் மாலை படையினரின் டிரக் ஒன்று கண்ணிவெடியில் சிக்கிய சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் பலியானார். இரண்டு சிப்பாய் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் டிரக்கின் பின்பகுதி இரண்டாகப் பிளந்தது.

கண்ணிவெடியை அடுத்து அப்பகுதியில் நின்ற படையினர் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். எனினும் பொதுமக்களுக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. (உ-4-154)

## கற்பழித்துக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது

மட்டக்களப்பு, ஜூன் 21

அம்பாறை சென்ரல் முகாம் பகுதியில் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் 35 வயது குடும்பப் பெண்ணின் சடலம் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் நியமிக்கப்பட்ட உதவிப் பொலீஸ் அதிகாரி எம்.கே. சதியன் தலைமையில் அமைக்கப்பட்ட விசேட பொலீஸ் குழுவின் விசாரணை அறிக்கையை அடுத்தே அப்பெண்ணின் சடலம் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டது.

கல்முனை மாவட்ட நீதிவான் அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்ட இச்சடலம் கொழும்புக்கு உடன் அனுப்பப்பட்டது.

குடும்பப் பெண்ணான முருகேசபிள்ளை கோணேஸ்வரி (வயது 35) என்பவர் நள்ளிரவில் பொலீஸாரால் கற்பழிக்கப்பட்டுள்ளதாகவும் — பின்னர் அவரது பெண் உறுப்பில் கிரனேட் வைத்து வெடிக்க வைக்கப்பட்டு அவர் கொலை செய்யப்பட்டதாகவும் —

மட்டக்களப்பு மாவட்ட எம். பியான ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியிடம் முறையிட்டதையடுத்து விசேட பொலீஸ் குழுவின் விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார். (உ-21-3)

## ரெலோ உறுப்பினர் காயம்

கொழும்பு, ஜூன் 21

மட்டக்களப்பு மாவட்டம், செங்கலடியில் ரெலோ உறுப்பினர் ஒருவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது.

இத்தாக்குதலை புலிகளே நடத்தியதாகவும் ரெலோ உறுப்பினரும் மூன்று வயதுக் குழந்தையும் இதில் காயமடைந்ததாகவும் அது மேலும் தெரிவித்தது. (இ-5)

## தண்ணீர் தொட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மூன்று முன்பள்ளி மாணவர்களின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு 'யுனிசெவ்' நிறுவனத்தால் கடந்த வாரம் 400 கலன் கொள்ளளவு உடைய மூன்று தண்ணீர்த் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)


UNICEF

DRIVER REQUIRED BY UNICEF

Must have good experience and be well presented. Must speak English and Sinhala Fluently. Apply in writing with Bio-data and references to:

Mrs Penny Brune,
UNICEF, 286, Navalar Rd,
Jaffna.

CLOSING DATE: 27 - 06 - 97

(47926)


## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபை செல்லம்மா

அளவெட்டி அலுக்கையைச் சேர்ந்த திருமதி கனகசபை செல்லம்மா கோலாலம்பூர், மலேசியாவில் 18 - 06 - 97 அன்று காலமானார்.

அன்னார் கோலாலம்பூர் கனகசபையின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற அளவெட்டி கும்பிளாவளை நல்லதம்பி - தெய்வானை தம்பதிகளின் மகளும், காலஞ் சென்ற அலுக்கை சின்னப்பு தம்பதியினரின் மருமகளும், பராசக்தி, ஞானசக்தி, சச்சிதானந்தன், யோகன், சோதி, செல்வி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ் சென்ற இளைப்பாறிய ஆசிரியர் வல்லிபுரம், தங்கம்மா, இளைப்பாறிய ஆசிரியர் நடராசா ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்ற இளையபிள்ளை (வள்ளியம்மை), மற்றும் பொன்னம்மா, காலஞ்சென்ற நடராசா (உருத்திரபுரம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 - 06 - 97 அன்று கோலாலம்பூரில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. நடராசா.
(சகோதரன்)

கும்பிளாவளை,
அளவெட்டி.

(47917)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புல்மோட்டைத் தாக்குதலில் அறுவரை புலிகள் இழந்தனர்

வவுனியா, ஜூன் 21

கடந்த புதனன்று புல்மோட்டையில் தாம் மேற்கொண்ட தாக்குதலில் புலிகளின் தரப்பில் லெப். கேணல் மாதவன், கப்டன் முக்கண்ணன், லெப். இளங்கொட்டுவன், லெப். திவாகரன், 2 ஆம் லெப். சுந்தரம், 2 ஆம் லெப். ஞானகுமரன் ஆகியோர் களப்பலியாகினர் என 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

இத்தாக்குதலின் போது பின்வரும் ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

★ ஏ.கே.எல்.எம்.ஜி — 4
★ ரி.81 ரகதுப்பாக்கி — 8
★ ரி.56/2 துப்பாக்கி — 3
★ ரி.56/1 துப்பாக்கி — 4
★ ரி.56 பட்மொடல் — 3
★ தொலைத்தொடர்பு சாதனம் — 3
★ நடுத்தர ரவைகள் — 550
★ நடுத்தர ரவை இணைப்புகள் — 603
★ கைக்குண்டுகள் — 7
★ சப்பாத்துகள் — 10 சோடி
★ மற்றும் பெருந்தொகையான ரவைகள்.

(இ-10-164)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்]

சேர்ந்த — 600க்கும் அதிகமான மாணவர்கள் இரண்டாம் எம். பி. பி. எஸ். பரீட்சைக்கு அப்பால் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர். அவர்களுக்கு போதனை நடத்துவதற்கு தகுதியான விரிவுரையாளர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதால் அவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாது உள்ளது.

மருத்துவபீடத்தில் உள்ள 11 துறைகளில் பெரும்பாலானவற்றில் போதிய பேராசிரியர்களோ, விரிவுரையாளர்களோ இல்லை.

இந்நிலையில் புதிய மாணவர் அணியை அனுமதித்து என்ன செய்வது? — என்ற கேள்வி மருத்துவபீடப் பேரவையில் எழுப்பப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு நடந்த ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றி மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெறத் தகுதியுடையவர்களுக்கு ஒக்ரோபர் மாதம் விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அணியைச் சேர்த்துக் கொள்வதை இடைநிறுத்துவது என யாழ். பல்கலைக்கழகம் முடிவு செய்தால் இந்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு மேலும் சில காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். (உ-3)

## ஸ்ரீமா...

(முதலாம் பக்கத் தொடர்)

சுக்கு ஆதரவு வழங்கிவந்தது:

ஆனால் ஸ்ரீமாவோ சீனா சென்றிருந்த சமயம் — அந்த வேளையைப் பயன்படுத்தி — அமைச்சரவையை மாற்றி — தன்னை அமைச்சரவையில் இருந்து ஜனாதிபதி நீக்கிவிட்டார் என சிறிமாணி கருதுகின்றாராம்.

''பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவியுடன் கண்ட உடன்பாட்டின்படியே நாம் அரசுடன் இணைந்தோம். எனவே அமைச்சரவை மற்றும் அரசில் இடம் பெறுவதா அல்லது வெளியேறுவதா என்ற விவகாரத்தை அதன் தலைவியுடன்தான் நாம் பேசித் தீர்மானிக்க வேண்டும். ஜனாதிபதியுடன் அல்ல'' — என்று சிறிமாணி அணியினர் கருதுகின்றனராம்.

சீனா சென்றிருந்த பிரதமர் தற்போது நாடு திரும்பியிருக்கின்றார். (உ-21-3)

## தென்மராட்சிப்...

(முதலாம் பக்கத் தொடர்)

செயலக வட்டாரங்கள் தெரிவித்தன:

குடாநாட்டில் காணாமற்போனவர்கள் தொடர்பாக யாழ். அரச அதிபர் வழங்கிய பட்டியலில் உள்ள 636 பேரையும் இக்குழு விசாரணைக்கு அழைத்து விசாரணை நடத்திய பின்பேகுழுவின் அறிக்கை உத்தியோக பூர்வமாக வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்குழு இதுவரை 400 பேரை விசாரணைக்கு அழைத்திருந்தது. (அ-3)

## பொசன் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 21

பொசன் தின வைபவத்தை நேற்று யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும், பொலீஸாரும், மிக அமைதியாகக் கொண்டாடினர்.

யாழ். ஆரியகுளம் சந்தியில் உள்ள நாக விகாரைப் பகுதியில் பல அலங்கார வேலைகள் செய்யப்பட்டிருந்தன.

சில இராணுவ சோதனை நிலைகளில் மக்களுக்கு குளிர்பானங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பொலீஸார் முயற்சியின் யாழ். ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்திருந்த நோயாளர், பார்வையாளர்களுக்கும் பால் சோற்று பார்சல்களும், குளிர்பானங்களும் வழங்கப்பட்டன. (உ-15)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்)

எவ். எவ், ரெலோ, ஈரோஸ், இ. தொ. கா., மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒரே குரலில் குரல் கொடுக்கவும் —

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டத்தை விரைவாக நடைமுறைக்குக் கொண்டு வருமாறு வற்புறுத்தவும்—

இக்கட்சிகள் இணைந்து செயற்படுவது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ-21-3)

## அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

பதியிடம் தெரிவித்தனர்.

அதற்குப் பதில் அளித்த ஜனாதிபதி —

''பிரிட்டிஷ் அரசின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் நேரடியாக இலங்கை வந்து பேசியதால் தான் ரணில் விக்கிரமசிங்க உடன்பட்டார்.

'' அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. ஆனால் ஐ. தே. க. அதற்கு ஆதரவு தரப்போவதில்லை. மாற்றுவழித் திட்டம் எம்மிடம் உள்ளது'' — என்றார்.

யாழ். மாவட்டத்தில் மனித உரிமை மீறல், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் ஆகியன தொடர்பாகவும் ஜனாதிபதியிடம் எம். பிக்கள் இருவரும் எடுத்துக் கூறியதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தாங்கள் அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபடப்போவதாகவும் அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனராம்.

அதற்கு ஏற்பாடு செய்து தருவதாக ஜனாதிபதி உறுதி அளித்தார் என்று அந்த எம். பிக்கள் தெரிவித்தனர்.

(உ-21-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 261 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-06-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## மீனவர் கடத்தல்

கொழும்பு, ஜூன் 21

திருகோணமலை சம்பூரில் விடுதலைப் புலிகள் 6 மீனவர்களையும் அவர்களின் மீன்பிடி வள்ளங்களையும் கடத்திச் சென்றுள்ளனர் என்று இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. (உ-3)

## முத்திரைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்டத்திலுள்ள தபாலகங்களுக்கென 6 லட்சத்து 85 ஆயிரத்து 840 ரூபா பெறுமதியான முத்திரை வகைகள் நேற்று முன்தினம் எடுத்துவரப்பட்டுள்ளன.

வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர்நாயகம் சு. மாணிக்கவாசகர் இம்முத்திரைகளை நேற்று கொழும்பிலிருந்து தம்முடன் எடுத்து வந்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் கப்பலிலும், விமானத்திலும் எடுத்து வரப்பட்ட 42 தபாற் பொதிகள் யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. (இ-4)

## பிரதி அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்)

அக் கட்சியின் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப் பகிஷ்கரித்திருக்கின்றார்.

கடந்த புதனன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் போகாமல் அமைச்சர் அஷ்ரப் பகிஷ்கரித்தார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும் —

அன்றைய தினம் இரவு 9 மணிமுதல் நள்ளிரவு வரை ஜனாதிபதி சந்திரிகா அமைச்சர் அஷ்ரப்பை அழைத்து தனியே பேச்சு நடத்தினார்.

அதேவேளை—

மறு அறிவித்தல் வரும் வரை அரச கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது உறுப்பினர்களுக்கு உத்தியோகப்பற்றற்ற தடை ஒன்றை விதித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்—

அமைச்சரவை மாற்றத்தால் அதிருப்தியுற்றுள்ள அஷ்ரப், அமைச்சர் என்ற முறையில் தனக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோக பூர்வ இல்லத்தைக் கைவிட்டு நாரஹென்பிட்டியவில் உள்ள —தனக்குச் சொந்தமான மாடி வீட்டுக்குக் குடிபெயர்ந்தார்.

ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடித்த இத்தகைய தீவிரப் போக்கை அடுத்து —அக்கட்சியின் கோரிக்கையை ஏற்று—பிரதி அமைச்சர்களின் பொறுப்புக்களை மாற்றியமைக்க ஜனாதிபதி இணங்கினார் என்று கூறப்படுகின்றது.

அதன்படி—

கடந்த 9ஆம் திகதி அமைச்சரவை மாற்றத்தின் போது விஞ்ஞான, தொழில் நுட்ப பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா திங்களன்று மீண்டும் தனது பழைய பதவியான தபால், தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் பதவிக்கு மாற்றப் படுவார்.

9ஆம் திகதி மாற்றத்தின் போது சமூகசேவைகள் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்ட மற்றொரு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான எஸ். எஸ். எம். அபூபக்கரும் மீண்டும் தமது பழைய பதவியான விஞ்ஞான, தொழில் நுட்ப பிரதி அமைச்சராகப் பதவியேற்பார்.

அமைச்சரவை மாற்றத்தின்போது தபால், தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் பதவியை ஏற்ற அனுரா பிரியதர்ஷன யாப்பா சமூக சேவைகள் பிரதி அமைச்சர் பதவிக்கு மாற்றப்படுவார்.

(உ-3-10)

# வவுனியா நகரில் பாதுகாப்பு தீவிரம்

வவுனியா நகரின் பாதுகாப்பு கடந்த சில நாள்களாக பலப்படுத்தப்பட்டுள்ளது.

தாண்டிக்குளம் முன்னணி காவலரண்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நகரப் பகுதியில் ஆண், பெண் பொலீஸார் மற்றும் இராணுவத்தினர் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளனர்,

வாகனப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுவதுடன், ரோந்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதே நேம்ர —

நேற்றும், நேற்றுமுன்தினமும் இரவு வேளைகளில் நகரை அண்டிய பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. (உ-164-3)

# குண்டு வெடிப்பில் காயமுற்ற ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் மரணம்

வவுனியா நகரில் கடந்த திங்களன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் படுகாயமடைந்து முதலில் வவுனியா ஆஸ்பத்திரியிலும் பின்னர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் கனகேஸ்வரன் நேற்று முன்தினம் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில்உயிரிழந்தார்.

இக்குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்தது.

ஈ. பி. ஆர். எல். எவ். வினால் நேற்று முன்தினம் வவுனியாவில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தியாகிகள் தின நிகழ்ச்சிகள் இவரின் மரணம் காரணமாக ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

(உ-3-164)

# 3 தமிழ்க் கட்சிகளுடன் அரசுத் தரப்பு பேச்சு

## ஆதரவைத் தொடர இணக்கம்

கொழும்பு, ஜூன் 21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு தமிழ்க்கட்சிகள் வழங்கி வரும் ஆதரவு தொடர்ந்தும் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், அரச உயர்மட்டம் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ. பி. டி. பி., புளொட் ஆகிய தமிழ்க்கட்சிகளுடன் அரச உயர் மட்டத்தலைவர்கள் பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தியதாகவும் —

அதனை அடுத்து அக்கட்சிகள் அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக அத்தலைவர்கள் நம்புவதாகவும் —

கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-21)

# தாண்டிக்குளம் தாக்குதலில் மேலும் ஆறு புலிகள் களப்பலி

கடந்த 10ஆம் திகதி தாண்டிக்குளம் மற்றும் நொச்சி மோட்டைப் பகுதிகள் மீது மேற்கொண்ட பாரிய தாக்குதலின் போது தமது தரப்பில் 80 போராளிகளை இழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர்.

அத்தாக்குதலின் போது ஏற்பட்ட காயம் காரணமாக மேலும் 6 போராளிகள் களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது. (இ-10)

# கூரேயை தொடர்ந்து மூவர் கைதாகினர்!

## இருவர் பாதாள உலகக் கிரிமினல்கள்

கொழும்பு, ஜூன் 21

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதன் தொடர்ச்சியாக பாதாள உலக கிறிமினல் அமைப்பைச் சேர்ந்த இருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுவரை கைது செய்யப்பட்டவர்களில் பாதாள உலக கிறிமினல் அமைப்பைச் சேர்ந்த தட்டசோமா, சுதுமாத்தய ஆகியோரும் அடங்குகின்றனர். இவர்களில் தட்டசோமா''மல்வத்த சோமா'', ''காட்சோமா'' என்றும் அழைக்கப்பட்டு வருபவர்.

ஏற்கனவே மேல்மாகாண சபை உறுப்பினரும், சமாதான நீதிவானுமாகிய யூ. எல். செனவிரத்தின கைதாகியிருந்தார். (உ-21-3)

## நெடுங்கேணி நிலைகளிலிருந்து ஷெல் தாக்கு!

வவுனியா, ஜூன் 21

நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுக்காலை 6 மணிமுதல் புளியங்குளத்தை நோக்கி சரமாரியாக ஷெல்களை ஏவினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் தண்ணீறூற்று பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் காயம் அடைந்தார்; கால்நடைகள் இறந்தன. (உ-164-3)

## ஆங்கில தின விழா

திருநெல்வேலி, ஜூன் 21

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆங்கில தின விழா எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறை தலைவர் ஜி. எஸ். சிவகுருநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வித்திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலம்) ஏ. டி. அருமை நாயகமும் கலந்து கொள்வர்.

(ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை

21 - 06 - 1997 சனிக்கிழமை

சாரங்கா நகை மாடம்
177|4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
நம்பிக்கை, நாணயம்,
உத்தரவாதத்துடன் 22கரட்
தங்க நகைகளைப் பெற்றிட
இன்றே நாடுங்கள்!
(சி/958)

## கருத்துக் கலசம்

### அழியுதே பனை வளம்!

பனை, பலா, ஈரப்பலா மரங்களையும் அவற்றின் சலாகைகள் மற்றும் பலகைகளையும் வாகனங்களில் ஏற்றிச் செல்வது நாடளாவிய ரீதியில் தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவு, பிரதேச செயலாளர்களுக்கு விவசாய காணி அமைச்சிலிருந்து பறந்திருக்கிறது. மூவகை மரங்களையும் கண்டபடி தறிப்பதனை மட்டுப்படுத்துகிறது இந்த ஏற்பாடு. அது வரவேற்கத் தக்கது.

பலாவும், ஈரப்பலாவும் தென்னிலங்கை மக்களின் உணவுத் தேவையை நிறைவேற்றுபவை. சிங்களக் கிராம மக்கள் பலாக்காயையும் பழத்தையும் அதன் விதையையும் பல்வேறு விதமாகப் பாகம் செய்து, உணவாக்கிக் கொள்வர். பல ஏழைக் குடும்பங்களின் பசி தீர்க்கும் 'அமுத சுரபி' யாக பலாமரம், தெற்கில் விளங்குகிறது. ஈரப்பலாவும் அனேகமாக அதே வகையினதே.

எவ்வாறெனினும் எங்கள் கற்பக தருவான பனையோ, ஒப்பீட்டளவில் பலாவை விடப் பல மடங்கு பயன் தருவதாகும். அதன் பழம் மட்டுமா, அடி முதல் தலை வரையும் அது நல்கும் பயன்பாடுகள் நூற்றுக்கும் அதிகமானவை.

இத்தகைய சிறப்புடைய ''உணவு வங்கி''யான பனை பொருளாதாரப் பெறுமதியுடைய பனை, தமிழ்ப் பிரதேசங்களின் பெருந்தோட்டப் பயிராக்கப்பட வேண்டியது. அவ்வாறு செய்யின் நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களின் பக்கத்துணையுடன் அதன் பயன்பாடுகளைப் பெருக்கவும் எமது பிரதேசத்தின் பொருளாதாரத்தை வளர்க்கவும் பெரும் வாய்ப்புண்டு.

ஆனால் இப்போது அதற்கு நேர்மாறான கெடுதலே, கொடுமையே நடந்து கொண்டிருக்கிறது. கடந்த பத்துப் பதினைந்து வருடங்களில் இருபத்தைந்து லட்சம் பனைகள் அழிக்கப்பட்டு விட்டன. ஒரு பனை வளர்ந்து பயன் தர ஆகக் குறைந்தது பத்து வருடங்களாவது செல்லும்.

அழிக்கப்பட்ட 25 லட்சம் பனைகளுக்கும் பதிலாக புதியனவற்றை வளர்த்தெடுக்கச் சந்ததிகள் பல செல்லுமே! இதனை உணராது குடாநாட்டில், படையினர் பனைகளை கண்டபடி, நினைத்தவாறு தறித்துத் தள்ளுவதில் தொடர்ந்து ஈடுபடுகிறார்கள். அழியாது எஞ்சியிருக்கும் பனைகளையும் தறித்தால் எங்கள் பனைவளம் என்னாவது? பாதுகாப்புத் தேவை கருதி என்ற போர்வையில் பனைகளைத் தறிக்க அனுமதிப்பது, பனைவளத்தை நாசமாக்குவது, தமிழர் பொருளாதாரத்தை வேண்டுமென்றே வேரறுப்பதற்கு ஒப்பானது.

பலா வளத்தினைப் பேணக் காட்டப்படும் அக்கறை பனை வளத்தைக் காப்பதிலும் தேவை. ஆகையால் பனை தறிப்பதை ஒட்டு மொத்தமாக உடனடியாகத் தடை செய்யக் கோருகிறோம்.

# தண்ணீர்! தண்ணீர்!! இது: உலகப் பிரச்சினை

உலகில் உயிர் வாழ்க்கைக்கு நீர் அத்தியாவசியமானது. நீரின்றி மனிதன் முதல் சகல ஜீவராசிகளும் வாழ முடியாது.

அதிகரித்து வரும் ஜனத்தொகையால் உலகில் நீர்ப் பற்றாக்குறை பெரும் சிக்கலான பிரச்சினையாக உருமாறி வருகின்றது.

நாடுகளுக்கு இடையிலும் நாடுகளுக்கு உள்ளும் நதி நீர்ப்பங்கீட்டுப் பூசல்கள் பூதாகாரமாக உருவெடுத்து வருவதும் நாம் அறிந்ததே.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக உலக நாடுகள் இடையே எரிபொருள் எண்ணெய்க்காக இருந்து வந்த போட்டி, பூசல், சண்டை இனிமேல் நீருக்காக இருக்கப் போகின்றது.

உலகின் மூன்றில் இரண்டு பங்கு நீரால் சூழப்பட்டுள்ளது என்பது உண்மைதான். ஆனாலும் நன்னீருக்கான போட்டி மேலும் சூடு பிடித்து வருகின்றது.

அப்பிரச்சினையை ஆராய்கின்றது இக்கட்டுரை.

## பகுதி I

பஞ்சபூதங்களில் ஒன்று நீர். நீரின்றி மனிதன் உட்பட எந்த ஜீவராசியும் உயிர் வாழ முடியாது. உணவின்றி ஒரு சில நாள்களைக் கழிக்க முடிந்தாலும் நீர் இன்றி வாழவே முடியாது.

கிழக்கு ஸயரில் (தற்போது கொங்கோ) அகதி முகாம்களில் இருந்த றுவாண்டா அகதிகளில் ஒரு பகுதியினர் சில மாதங்களுக்கு முன்னர் குடிக்க நீரின்றி இறந்தனர். அந்த அகதிகள் இறந்து இரண்டு மூன்று நாள்களுக்குள் அந்த முகாமில் உயிர்தப்பியிருந்த ஏனைய அகதிகளுக்குத் தங்கள் சொந்த நாடான றுவாண்டாவுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

குடிப்பதற்கு ஓரளவேனும் குடிநீர் கிடைத்திருப்பின் உயிரிழந்த அந்த அகதிகளும் உயிர் தப்பியிருக்கலாம்! ஏனையவர்களுடன் சேர்ந்து சொந்த நாடு திரும்பியிருக்கலாம். அவர்களது தலைவிதிப்படி அவர்கள் இறந்தார்களா என்பது வேறு விடயம்.

நீர் தொடர்பான பிரச்சினை கௌதம புத்தர் காலத்திலேயே இருந்துள்ளது. இரு இனங்களுக்கிடையே உருவான நீர்ப் பிரச்சினையைக் கௌதம புத்தர் தீர்த்துவைத்தார் என 'ஜாதகக் கதைகள்' கூறுகின்றன.

நீர் தொடர்பான பிரச்சினைகள் உலகெங்கும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. கடந்த ஐம்பது ஆண்டுகளாக எண்ணெய்க்காக உலக நாடுகளுக்கிடையே இடம்பெற்ற போட்டிகள் எதிர்காலத்தில் நீருக்காக இடம்பெறலாம் என்று இப்போதே நீர்ப் பிரச்சினைக்கு கட்டியம் கூறப்படுகின்றது.

### விஞ்ஞானிகளின் மதிப்பீடு

அமெரிக்க விஞ்ஞானிகள் அண்மையில் சேகரித்த புள்ளிவிவரங்களின்படி இன்னும் 30 வருடங்களில் அதாவது 2025 ஆம் ஆண்டளவில் உலகில் 40 சதவீதமான மக்கள் மிக மோசமான நீர் பிரச்சினையை எதிர் நோக்குவர்.

### மாற்றுவழி சாத்தியமா?

மக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் இல்லாத நிலை உருவாகும்போது மாற்றுவழிகள் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. கடல் நீரை நன்னீராக்கும் திட்டமும் இதில் ஒன்றாகும். ஆனால் இது அதிக செலவு மிக்கதாகும்.

### நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினைகள்

உலக சனத் தொகையில் அரைவாசிப் பேர் கூடப்போதே நீர் தொடர்பான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இந்தியாவில் கங்கை, சிந்து, காவேரி, கிருஷ்ணா ஆபிரிக்காவில் நைல் ஆகிய நதிகளின் நீர்ப்பயன்பாட்டு உரிமை பற்றி கடுமையான கருத்து வேற்றுமைகள் உருவாக ஆரம்பித்துள்ளன.

### நைல் நதிப் பிரச்சினை

1950 — 60 கால கட்டத்தில் சூடானும் எகிப்தும் தங்களிடையே செய்து கொண்ட உடன்பாட்டின்படி நைல் நதியின் நீர் முழுவதையும் அந்த இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளுகின்றன. இருப்பினும் நைல் நதி எதியோப்பிய நாட்டிலேயே உற்பத்தியாகிறது!

தற்போது எதியோப்பியாவில் அரசியல் ஸ்திரத்தன்மை உருவாக ஆரம்பித்துள்ளது. எதியோப்பிய மக்கள் நீர்ப்பாசனத்திற்கும் மின் உற்பத்திக்கும் நீரைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக நைல் நதியை மறித்து அணைக்கட்டுகளைக் கட்ட அவர்கள் முனைவர். அப்போது அது எகிப்திற்கு பெரியதொரு பிரச்சினையாகக் கட்டாயம் உருவாகும்.

எதியோப்பியா இனிப்பயன்படுத்தத் திட்டமிடும் நீரைத்தான் இப்போது எகிப்து பயன்படுத்தி வருகின்றது.

அந்த நீரை எதியோப்பியா தனது நாட்டிலேயே வழிமறித்துப் பயன்படுத்தத் தொடங்கி விட்டால் எகிப்துக்கு நீரின்றிப் போய்விடும்.

எகிப்தின் சனத்தொகை ஆண்டுதோறும் ஆறு லட்சத்தால் அதிகரித்து வருகின்றது. அதாவது எகிப்தில் நீர் அருந்துவோர் - பயன்படுத்துவோர் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் ஆறு லட்சத்தால் அதிகரித்து வருகிறது.

நீர்த்தட்டுப்பாடு காரணமாக விவசாயம் பாதிக்கப்படும்போது, எகிப்திய மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். இதற்கு உடனடியாக மாற்றுவழி காணப்படாவிடின் மத்திய கிழக்கில் ஏற்கனவே உருவாகியுள்ள பிரச்சினைகளுக்கு மேலதிகமாக புதிய பிரச்சினைகள் தோன்றக் கூடும்.

### ஜோர்தான் நதி

ஜோர்தான் நதியின் நீரை சம அளவாகப் பகிராவிடின் அதுவே அப்பிரதேசத்தில் அரசியல் கொந்தளிப்புகளுக்கு காரணமாக அமையலாம் என எச்சரிக்கப்படுகின்றது.

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையே 1967 இல் இடம் பெற்ற யுத்தத்திற்கு இந்த ஜோர்தான் நதிநீர்ப் பிரச்சினையும் ஒரு காரணம்.

''ஜோர்தான் நதியைத் திசைதிருப்பி இஸ்ரேலுக்குக் கிடைத்துவரும் நீரை அரேபிய நாடுகள் பெற முயற்சி செய்கின்றன'' என இஸ்ரேல் அமைச்சரான ஏரெஸ் ஷரோன் முன்பொருமுறை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜோர்தான் நதிநீர் தொடர்பாக பலஸ்தீனியர்களுக்கு உள்ள உரிமையை வரலாற்றில் முதன் முறையாக அண்மையில் இஸ்ரேல் ஏற்றுக் கொண்டுள்ளது. இருப்பினும் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடாயில்லை.

மேற்குக் கரையில் வாழும் இஸ்ரேலியர்கள் பலஸ்தீனியர்களைவிட நான்கு மடங்கு நீரைப் பயன்படுத்துகிறார்கள். இருப்பினும் மிகவும் குறைந்த கட்டணத்தையே செலுத்துகின்றனர். ஆனால் பலஸ்தீனியர்கள் குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தினாலும் இஸ்ரேலியர்கள் செலுத்தும் கட்டணத்தின் மூன்று மடங்கைச் செலுத்த வேண்டியுள்ளது. இவை மத்திய கிழக்கில் இன்றுள்ள நிலைமை.

### தண்ணீருக்கு சீனா தவம்

உலகில் அதிக மக்கள் வாழும் நாடு சீனா. அங்கு 120 கோடி மக்கள் வாழ்கின்றனர். 21 ஆம் நூற்றாண்டில் அரசியல், பொருளாதார மற்றும் சனப்பெருக்கம் போன்ற நெருக்கடிகளைச் சந்திக்க சீனா தயாராகி வருகிறது. இவற்றை எல்லாம் விட மிகவும் மோசமான நெருக்கடி ஒன்று சீனாவை எதிர்நோக்குகிறது எனச் சுற்றுப்புறச் சூழல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

''இன்னும் 20, 30 ஆண்டுகளில் நல்ல சுத்தமான குடிநீர் கிடைக்காத நிலை சீன மக்களுக்கு ஏற்படலாம்'' என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சீனாவிலுள்ள அறுநூறுக்கும் மேலான பெரிய மற்றும் நடுத்தர நகரங்கள் ஏற்கனவே குடிநீர்த் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 108 நகரங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சீனாவின் தலைநகரான பீக்கிங்கில் தற்போது ஒரு கோடி பத்து லட்சம் மக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு அதிகாரிகள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். ஆண்டுதோறும் 260 முதல் 270 கோடி கன மீற்றர் நிலத்தடி நீர் தலைநகர மக்களுக்கு தேவைப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் கடல் மட்டத்திலிருந்து 50 மீற்றர் கீழே இறங்கிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2010 ஆம் ஆண்டில் 100 கோடி கன மீற்றர் நீர் மேலதிகமாக கைத்தொழில் மற்றும் நாளாந்தப் பாவனைக்குத் தேவைப்படும் என சீன நிபுணர்கள் முன்கூட்டியே தெரிவித்துள்ளனர்.

சீனாவின் கிராமப்புறங்களில் சனத்தொகையில் 80 சதவீதமானமக்கள் வாழ்கின்றனர். கிராமப் புறங்களில் 3000 கோடி கன மீற்றர் நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நகர்ப் புறங்களில் 600 கோடி கனமீற்றர் நீர் தேவைப்படுகிறது.

சீன மக்கள் புதிய நூற்றாண்டில் நீருக்காகப் போராடும் நிலை நிச்சயமாக வரப்போகின்றது.

நீர்த்தட்டுப்பாடு எவ்வாறு தமது நாட்டு உணவு உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை பாதிக்கும் என்பது குறித்து ஒவ்வொரு நாடும் மிகவும் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும். இவ்விடயத்தில் காலந்தாழ்த்தினால் அந்நாடுகளில் குடிநீர்ப் பஞ்சம் உருவாகவும் கூடும்.

அதேசமயம் குடிப்பதற்கும் மற்றும் உணவுத் தேவைகளுக்குமான நன்னீரை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதால் மக்கள் எதிர்காலத்தில் புதிய புதிய பிரச்சினைகளையும் எதிர்நோக்க நேரிடும். இன்னும் சில காலத்தில் நீருக்கான போராட்டங்களும் உலகில் உருவாகலாம்.

(தொடரும்)

- கஜனி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதிலும் இளமை வரும்!

## அற்புத சிகிச்சை முறை

மார்க்கண்டேயன் மாதிரி என்றும் இளமையோடு இருக்க வேண்டும் என்று தான் நம்மில் பலரும் விரும்புகின்றோம். ஆனால் நாற்பது வயதுக்கு மேல் லேசாக முகத்தில் சுருக்கம் விழுகின்றது. ஐம்பது வயதுக்கு மேலே தாடையில் சதை விழுந்து, தளர்ந்து அது கழுத்துக்குக் கீழே தொளதொள வென்று தொங்கி விடுகிறது. முதுமை தனது முகவரியை நமது முகத்தில் எழுத ஆரம்பிக்கிறது.

முதுமையடைந்து கொண்டிருக்கும் முகத்தை 'ரிவர்ஸ் கியர்' போட்டு இளமைக்கே திரும்ப வைக்க முடியுமா?



சிகிச்சைக்கு முன் சிகிச்சைக்குப் பின்

முடியும். இதற்கு முதல் வழி Submental Lipectomy — மோவாய்க்குக் கீழான பகுதியில் கொழுப்பை உறிஞ்சும் வைத்திய முறை.

### முதுமையின் அடையாளம்

முகவாய்க்கும் தொண்டைக்குழிக்கும் இடைப்பட்டிருக்கும் பிரதேசம்தான் முகத்துக்கு முதுமையின் அடையாளங்களை முதலில் காட்டிக்கொடுக்கும் பகுதி. முதுமை வந்ததும் இங்கே தான் சதை தொடர்ந்து தொங்க ஆரம்பிக்கிறது.

இந்தப் பகுதியில் படிந்திருக்கும் கொழுப்பை உறிஞ்சி வெளியே எடுத்து விட்டால் இளமைத் தோற்றம் திரும்பவும் திரும்பும். இந்தப் பகுதியில் இருக்கும் தோலையும் முகவாயை நோக்கி இழுத்து, அதிகப்படியான தோலை வெட்டிவிட்டு (இதற்குப் பெயர் தோல் இறுக்குதல் — Skin Tightening) மீதமிருக்கும் தோலை முகவாய்க்குக் கீழே இருக்கும் பகுதியோடு இழுத்துத் தையல் போடவேண்டும்.


### Face-Lift

முதுமை இன்னும் கொஞ்சம் பரவலாகப் படிந்திருந்தால் அதைப் போக்க இன்னொரு வழி இருக்கின்றது. அதன் பெயர் Face—Lift. ஐம்பது வயதைக் கடந்தவர்களுக்கு முகவாய்க்கும், தொண்டைக்குழிக்கும் இடைப்பட்ட பிரதேசம் மட்டும் இல்லாது தாடை, கழுத்து, முகவாய் போன்ற பகுதிகளிலும் கொழுப்பு சேர்ந்து — முகத்திலிருக்கும் தோல் இளகி, சுருக்கம் விழுந்து காணப்படும். இதே போன்ற நபர்களுக்கு இளமையான முகத்தோற்றம் கொடுக்கக்கூடியதுதான் Face — Lift.

அதாவது தாடையில் காதை ஒட்டினால் போல் கத்தியால் நீட்டாகக் கீறி, வழி ஏற்படுத்திக்கொண்டு அதன் வழியாகத் தாடை, முகவாய் ஆகிய பிரதேசங்களில் இருக்கும் அதிக பட்ச கொழுப்பை வெளியே எடுக்க வேண்டும். அடுத்ததாக இந்தப் பகுதியிலிருக்கும் தசைகளைச் சரியான திசையை நோக்கி இழுத்துத் தையல் போடவேண்டும். பிறகு வழமையான முறையில் Skin Tightening செய்ய வேண்டும்.

இவ்வாறு அறுவைச் சிகிச்சை செய்யும் போது கொழுப்பை வெளியே எடுக்கலாம்!

நெற்றியை விட்டுப் புருவம் கீழே இறங்குவதும் வயதான காலத்தில் ஏற்படும் இன்னொரு மாற்றம்.



கத்தியால் வெட்டப்படும் பகுதி முழுவதும் கிருதா, காதை ஒட்டிய பகுதி, பிறகு பின்னந்தலையில் ஒட்டினால் போல இருக்கும் பகுதி என்று மிக சன்னமாகக் கோடு போட்டுக் கொண்டு போவதால் வடு கண்ணுக்குத் தெரியாது.

ஒருவர் 35 வயதில் Face-lift செய்து கொண்டால் பத்து வருடங்களுக்குப் பிறகு முதுமையின் அடையாளம் முகத்தில் மீண்டும் தடம் பதிக்கும். இளமையான தோற்றத்தோடு இருக்க வேண்டுமானால் மீண்டும் ஒரு தடவை Face lift செய்ய வேண்டியிருக்கும், அவ்வளவே!

முதுமையினால் கீழே இறங்கிவிட்ட புருவத்தை நெற்றி நோக்கி இழுப்பதற்காக, நடு மண்டையில் தோலை வெட்டி அங்கிருந்து முழு முகத்தோலையும் மேல் நோக்கி இழுக்கும்போது புருவம் மேலே போகும். ஏன் நடு மண்டை என்றால், அங்கேதான் அறுவைக்குப் பிறகு ஏற்படப்போகும் வடு கண்ணுக்குத் தெரியாமல் தலைமுடியால் மறைக்க முடியும்.

மேற்கத்திய நாடுகளில் செய்யப்படும் Face-lift அறுவைக்கும் ஆசிய நாடுகளில் செய்யப்படும் இது மாதிரி அறுவைக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. வித்தியாசம் அறுவை செய்யும் முறையில் இல்லை கலாசாரத்தில்!

அமெரிக்கா என்று எடுத்துக்கொண்டால் அங்கே ஒரு மாநிலத்தில் வசிப்பவர் குடிபெயர்ந்து தொலைதூரத்தில் இருக்கும் இன்னொரு மாநிலத்துக்குப் போவது சர்வ சாதாரண விஷயம். அதனால் இது போன்ற குடிபெயர்ச்சியின் மூலம் அதிக பட்சம் எத்தனை வயதைக் குறைக்க முடியுமோ அத்தனை வயதைக் குறைத்துக் கொண்டு அவர்கள் வேறு ஊருக்குப் போய்விடுவார்கள். ஆனால், ஆசிய நாடுகளில் பாட்டித் தோற்றத்தில் இருப்பவர் Face-lift operation செய்துகொண்டு பத்துப் பதினைந்து வயது குறைந்து, திரும்பவும் அதே பிரதேசத்தில் எதிரில் வந்து நின்றால் அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள், மருமகன், மருமகள், பேரக் குழந்தைகள் என்று எல்லோராலும் விநோதமாகப் பார்க்கப்படுவார். அதனால் ஆசிய நாடுகளில் Face-lift செய்து கொள்ளச்செல்லும் நபர்கள், 'ஒரேயடியாக என்னை இளமைத் தோற்றத்துக்கு மாற்றிவிடாதீர்கள்' என்று டாக்டர்களிடம் முன் கூட்டியே சொல்வது வழக்கம்!

ஆசிய நாடுகளில் ஆண்களைவிட பெண்களே அதிகமாக இதைச் செய்து கொள்கின்றார்கள்.

**முதுமைத் தோற்றத்தை நீக்கி, இளமைக் கவர்ச்சியைத் தர தோல் சுருக்கங்களை அகற்றும் நவீன 'பிளாஸ்டிக் சர்ஜரி' சிகிச்சை முறை பயன்படுத்தப்படுகின்றது. பெண்களே அதிகம் இச் சிகிச்சையை விரும்பி மேற்கொள்கின்றார்கள்.**

**நமது நாட்டிலும் மூத்த— மிகமூத்த— அரசியல்வாதி ஒருவர் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அடிக்கடி யூகோஸ்லேவியாவுக்கு விஜயம் செய்வார். தமது முகத்தில் உள்ள சுருக்கங்களை அகற்றி முகவசீகரத்தை ஏற்படுத்தும் சிகிச்சையை மேற்கொள்ளவே அவர் அங்கு செல்வதாக அப்போது பலரும் பேசிக் கொள்வார்கள்.**

**அத்தகைய சிகிச்சை முறை பற்றியதே இக் கட்டுரை.**

### கண் இமைகளில் சுருக்கம்

முகத்துக்கு முதுமையின் அடையாளத்தைக் கொடுக்கும் இன்னொரு பிரதேசம் கண் இமைகள். அதாவது மேல் இமை, கீழ் இமை என்ற இரண்டு இமைகளும், வயது ஆக ஆக இமைகளில் கொழுப்புப் படிந்து பெரிதாகித் தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றம் கொடுக்கிறது.


மேல் இமையில் லேசாக வெட்டிக் கொழுப்பை வெளியே எடுத்துவிட்டுத் தையல் போட்டுவிட்டால் இமைக்கு இளமை வந்து விடும். கத்தியால் கீறப்பட்ட இடமும் இமையின் தோலில் இருக்கும் மடிப்போடு மடிப்பாக மறைவது மாதிரி பார்த்துக் கொண்டால் வடுவும் மடிப்பிலேயே மறைந்து விடும்.

இதுவே கீழ் இமை என வந்தால் Conjunctiual என்ற கண் இமையின் உட்புறத்தில் இருந்து அதன் வழியாக வழி ஏற்படுத்தி கீழ் இமைகளில் இருக்கும்

சரி Face-lift செய்து கொண்டால் அதன் பிறகு, முகத்தில் முழு பெறுபேறு எப்போது தெரியும்? அறுவைச் சிகிச்சை தியேட்டரை விட்டு வெளியே வரும் போதே பத்துப் பதினைந்து வயதை உள்ளே விட்டுவிட்டு வந்து விட முடியாது! முழுப்பெறு பேறு தெரிய குறைந்தது மூன்று மாதங்கள் ஆகும்.

மூலம்:-
ஆனந்த விகடன்

# பச்சைக் கிளி



பச்சைக் கிளியே பறந்து வா!
பாடிப் பாடிப் பறந்து வா!
- பச்சைக் கிளியே

இச்சைக் கிளியே இறங்கி வா!
இனிய கீதம் இசைத்து வா!
கொச்சி மஞ்சள் பூச வா!
கொஞ்சி விளை யாட வா!
- பச்சைக் கிளியே.

வட்ட மாயுன் கழுத்திலே
வண்ண ஆரம் வைத்தது யார்?
பாவம் உனக்குப் பசிக்கிறதா?
பாலும் பழமும் தந்திடுவேன்!
- பச்சைக் கிளியே

கூட்டில் வைத்தால் கோபமோ
வீட்டில் சுதந்திரம் நான் தருவேன்!
- பச்சைக் கிளியே

- ந. சாளினி




# புலித்தோல் போர்த்திய கழுதையின் பரிதாபக் கதை!

ஒரு வண்ணானிடம் கழுதை ஒன்று இருந்தது. போதுமான புல் கிடைக்காததால் கழுதை மெலிந்து தளர்ந்து போய்விட்டது. வண்ணான் ஒருநாள் காட்டுக்குள் போய்க் கொண்டிருந்த போது புலி ஒன்று செத்துக் கிடந்தது. அதைப் பார்த்த வண்ணான் அந்த புலித் தோலை பயன்படுத்தி கொள்ளலாம் என்று எண்ணி அதை சுத்தப்படுத்தி வீட்டுக்குக் கொண்டு வந்தான். அந்தப் புலித்தோலைக் கழுதைக்கு நன்றாக இறுக்கமாகப் போர்த்தி அதை கோதுமை வயலுக்குள் துரத்தி விட்டான். வயலில் இருந்த உழவர்கள் அதைப் பார்த்து, புலி என்று எண்ணி பயந்து அதை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார்கள்.

தினமும் கழுதை கோதுமை வயலுக்குச் சென்று வேண்டிய மட்டும் கோதுமைகளைத் தின்றது. கொஞ்ச நாளிலேயே கழுதை நன்றாகச் கொழுத்துப் பெருத்துவிட்டது.

ஒரு நாள் வெகு தொலைவில் பெண் கழுதை ஒன்று கத்தும் சத்தம் கேட்டது. அதைக்கேட்டதும் கோதுமை வயலில் மேய்ந்து கொண்டிருந்த இந்தக் கழுதையும் காதல்வயப்பட்டு தன் அழகிய குரலில் கத்தத் தொடங்கியது. சத்தத்தை கேட்டதும் சந்தேகம் கொண்ட உழவர்கள் அருகில் நெருங்கிப்பார்த்தார்கள். புலித்தோல் போர்த்தப்பட்ட கழுதைதான் இத்தனை நாள் நம்மை ஏமாற்றி இருக்கிறது என்று தெரிந்ததும் அவர்களுக்கு ஆத்திரம் கொப்பளித்தது. ஆளுக்கு ஒரு தடியை எடுத்து வந்து சுற்றி வளைத்துக் கழுதையை நையப்புடைத்தனர். அடி தாங்காத கழுதை பரிதாபமாகச் செத்தது.



பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்பது ஊரறிந்த உண்மை. எப்போதும் சுகமான வாழ்வுக்காக அடுத்தவருக்குச் சொந்தமான பொருள்களில் ஆசை வைக்கக் கூடாது. அப்படிச் செய்தால் கழுதைக்கு ஏற்பட்ட முடிவு மனிதனுக்கும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

நன்றி: பஞ்ச தந்திரக் கதைகள்

# நொடிப் பொழுது

1. மரத்துக்கு மேலே காய். காய்க்கு மேலே மரம். அது என்ன?
2. அந்துவானக் காட்டிலே குடை பிடித்து நிற்கிறார். அது என்ன?
3. மரத்திலே இலை வடிவம். அரைத்தாலோ கலை வடிவம். அது என்ன?
4. போனால் ஒன்று. தட்டினால் சுருளும், அது என்ன?
5. மடியிலே எடுத்து கடையிலே விற்பர். அது என்ன?

தொகுப்பு:- கி. கஸ்தனி
(ஆண்டு — 04
மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்)

விடை
1. அன்னாசிப்பழம். 2. காளான். 3. மருதாணி 4. அட்டை. 5. பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# எரிகிற வீட்டில்....

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற இராசசேகரம் சமூகத்துடன் சேர்ந்து சரியாக ஆறு மாதங்களின் பின்புதான் ஊர் திரும்பினார். குடும்பத்துடன் இடம் பெயர்ந்து சென்ற இடத்தில், சாவகச்சேரியில் அவரும், அவரது மனைவி பவளமும், மகன் நிதர்ஷனும், மகள் கிரிசாந்தியும் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. எப்படியோ ஆறு மாதத்திலாவது வீட்டுக்கு வந்திட்டோமே என்ற திருப்தி எல்லோருக்கும்.

பூட்டிவிட்டுச் சென்ற முன் 'கேற்' திறந்திருந்தது. வளவு நிறைய கணுக்காலை மூடும் அளவுக்குக் குப்பை கூளங்கள். கொஞ்சம் மழை பெய்திருந்ததால் புல்லும், செடி கொடிகளும் எங்கும் பச்சைப் பசேல். மேலே மரங்கள் காடாகக் கிளைபரப்பி நின்றன. இன்னும் ஆறு மாதங்கள் போயிருந்தால் அவை எல்லாம் வளர்ந்து வீட்டையும் மூடியிருக்குமோ?

யாரோ கதவுகள் எல்லாவற்றையும் குத்திக் கிழித்துத் திறந்து உள்ளே சென்று, அலுமாரிகள், லாச்சிகள் எல்லாவற்றையும் உடைத்துத் திறந்து அவற்றில் இருந்த கடதாசிகள், புத்தகங்கள், கொப்பிகள், உடுப்புகள் எல்லாவற்றையும் அள்ளி நிலத்தில் சிந்தியிருந்தனர். ஷெல் விழுந்து கூரை உடைந்து விட்டது. அதனால் வீட்டினுள் மழை வெள்ளம். அள்ளிச் சிந்தியிருந்த பொருள்கள் எல்லாம் மழையிலும், வெள்ளத்திலும் நனைந்தும் தோய்ந்தும் கிடந்தன. பல நாள்கள் நீரில் கிடந்த பொருள்கள் நாறிக்கொண்டிருந்தன. முகம் கொடுத்து வேலை செய்ய முடியாத கடும் மணம்.

அந்தக் கடதாசிகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்து வேண்டியவற்றைத் தெரிவு செய்து எடுத்து, வேண்டாதவற்றைக் கழித்து, உடுப்புக்களில் பழுதடைந்தவற்றை நீக்கி, நல்ல நிலையில் உள்ளவற்றைத் தெரிவு செய்து எடுத்து, புத்தகங்களில் பழுதடையாதவற்றை எடுத்து, அடுக்கிப் பாதுகாத்து வீட்டைத் துப்புரவு செய்து, கிணற்றை இறைத்து, ஓரளவு குடியிருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவே இராசசேகரத்துக்கும், குடும்பத்தினருக்கும் ஒரு வாரம் பிடித்தது. அதன் பின்பு கதவுகள், அலுமாரிகள், மேசைகளைத் திருத்தி, கூரைக்கு மரங்கள் போட்டு, ஓடுகள் (கள்ள ஓடுகள் தான்) வாங்கிப் போட்டுப் பாதுகாப்புச் செய்ய இன்னும் ஒரு வாரம் சென்றது. அதன் பிறகுதான் அவர்கள் மூச்சு விட்டனர்; அக்கம் பக்கத்தில் என்ன நடக்கிறது என்று பார்த்தனர்.

பக்கத்து வீடு பத்மராஜாவினுடையது. அவரும் இராசசேகரத்தைப்போல ஆசிரியராக வேலைபார்த்து ஓய்வு பெற்றவர். இரண்டு பிள்ளைகள். மகன் சிவசங்கர் அப்பொழுதுதான் பல்கலைக் கழகப் படிப்பை முடித்திருந்தான். மகள் தனுஜா ஏதோ ஒரு கந்தோரில் வேலை செய்துகொண்டிருந்தாள்.

''ஆமி வருது; நான் வயது வந்த பிள்ளைகளோடை இஞ்சை இருக்க விரும்பேல்லை; எங்கையாவது போகப்போறன்'' என்று சொல்லிக்கொண்டிருந்த பத்மராஜா மற்றவர்கள் கூட்டமாக அள்ளுப்படுவதற்கு முன்பே மனைவி சித்திராவுடனும், பிள்ளைகளுடனும் சாவச்சேரிக்குப் போய் விட்டார். இராசசேகரமும் சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்த பொழுது அவரைத் தென்மராட்சியில் எங்குமே சந்திக்கவில்லை.

பத்மராஜா தனது குடும்பத்துடன் கடல்தாண்டி வன்னிக்குப் போயிருக்கலாம்; அங்கிருந்து வவுனியாவுக்கோ, கொழும்புக்கோ சென்றிருக்கலாம்; கொழும்பில் இருந்து வெளிநாடுகளுக்கும் பயணமாகியிருக்கலாம்.

அவர்களுக்கு வெளிநாட்டில கிட்டிய உறவினர் ஒருவரும் இல்லைத்தான். ஆனால் இப்பொழுதெல்லாம் ஆக்கள் இருந்தால் மட்டுந்தானா வெளிநாடு போகிறார்கள்? நினைக்கப் படைக்கப் போகிறார்கள் எல்லோரும்.

இடம்பெயர்ந்து போனவர்கள் **எல்லாம்** ஒரேயடியாகவா திரும்பி வந்தார்கள்? ஒரு மாதகாலமாக வரவு நிகழ்ந்துகொண்டிருந்தது. இராசசேகரம் கூட சில நாள்கள் கழித்துத்தானே வந்தார்? தன்னைப் போலவே நண்பனும் திரும்பி வருவார் என்று எதிர்பார்த்தார். இரண்டு கிழமையாகியும் பத்மராஜா குடும்பம் வராமல் போகவே இனிமேல் அவர்கள் வரமாட்டார்கள் என்பதை உணர்ந்தார். அத்தோடு இன்னும் ஒன்றையும் அறிந்து கொண்டார். அவரது வீட்டுப் பொருள்கள் எல்லாம் களவுபோய்க் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் ஒன்றைவிட்டு ஒரு வீட்டிற்கு ஆட்கள் வரவில்லை. திரும்பி வராதவர்களுடைய பொருள்களையெல்லாம் திரும்பி வந்தவர்கள் களவெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் சர்வசாதாரணமாக அது நிகழ்கின்றது. இருந்தாலும் பத்மராஜா அயலவர்; நண்பர்; அவரது வீட்டுப் பொருள்கள் தமது கண்ணுக்கு முன்னாலேயே கள்வு போய்க் கொண்டிருப்பதைப் பார்க்க இராசசேகரத்தாருக்கு என்னவோ செய்தது.

ஒரு நாள் மனைவியுடன் இது பற்றி ஆலோசித்தார்.

''யாழ்ப்பாணத்திலை ஒண்டைவிட்டு ஒரு வீட்டுக்கு ஆக்கள் வரேல்லை. வந்த சனம் வராதவையின்ரை சாமான்கள் எல்லாத்தையும் களவெடுக்குதுகள். கெட்ட சனம்; எரியிற வீட்டில பிடுங்கினது லாபம் எண்டு எல்லாத்தையுமே அள்ளிக்கொண்டு போகுதுகள்'' — என்றாள் பவளம்.

''எல்லாரும் எண்டு சொல்லாதை பவளம். சிலர்தான் அப்படிச் செய்யினம்''

''ஒரு சிலர் செய்தாலும் எல்லோருக்கும்தானே பேர். இதே உலக நீதியாய் இருக்கிற பொழுது உங்களாலை இதைத் தடுக்க முடியுமா?''

''நான் உலகத்தைத் திருத்தப்போகேல்லைப் பவளம். என்ரை நண்பன் பத்மராஜாவின்ரை வீட்டை மட்டும் காப்பாற்றுவம் எண்டு பாக்கிறன்.''

''என்ன செய்யப் போறியள்...?''

''பத்மராஜா குடும்பத்தினர் வருவினம், வருவினம் எண்டு எதிர்பார்த்தன். ரெண்டு கிழமையாச்சு. இனி வராயினம். அவேன்ரை முன் கதவையும் திருத்தி, 'கேற்'றுக்கும் ஒரு சங்கிலிப் பூட்டு போடப்போறன்.''

''அவங்க கேற்றை இன்னும் விட்டு வைச்சிருக்கிறதிலை'' என்று சிரித்தாள் பவளம்.

''ஓம்...ஓம்...என்னாலை 'கேற்' போட முடியுமா?''

''குதிரையள் களவுபோன பிறகு ஆரோ ஒருத்தன் குதிரை லாயத்தை இழுத்துப் பூட்டினானாம். அந்தமாதிரி நீங்கள் பொருள்கள் எல்லாம் களவு போன பிறகு நண்பன் வீட்டுக் 'கேற்றைப்' பூட்டுங்கோ...''

''இல்லைப் பவளம். லேசாத் தூக்கக்கூடிய சின்னச் சின்னச் சாமான்களைத்தான் களவெடுத்துக் கொண்டு போட்டாங்கள். கனமான பெரிய சாமான்கள் இன்னும் இருக்குது...''

''...உங்களுக்கு எப்படித் தெரியும்...?''

''...மேசையள், அலுமாரிகள், கதிரையளைக்கொண்டு போறது எண்டா வாகனங்களிலை வந்துதான் ஏத்தியிருக்கவேணும். வாகனம் ஏதும் வந்ததாகத் தெரியேல்லை. ஒருக்காப் போய் வீட்டைப் பாப்பம்...''

''போய்ப் பார்த்தியளோ நீங்களும்தான் சேர்ந்து களவெடுத்ததெண்டு பேர் வரும்...'' மீண்டும் சிரித்தாள் பவளம்.

''இந்த அயலிலை உள்ளவை ஒருத்தரும் என்னைப் பற்றி அப்பிடி நினையாயினம்..''

''...அப்படிச் சொல்ல ஏலாது, இண்டைக்கு பெரிய பெரிய கௌரவமான ஆக்கள் கூட வீடுகளிலை வைச்சு வீட்டுத் தளபாடங்கள், பொருள்களை விக்கினம்.''

''இப்ப பலர் நாட்டைவிட்டு குடும்பத்தோட வெளிநாடு போகினம். அப்படிப் போறவை தங்கட நண்பர்கள், சொந்தக்காரரிட்டை இந்தச் சாமான்களைக் குடுத்துட்டுப் போயிருப்பினம்.''

''இஞ்சாருங்கோ, பனைக்குக் கீழை இருந்து பால் குடிச்சாலும் அது கள் எண்டுதான் சொல்லுவினம். இண்டைக்கு விக்கிற இப்படியான சாமான்கள் எல்லாம் களவெடுத்த சாமான்கள் எண்டது பொதுவான அபிப்பிராயம். ஆனபடியாலை உந்த கௌரவமான மனிசர் அந்த வேலையளைத் தவிர்க்கலாம்தானே...?''

''அவை எதையும் செய்யட்டும். நான் என்ர நண்பனின்ர வீட்டைப் பாதுகாக்கப் போறன்...''

''...அவை எங்கை? ஏன் வரேலை?''

''அவை வன்னியிலையோ... கொழும்பிலையோ...?''

''வரலாம்தானே.. ஏன் வரேலை...? கொழும்பிலைதானே கொழுப்பிலை நிக்கினம்..''

''பயத்திலும் நிக்கலாமல்லே பவளம்...'' என்று இழுத்தார் இராசசேகரம்.

''எங்களுக்குப் பயமில்லை, அவைக்கு மட்டும் தானே பயம்...?''

''எல்லாற்றை பயமும் ஒரு மாதிரியில்லை.''

''...அதுகள் வெளிநாடு போட்டுதுகளோவும் தெரியாது, நீங்கள் ஏன் வீணாக் கள்ளரோடை சண்டை பிடிக்கப் போறியள்...''

''...என்ன நடந்திருந்தால் என்ன...அயலிலை இருந்ததுகள். நல்ல மனிசர். அதுகளின்ர வீட்டையும், பொருள் பண்டத்தையும் காப்பாற்ற என்னால இயண்டதைச் செய்வம்...''

''...சரி செய்யுங்கோ!''

ஒரு நாள் பத்மராஜாவின் வீட்டுக்குள் போய்ப் பார்த்தார் இராசசேகரம். வீட்டுச் சாமான்களும், பாரமற்ற பொருள்களும் போய் விட்டன. படுக்கைகள், அலுமாரிகள், வோல்ட்றோப்புகள் போன்ற பாரமான பொருள்கள் இன்னும் இருந்தன. கதவையும் திருத்தி வெளி 'கேற்'றுக்கு ஒரு பூட்டுப் போட்டுவிட்டார்.

அவரது முயற்சி பலித்தது. யாரும் அவற்றை உடைக்கவில்லை. இதற்கிடையில் பத்மராஜாவிடம் இருந்தும் கடிதம் வந்தது. தாங்கள் கொழும்பில் இருப்பதாகவும், யாழ்ப்பாணம் வரப் பயமாக இருப்பதாகவும் முடியுமானால் தங்கள் வீட்டைப் பாதுகாக்கும் படியும் தயவாகக் கேட்டு எழுதியிருந்தார்கள்.

பதிலுக்கு இராசசேகரம் கடிதம் எழுதிப்போட்டார். ''இங்கே சந்திகளில் 'செக்' பண்ணுகிறார்கள். சண்டை நடக்கும் இடத்திற்குப் போனால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. மற்றப்படி இங்கு ஒரு பயமும் அதிகம் இல்லை. நாங்கள் இருக்கிறம்தானே. நீங்களும் வரலாம்'' என்ற சாரப்பட.

பத்மராஜா குடும்பத்தினரிடம் இருந்து பதில் வரவில்லை. அவர்களும் என்னென்ன திட்டங்கள் தீட்டி வைத்திருக்கிறார்களோ! அவரது வீட்டுக்கும், வளவுக்கும் போடப்பட்ட பூட்டுக்களும் உடைக்கப்படாமல் கிடந்தன ஆறுமாதங்கள்.

ஒருநாள் இருவர் இராசசேகரம் வீட்டுக்குவந்தனர். குடித்திருந்தார்கள், ஒருவன் கொள்ளிக் கண்ணன்.

''பக்கத்து வளவை ஆர் பூட்டிவைக்கிறது?''

''...அது என்ர சொந்தக்காரரின்ரை வீடு, வளவு. நான்தான் பூட்டிவைத்திருக்கிறன்...''

''...நான் உப்பத்தான் வன்னியிலை இருந்து வந்தனான். எனக்கு இருக்க வீடில்லை. உந்த வீட்டிலை இருக்கப்போறன்...?''

''...அதிலை இருக்க முடியாது. அது என்னுடைய உறவினருடைய வீடு. அவர் கொழும்பிலை இருக்கிறார். நான் அவருக்காக இதைப் பாதுகாக்கிறன்...''

''...இல்லை அவர் வெளிநாடு போட்டார். நீ வீடு, வளவை அமத்தப்பாக்கிறாய்...''

''...என்ர சொந்தக்காரருடைய வீட்டை நான் அமத்தினா உங்களுக்கென்ன?''

..'கேற்றைத் திறக்கப் போறியா இல்லையா..?''

''திறக்க முடியாது!''

''.. நாங்கள் உடைச்சிட்டு உள்ளுக்குப் போனா என்னடா செய்வாய்...?''

''...பொலீஸிலை சொல்லுவன்; ஆமீட்டை சொல்லுவன்; இயக்கத்திட்டும் சொல்லுவன்....?''

''...சரி நாங்கள் உடைக்கப்போறம். நீ செய்யிறதைச் செய்..''

இவர்கள் குடியிருக்க வரவில்லை; களவெடுக்கத்தான் வந்திருக்கிறார்கள் என்பது ஆட்களைப் பார்க்காமலே தெரிந்தது.

அவர் பார்த்துக் கொண்டு நிற்கவே 'கேற்' பூட்டை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று வளவு முழுவதும் தேடினார்கள். பின்பு கதவை உடைத்து திறந்து கொண்டு வீட்டினுள் சென்றனர்.

...''என்ன செய்யப் போறியள்...?'' என்றாள்பவளம்.

''.. நான் ஒண்டும் செய்யப் போறதில்லை'' என்றார் இராசசேகரம்.

''...பொலீஸிட்டை... ஆமீட்டை, இயக்கத்திட்ட எல்லாம் சொல்லப் போறதெண்டு வெருட்டினியளே.''

''.. பாத்தியே பவளம் உனக்கே விளங்கீட்டுது. சும்மா ஒரு வெருட்டுக்குத்தான் சொன்னனான். நான் போய்ச் சொன்னால்போலை பொலீஸ் காரர் இஞ்ச வரப் போறாங்களா,.? அவங்கள் முறைப்பாட்டை வடிவா எழுதி வைச்சிட்டுப் பொலீஸ் ஸ்ரேசனில இருப்பாங்கள். நான் தான் வீணா அலையவேணும்.

''இனி இவங்கடை பேர், ஊர் கூடஎனக்குத் தெரியாது. நான் ஆர் எண்டு முறைப்பாடு கொடுக்கிறது.,? பொலீஸ்காறரும் ஊருக்குப் புதுசு. அவங்களாலும் இவங்களைக் கண்டு பிடிக்க முடியாது. அப்பிடிக் கண்டு பிடிச்சு ரெண்டு அடியைப் போட்டாலும் இவங்கள் வந்து எனக்குஅடிச்சா.? இவங்கள் ஒரு குழுவா இயங்கிறாங்கள். கள்ளச்சாமான் விக்கிறவங்களுப் இவங்களோட சேத்தி. அவங்கள் எல்லாரும் சேர்ந்து வந்து எனக்கு அடி அடியெண்டு அடிச்சா...? என்ர அந்தியேட்டிக்கும் எலும் பேதும் மிஞ்சாது. எனக்கேன் வீண் வம்பு..?'' என்று கூறிச் சிரித்தார் இராசசேகரம்.

''...இப்பதான் நீங்கள் புத்திசாலி ஆகியிருக்கிறீங்கள்..' என்று பாராட்டிச் சிரித்து விட்டுப் பவளம் வீட்டுக்குள் சென்றாள்.

இராசசேகரத்தார் பார்த்துக் கொண்டு நிற்கவே பக்கத்து வீட்டுப் பொருள்கள் எல்லாம் ஒவ்வொன்றாகப் போய் மறைந்தன.

சரியாக ஒரு மாதத்தின் பின்பு.. ''பத்மராஜா குடும்பமும் வாறதாக இல்லை. அவையின்ர வீட்டையும், வளவையும் இன்னும் ஒருக்காப் பூட்டி விடப்போறன்'' என்றார் இராசசேகரம்.

''.. எல்லாத்தையும் தான் கொண்டு போட்டாங்களே? இனி ஏன்பூட்டப்போறியள்,?

''..இன்னும் எவ்வளவோ இருக்குப் பவளம். ஓடு, மரம், கதவுகள், நிலையள் இதுகளைக் கழட்டி வித்தாலே எத்தனையோ லட்சம் தேறும். உதுதான் இப்ப 'யாழ்ப்பாணத்திலை நடந்து கொண்டிருக்கு..''

''..உதுகளை வாங்க ஆக்கள் வேணுமே?..

'..பெறுமதிக்கா விக்கிறாங்கள். விறகுக்கு விக்கிறாங்கள். விறகுக்கு.,'

''..எதுக்காவது விக்கட்டுமன். உங்களுக்கென்ன..?''

''..உங்களுக்கென்னவோ? அதெல்லாத்தையும் எடுத்து முடிச்ச பிறகு என்ன செய்வாங்கள் சொல்லு பாப்பம் பவளம்..?''

''..இஞ்ச வருவாங்கள். எங்கட பொருள்களைத் தூக்க.அப்ப நாங்கள் ஒண்டும் செய்யேலாது.

''அப்பிடியா...?'' என்று ஏக்கத்துடன் கேட்ட பவளம், ''அப்பசரி பூட்டுங்கோ'' என்றாள்.

இராசசேகரம் மீண்டும் ஒருமுறை 'கேற்'றையும் கதவையும் பூட்டி விட்டார். இம்முறையும் அவரது முயற்சி பலனளித்தது. இதுவரை யாரும் அவற்றில் தொடவில்லை.

''..என்ன இன்னும் ஒருத்தரையும் காணேலை..?ஆச்சரியமாய் இருக்கே..!'' என்றாள் பவளம்.

''..பொறு.. பொறு.. கெதிலை வருவாங்கள்..'' — என்றார் இராசசேகரம்.

''..களவெடுத்ததுகள் இன்னும் வித்து முடியேல்லப் போலை...அல்லது இதையும் விடப்பெறுமதி வாய்ந்த வீடுகள் கிடைச்சிருக்கலாம்..''

''..அல்லது களவெடுத்த பொருள்கள் எல்லாத்தையும் வித்துக் காசாக்கிக் கொண்டு வெளிநாடுகளுக்குப் போட்டாங்களோ..?'' பவளம் சிரித்தாள்.

''...இதிலை சிரிக்க என்ன இருக்கு? எல்லாரும் நாட்டை விட்டு ஓடுறபோது அவங்களுக்கு மட்டும்.., வெளிநாடு போக ஆசை வராதாஎன்ன..? —கேட்டார் அவர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாகப் பிறக்கும் நட்சத்திரங்கள்

நமது பூமி, அது சுற்றி வரும் சூரியமண்டலம் இன்னும் அது போன்ற பல்வேறு நட்சத்திரக் கூட்டங்கள் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டது பால்வழி மண்டலம் (Galaxy).

அந்தப் பால்வழி மண்டலத்தில் எங்கோ ஒரு மூலையில், புதிய நட்சத்திரம் ஒன்று அல்லது அது போன்ற ஒரு வஸ்து உருவாகுவதை 'நாஸா' விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். கமா கதிர் கணிப்பீட்டுக் கருவிகள் மூலம் பெற்ற தகவல்களே இந்தக் கண்டுபிடிப்புக்கு வழிகோலியிருக்கின்றன.

பால்வழி மண்டலத்தின் மையத்தில் பாரிய கரும் துவாரத்திற்கு நெருக்கமாக முரண்வஸ்து (Antimatter) எலக்ட்ரோன்கள் நிறைந்த, கொதி ஆவி ஊற்று எழும்புவதை விஞ்ஞானிகள் முதலில் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

இதற்கான காரணத்தைத் திட்டவட்டமாக விஞ்ஞானிகளால் கூற முடியாது போனாலும் அது பால்வழி மண்டலத்தின் மையப் பகுதிக்குக் கிட்டவாக புதிதாக — பாரிய — நட்சத்திரம் உருவாகுவதுடன் அது தொடர்புடையது என்று மட்டும் அவர்களால் குறிப்பிடமுடிகிறது.

சில வேளைகளில் மிகப்பெரிய நட்சத்திரங்களின் காற்றினாலோ (Wind) அல்லது கருந்துளைகளின் முரண் வஸ்து உற்பத்தியாக்கத்தினாலோ கூட இது ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

முரண் இலத்திரன்கள் என்கின்ற பொசித்திரன்களின் புகார் அல்லது முகில் பால்வழி மண்டலத்தில் இருந்து ஊற்றாக எழுந்து வருகின்றது என்றும் —

இந்த முகில்களை இராசட்த முகில்கள் என்றும் துவம்சம் செய்யும் கதிர்ப்புக்கள் என்றும் —

விஞ்ஞானிகள் கூறுவது சிந்தனைக்கு உரியது.

எந்தப் பொருளையும் (வஸ்துவையும்) ஆவியாக்கும் முரண் வஸ்துக்களைக் கொண்ட — இந்த ஆக்ரோஷமான முகில்களைத் தருகின்ற — கொதி ஊற்றுக்கள் குறித்து முழு விவரங்களும் விஞ்ஞானிகளுக்குக் கிட்டவில்லை.

எனினும் —

பால்வழி நட்சத்திர மண்டலத்துக்கு வெளியேயும் — நன்கு வெளியேயும் — இன்னோர் இரண்டாம் முரண்வஸ்து முகில் கூட்டங்கள் உருவாகிக் கொண்டிருப்பதை விஞ்ஞானிகளால் அறிய முடிந்துள்ளது.

இளம் — இராட்சத — நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறியதனால் இந்த இரண்டாவது முரண்வஸ்து புகார்கள் உருவாகியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

''பால்வழி மண்டலத்தின் மத்திய பகுதியில் பல்வேறு நட்சத்திரங்கள் மோதி வெடித்துச் சிதறியதால், இத்தகைய முரண்வஸ்து முகில் கூட்டம் அல்லது ஊற்று உருவாகியிருக்கலாம்'' — என்கின்றார் நாஸாவின் மூத்த விஞ்ஞானி ஒருவர்.

முரண்வஸ்து (antimatter) எமது பூமியில் அதிக அளவு காணப்படுவதில்லை; காணப்படமுடியாது. ஏனென்றால் முரண்வஸ்து எதனைத் தொட்டாலும் அதனை உடனே ஆவியாக்கி விடும். அத்தகைய வஸ்து பூமியில் இருப்பதாக இல்லை.

இத்தகைய முரண்வஸ்து கொதி ஆவி முகில் ஊற்று பால்வழிமண்டலத்தில் தோன்றியிருப்பது புதிய நட்சத்திரங்கள் பிறப்பதற்கான ஆயத்தம் என்று மட்டும் நாம் கொள்ளலாம்.

- ரவி -

# தெரியுமா சேதி?....

□ சாதாரணமாக நீரின் ஆவியாகும் வெப்பநிலை 100 பாகை சென்ரிகிரேட். சூரியனின் வெப்பநிலை என்ன தெரியுமா? மேற்பரப்பு வெப்பநிலை ஏறத்தாழ 6 ஆயிரம் பாகை செல்ஸியஸ், (10 ஆயிரம் பாகை பரனைட்). உட்பகுதியில் வெப்பநிலை ஆகக்குறைந்தது ஒரு கோடி 40 லட்சம் பாகை செல்ஸியஸாவது (2 கோடி 50 லட்சம் பாகை பரனைட்டாவது) இருக்கும்.

சூரியன் எந்த நேரமும் இழந்துகொண்டிருக்கும் சக்தியின்படி கணித்தால் சூரியனின் அரைவாழ்வுக்காலம் முடிந்து விட்டது. ஆனால் இன்னும் ஐந்நூறு கோடி ஆண்டுகளுக்கு பிரகாசிப்பதற்கான சக்தியை சூரியன் தன்னகத்தே வைத்திருக்கிறது.

★ ★ ★

□ பிறந்த குழந்தைகள் என்னதான் அழுதாலும் கண்ணீர் வராது. ஏனென்றால் கண்ணீர் சுரப்பிகள் வளர்ந்து செயற்படப் பதினைந்து நாள்களாவது ஆகும்.

★ ★ ★

□ டால்பினுக்கு மூளைப்பகுதிகள் இரண்டு. ஒன்று விழித்திருக்கும்போது மற்றையது தூங்கும், முதலாவது தூங்கும் போது மற்றையது விழித்திருக்கும். இதனால்தான் விடாமல் இரவும், பகலும் ஓயாமல் அடிக்கடி நீருக்கு மேலே வந்து அதனால் மூச்சுவிடமுடிகிறது.

★ ★ ★

□ குழந்தைகளுக்கு சுவாசத்தொகுதியோடு தொடர்புடைய நோய்கள் இருக்கின்றதா?

அவர்களுக்கு சிகிச்சையளிக்க புதுவித மருத்துவமுறை ஒன்றை மேல்நாட்டு மருத்துவர்கள் நாடியிருக்கிறார்கள்.

பழைமையான நாட்டுப்புற காற்றுவாத்தியங்களைக் கொடுத்து அவற்றை ஊதச்செய்வதுதான் அந்த முறை.

இந்த இசைக்கருவிகளை ஊதுவதன் மூலம் குழந்தைகளின் சுவாசப்பைகளும், சுவாசத்தொகுதியும் நல்ல வலுவுடையனவையாகின்றன என்கின்றார்கள் மருத்துவர்கள்.

★ ★ ★

□ உயிர்கொல்லித் தொற்றுநோயான எய்ட்ஸை கட்டுப்படுத்தி அந்த நோயிலிருந்து மக்களை மீட்பதற்கான முயற்சிகளுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்த சில மத அமைப்புக்கள் முடிவு செய்திருக்கின்றனவாம்.

போதைவஸ்து அடிமை, விபச்சாரம், தன்னினச் சேர்க்கை, பிறன்மனை புகுதல் போன்ற சமூகவிரோதச் செயல்களை உலகிலிருந்து ஒரேயடியாக ஒழிக்க இந்த நோயினால் மட்டுமே முடியும் என இந்த மதப்பிரிவினர் கருதுகின்றார்கள்.

★ ★ ★

- விஞ்ஞானம் -

## 2000 ஆம் ஆண்டு பிறக்கும் போது

# மேற்குலகம் ஸ்தம்பிக்கும்!

1999 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி தாண்டும் போது......

★ உலகின் நவீன நகரங்களில் — அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் — பல இடங்களில் கம்பியூட்டர் கட்டுப்பாட்டில் இயங்கும் மின் விநியோகக் கட்டமைப்பு திடீரென செயலிழந்து நகரங்கள் இருளில் மூழ்கும்; பொதுக்கடிகாரங்கள் கட்டுப்பாடின்றி ஓடத் தொடங்கும்.

★ அணுசக்தி மின் நிலையங்களில் பாதுகாப்பு, கதிர் வீச்சுக் கட்டுப்பாடு என்பன கேள்விக் குறியாகும்.

★ கெனடி விமான நிலையம் போன்ற முக்கிய விமானத் தளங்களில் விமானக்கட்டுப்பாட்டறை சரியாகச் செயற்படாததால் விமான நிலையம் ஸ்தம்பிக்கும். விமான நிலையத்தில் தரித்து நின்ற விமானங்கள் பறப்பதற்கு கிளம்ப முடியாது. விமான நிலையத்தை அண்மிக்கும் விமானங்கள் இறங்கமுடியாது விமான நிலையத்தைச் சுற்றி அலைய வேண்டி வரும்.

★ இரு நிமிடங்கள் தொலைபேசியில் கதைத்தால் நூறு ஆண்டுகள் கதைத்ததற்கான 'பில்' வரும்.

★ உங்கள் 'கிரெடிட் கார்ட்.' காலாவதியாகி பயன்படுத்த முடியாததாகக் கணிக்கப்படும்.

★ வங்கிகளில் பணம் வழங்கும் தானியங்கி இயந்திரங்கள் (ATM) பணம் வழங்க மறுத்துவிடும்.

★ சர்வதேசத் தொலைத் தொடர்புகள் அறுந்து போகும்.

★ மருத்துவ நிலையங்களில் நோயாளிகளின் இதயத் துடிப்பு, குருதி அமுக்கம், நரம்பு — மூளை இயக்கம் ஆகியவற்றைக் கண்காணித்து அளவிடும் கருவிகள் தவறாக இயங்கத் தொடங்கிவிடும்.

★ களஞ்சியங்களில் இருக்கும் உணவு — மருந்துப் பொருள்களின் காலாவதியாகும் திகதி பிழையாகக் கணிக்கப்பட்டு அவற்றை அழிப்பதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிடும்.

★ 'லிப்ட்' டுகள் உயரத்தில் அல்லது பள்ளத்தில் நடுவழியில் நின்றுவிடும்.

★ கார் நிறுத்தும் கராஜ்களின் தானியங்கு கதவுகள் திறக்க மறுத்துவிடும்.

★ வங்கியில் இருப்பில் இருக்கும் பணத்துக்கு வட்டியை முதலீட்டிலிருந்து கழிக்க வேண்டி வரலாம். அல்லது கடன்பட்டவரிடம் இருந்து வங்கி தனது வட்டியை அறவிடுவதற்குப் பதிலாக செலுத்த வேண்டி இருப்பதாகக் கம்பியூட்டர்கள் காட்டும்.

உலக மக்கள் 21ஆம் நூற்றாண்டின் பிறப்பை 'ஷம்பெய்ன்' குலுக்கி, குடித்து மகிழும் வேளை மேற்குலக மக்களின் நாகரிக உலகு இவ்வாறு செயலிழந்து போகும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக எச்சரிக்கப்படுகின்றது.

மேற்குலக நாடுகளில், சாதாரண கடைகளில் பொருள் விநியோகம் தொடக்கம் சந்திரனுக்கு மனிதனை அனுப்புவது வரை சகல விடயங்களையும் — கம்பியூட்டர்களே (கணனிகளே) செயற்படுத்துகின்றன; கட்டுப்படுத்துகின்றன; மேற்கொள்கின்றன.

1999 ஆம் ஆண்டு நிறைவுறும்போது இந்தக் கணனிகள் பலவும் சரிவரத் தொழிற்படாமல் போகப் போகின்றன. அதனால் மேற்குலகில் மக்களின் சாதாரண வாழ்க்கைச் செயற்பாடுகள் திடீரென ஸ்தம்பிக்கலாம் என நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றார்கள்.

பெரும்பாலான கணனிகளை இயக்கும் கட்டமைப்புத் தொகுப்பு (Programme) இரண்டாயிரம் ஆண்டை எதிர்கொள்ளத் தக்க வகையில் தயாரிக்கப்படாததே இத்தகைய பிரச்சினை ஏற்படப் போவதற்குக் காரணமாகும்.

கணனிகளின் நினைவாற்றலை — ஞாபகக் கொள்திறனை — உச்ச நிலையில் பயன்படுத்துவதற்காக அவற்றின் கட்டளைத் தொகுப்பில் பதிவு பெறும் திகதிகளில் ஆண்டுகள் ஈரிலக்க எண்களினாலேயே குறிக்கப்படுவது வழக்கம். உதாரணமாக 1947-01-15 என்ற திகதி கணனிகளில் 47-01-15 என்றே பதிவு செய்யப்படுகின்றது.

இதன்படி 1999 ஆம் ஆண்டு '99' எனக் குறிப்பிடப்படும். அதுவரை கணனிகள் சிக்கலின்றிச் செயற்படும். ஆனால் 2000 ஆம் ஆண்டு பிறந்ததும் அந்த வருடத்தை '00' எனக் குறிப்பிடும்போது கணனிகள் குழம்பிப்போய்விடும். அதுவே கணனிகளால் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளும் குழம்பிப் போகக் காரணமாகிவிடும்.

இவ்வாறான பிரச்சினையை '2000 ஆண்டுப் பிரச்சினை' அல்லது 'Y2K' அல்லது 'Millennium Bug' என்று கணனி மொழியில் குறிப்பிடுகின்றார்கள்.

இத்தகைய பிரச்சினைக்கு ஒரே தீர்வு—

கணனிகளின் கட்டளைத் தொகுப்பில் ஈரிலக்கத்தில் குறிப்பிடப்படும் வருடத்தின் குறியீட்டை இனிமேல் நான்கு இலக்கத்தில் குறிப்பிடுவதாகும்.

இதற்காக பல்வேறு கணனிகளின் கட்டளைத் தொகுப்பை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. இதற்கு பெரும் செலவு ஏற்படும்.

ஒரு பிரபல கணனி நிறுவனம் இதற்காக ஏற்படும் உத்தேச செலவு அறுபதாயிரம் கோடி டொலர் எனக் கணித்துள்ளது. இது அமெரிக்காவில் மாணவர்களின் பாடசாலைக் கல்விக்கு என ஆண்டொன்றுக்குச் செலவிடும் தொகைக்கு சமனானதாகும்.

மேற்கு நாடுகளின் கணனி நிபுணர்கள் ஏற்கனவே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை ஆரம்பித்து விட்டனர்.

கணனிகளின் கட்டளைத் தொகுப்பை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதால், இலங்கை— இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள கணனி கட்டளைத் தொகுப்பாளர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கின்றது என்றே கூறவேண்டும். இதனால் அவர்களுக்கு நல்ல வருமானம்—கொழுத்த லாபம்— கிட்டப்போகின்றது.

இக்கட்டளைத் தொகுப்புகளை மாற்றி எழுதுவதிலும் பார்க்க, அந்த மாற்றங்களின் பின்னர் அவை சரிவரத் தொழிற்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு அதிக செலவும், நேரமும் எடுக்கப் போகின்றது.

'அப்பிள்' கணனி நிறுவனம், தற்போது தான் தயாரிக்கும் கணனிகள் 2,040 ஆம் ஆண்டு வரை எந்தப் பிரச்சினையும் இன்றிச் செயற்படும் எனக் கூறுகின்றது.

PC எனப்படும் சிறிய கணனிகளை (Personal Computer) வைத்திருப்பவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்றும்—

அவர்களின் கணனிகளின் கட்டளைத் தொகுப்பில் சிறிய மாற்றம் செய்தாலே போதும் என்றும் —

விடயமறிந்த நிபுணர்கள் கூறுகின்றார்கள். இதற்கான கட்டளைத் தொகுப்பு அடங்கிய 'கணிமம்' (Software) தயாரிக்கும் பணிகளும் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன.

- சுவாமி -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(இறுதிப் பகுதி)

# விடியலைத் தேடி.....

ஜனநாயக சுதந்திரம்தேடி அமெரிக்காவுக்குள் புகும் மக்கள் கூட்டத்துக்கு குறைவே இல்லை. அங்கே கட்டுப்பாடுகள் இல்லாத வாழ்வு. வேண்டியன வேண்டியபடி கிடைக்கும். மக்கள் எதிலே மயங்குவது, எதைச் செய்வது, எதைவிடுவது எனச் செய்வதறியாது திரிகிறார்கள். ஆடு மாடுகள் போல, தெருநாய்கள் போல வீதிகளில் எல்லாம் செய்யும் இளைய சமுதாயம் எந்தக்கவலையும் இல்லாமல் உலகினை மறந்து வாழ்கின்றது.

உண்மையில் இது ஒரு சொர்க்கவாழ்வு? எதுவித கட்டுப்பாடும் இல்லாமல் போதைப்பொருள்கள்கிடைக்

## இது ஓர் உண்மைச் சம்பவம்

கின்றன. மதுவகைகளோ தரம், அது தாராளம். காசு பணம் இருந்தால் செழிப்பாக வாழலாம்.

துப்பாக்கிப் பைத்தியங்கள் மறுபுறம். அதற்கும் சுதந்திரம். எனவே கொலை, கொள்ளை, கற்பழிப்புக்கு குறைவில்லை.

படங்களுக்கோ 'ஏ'; ''எக்ஸ்'' சேர்ட்டிபிக்கேற் எதுவும் அவசியமில்லை. எல்லாம் அப்பட்டமாகப் பார்க்கலாம்; ரசிக்கலாம்; நடிக்கலாம்; நடத்தலாம்.

கேளிக்கை நிகழ்ச்சிகள், இரவு விடுதிகள், கஸினோ போன்ற சூதாட்ட மையங்கள் என இலகுவாகப் பணம் பண்ணும் வழிகளுக்கும் குறைவில்லை. உலகில் ஒரு முன்னணிப் பணக்கார நாடு அல்லவா?

எல்லாம் கணனிகள் மயம். எனவே உழைப்புக்கும் அந்நிய செலவாணி வருமானங்களுக்கும் எனவே செலவுக்கும் குறைவு இல்லை. யாரும் எப்படி வேண்டுமானாலும் வாழலாம். இதைவிடச் சுதந்திரம் ஒன்று உலகினில் உண்டா?

எனவேதான் எல்லோரும் அங்கே படையெடுக்கிறார்கள். இவர்களின் சந்ததிகள் எப்படிச் சீரழிந்து போகுமோ?

கட்டுப்பாட்டுடன், பாரம்பரியத்துடன், ஒழுக்கத்துடன் வாழ்ந்து வந்த மக்கள் இந்தப் பூமிக்கு வந்தால் எப்படி முகம் சுழிக்காமல் வாழ முடியும்? அனுபவிக்க என்று வருபவர்கள் அனுபவிக்கலாம்; வேறுவழி இன்றி

தமிழில்
**மு. சிவநேசன்**

வருபவர்கள் ஜீரணிக்கலாம்.

ஆனால் பெலெங்கோ வளர்ந்த சூழல் அவனை உயர்த்தியதும், நற்பண்புகளை வளர்த்ததும்இப்போதான் அவனுக்குப் புரிய ஆரம்பித்தன. கட்டுப்பாடுகள் இல்லாத வாழ்வும் பழக்கமும் மனிதனை மிருகமாக்கி விடுவதை அவன் இங்கே கண்டான். கேவலம் இதுவும் ஒரு வாழ்க்கையா? இப்படி ஒரு சுதந்திரம் அவசியமா?

உடல் உழைப்பால் நாட்டை உயர்த்தியவர்கள் அவனுடைய நாட்டு மக்கள். அவர்கள் வாழ்விலே கட்டுப்பாடும் சிக்கனமும் இரு கண்கள்.

நாடு என்றும் கட்சி என்றும் மாயை காட்டி மக்களை ஒரே போக்கில் செயற்பட வைக்கும் ஆட்சியாளர்கள் அவர்களின் மனதைச் சிதற அடிக்கும் ஆசைமாயையை அறுத்து விடுகிறார்கள். அளவாக அனுபவித்தால் எல்லாம் போதும் என உணர்த்தி விடுகிறார்கள்.

இரண்டு நாட்டு வாழ்க்கையையும் அவன் மனம் ஒப்பிட்டபடி அவனது அமெரிக்க நாள்கள் நகர்கின்றன.

தொலைக்காட்சியில் ரஷ்ய ஒளிபரப்பு அவனை சித்திரவதை செய்தது. என்ன மண் வாசனை? எப்படிப்பட்ட மக்கள்? அன்னியோன்யமான வாழ்வு; கூட்டு முயற்சிகள்; ஒரே இலட்சியம்; வீணாகாத நிமிடங்கள்; எல்லாம் உற்பத்திமயம். பொருளாதார இலக்குகள். எண்ண, எண்ண அவன் மனம் வேதனையில் தவித்தது; செய்த துரோகம் மனதைக் குத்தியது. பிராயச் சித்தம் என்ன? எக்கேடு வரினும் சொந்த மண்ணுக்கே போய்விடுவது— அவர்கள் மன்னித்தால் என்ன தண்டித்தால் என்ன. எதையும் ஏற்க அவன் மனம் தயார்.

> **...பெலங்கோ வாழ்ந்த சூழல் அவனை உயர்த்தியதும், நற்பண்புகளை வளர்த்ததும் இப்போதுதான் அவனுக்குப் புரிய ஆரம்பித்தன. கட்டுப்பாடுகள் இல்லாத வாழ்வும் பழக்கமும் மனிதனை மிருகமாக்கி விடுவதை அமெரிக்காவில் அவன் கண்டான்; கேவலம் இதுவும் ஒரு வாழ்க்கையா....? இப்படி ஒரு சுதந்திரம் அவசியமா?...**



லெப்டினன்ட் பெலெங்கோ

மன்னிப்பு வழங்கப்படும் என அதிகாரிகள், ஏன் அதிபர் பிறெஸ்நேவ் கூட தெரிவித்திருந்தார். அது செயல்வடிவம் பெறுமா? புரியாது.

ஆனால் அவனது மண் அவனை மன்னிக்கத் தயங்காது; மக்கள் அவனை மன்னிக்கத் தயங்கமாட்டார்கள். அவன் தனக்காக எதையும் செய்யவில்லை.

அவனது கார் வாஷிங்டனில் உள்ள சோவியத் தூதரகம் நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது — சுதந்திரம் தேடி.... ★

—முற்றும்—

# இலங்கை பல்கலைக்கழகக் கல்வி முறையில் சீர்திருத்தங்கள் புகுத்தப்படுவது அவசியம்

## துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை பேட்டி

மரபுவழிவந்த பல்கலைக்கழக கல்விப் பெறுமானங்களுடன் சமூக, பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்கக் கூடிய—பட்டதாரிகளை உருவாக்கக் கூடிய—கல்வித்திட்டம் கொண்டு வரப்பட வேண்டும், பல்கலைக்கழக கல்வியின் பல அம்சங்களில் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டு மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் — இப்படிக் கருத்து வெளியிட்டார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.

★ கேள்வி: யாழ். பல்கலைக்கழகத்தின் தற்போதைய செயற்பாடுகள் குறித்து விளக்குவீர்களா?

★ பதில்: 1995 ஆம் ஆண்டு இடப் பெயர்வின் பின்னர் 1996 மே மாதமே பல்கலைக்கழகம் மீளவும் இங்கு இயங்க ஆரம்பித்தது. கடந்த ஒரு வருட காலமாக ஒருபக்கம் புனருத்தாரணம் என்றும், மறுபக்கம் கல்விப் பணி என்றும் இரு நிலைகளில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளோம்.

கடந்த கல்வியாண்டுக்குரிய பரீட்சைகள் யாவும் முடிவடைந்து பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டன. செப்ரெம்பர் ஆறாம் திகதி பட்டமளிப்பு விழா நடத்த ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

கலை, விஞ்ஞான, மருத்துவ பீடங்களில் நடப்பு கல்வியாண்டுக்குரிய விரிவுரைகளும், பரீட்சைகளும் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றன. விவசாய பீட விரிவுரைகள் கிளிநொச்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் பின்னர் அங்கு ஆரம்பமாகவில்லை.

★ கேள்வி: யாழ். பல்கலைக்கழகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் யாவை?

### விரிவுரையாளர் பற்றாக்குறை

★ பதில்: பல பிரச்சினைகள் உள்ளன. வன்னியில் தொடரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக விவசாய பீடத்தை கிளிநொச்சியிலோ அல்லது வன்னியில் வேறு ஓர் இடத்திலோ இயங்க வைக்க முடியாதுள்ளது. மருத்துவ பீடத்தை சிறப்பாக இயக்க [illegible] வதற்கு போதிய விரிவுரையாளர்களும், யாழ். போதனா வைத்தியசாலையில் நிபுணர்கள் சில துறைகளிலும் முற்றாக இல்லாதிருப்பதும் பெரும் பிரச்சினையாகவுள்ளது. இதனால் மாற்று ஏற்பாடாக மட்டக்களப்பு, திருகோணமலை, மந்திகை வைத்தியசாலைகளில் மருத்துவபீட மாணவர்களுக்கான ''கிளினிக்கல்'' பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளோம். விரிவுரை [illegible] படையில் பலர் பணிபுரிகின்றனர். இந்த ஒழுங்கு முறை தற்போதுள்ள பிரச்சினைக்கு ஓரளவு தீர்வாக அமைந்தாலும், திருப்தியானதென்று சொல்ல முடியாது.

> **இலங்கைப் பல்கலைக் கழக சேவையில் 30 வருடகால அனுபவம் மிக்கவரான பேராசிரியர் பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை யாழ். பல்கலைக்கழகத்தின் 4 ஆவது துணைவேந்தராவார்.**
>
> **யாழ். இந்து பழைய மாணவரான இவர், 1961 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1965 இல் பட்டம் பெற்ற பின்னர் உதவி விரிவுரையாளராக கல்விப் போதனையை ஆரம்பித்தார்.**
>
> **1980 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக் கழக புவியியல் துறையில் பேராசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் 1981 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை புவியியல் துறைத்தலைவராகவும்-1991 முதல் 1997 வரை கலைப் பீடாதிபதியாகவும் பதவி வகித்தார்.**
>
> **யாழ். பல்கலைக் கழகத்தின் தற்போதைய நிலை குறித்து சஞ்சீவிக்கு அளித்த பேட்டியில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி முறையில் சீர்திருத்தங்கள் புகுத்தப்படுவது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.**
>
> **அவரது பேட்டி இங்கு பிரசுரமாகுகின்றது.**

பேட்டி கண்டவர்
**மாவை குகன்**

விஞ்ஞான, கலை, விவசாய பீடங்களிலும் உரிய கல்வித்தகைமை கொண்ட விரிவுரையாளர் பற்றாக்குறை நிலவுகின்றது.

கடந்த 10 வருடங்களாக புதிய கட்டடங்கள் அமைக்கப்படாததால் வகுப்பறை, மாணவ விடுதி வசதிகள் மிகக் குறைவாகவுள்ளன.

ஆய்வுகூட உபகரணங்களை இன்னும் கூட தேவையான அளவுக்குப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

### புனரமைப்பு பணிகள்

★ கேள்வி: பல்கலைக் கழகத்தின் புனரமைப்புப் பணிகள் பற்றி...?

★ பதில்: திருநெல்வேலி பிரதான பல்கலைக்கழகப் பகுதியில் புனருத்தாரணம் ஓரளவு நிறைவு பெற்றுள்ளது. தற்சமயம் பல்கலைக் கழக சுற்றாடலில் இருக்கும் பாதுகாப்பு அரண் அகற்றப்படவிருப்பதால், கண்ணிவெடிகளை அகற்றி விளையாட்டு மைதானத்தை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும் மாணவர் தங்கும் பாலசிங்கம் விடுதி, பஸார் விடுதி, நுண்கலைமாணவர் விடுதி, மலேயன் சங்க விடுதி போன்றவை புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. விவசாய பீட காணி, கட்டடங்கள் புனரமைக்கப்படவேண்டியுள்ளன.

★ கேள்வி: நிரந்தரமான பெரிய கட்டடங்களை அமைக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா?

★ பதில்: இதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே தொடங்கியுள்ளோம். ஏற்கனவே கட்டப்பட்ட முடிவு பெறாத நிலையில் உள்ள பெரும் கட்டடங்களை கட்டி முடிக்க முயற்சி எடுத்துள்ளோம்.

நூல்நிலையம், மாணவர் நிலையம், மருத்துவபீட மாணவர் நிலையம், மருத்துவபீட அரங்கு, இராமநாதன் நுண்கலைப்பீட கட்



டடத்தொகுதி, கலைப்பீட கட்டடத்தொகுதி, விஞ்ஞான பீட வகுப்பறைகள், முகாமைத்துவ பரீட்சை மண்டபம் போன்றவை கட்டி முடிக்கப்படவேண்டியுள்ளன. இவற்றுள் முகாமைத்துவ பரீட்சை மண்டபவேலைகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. இந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒரு பிரச்சினையாக இல்லை. இவற்றை அமைக்கப்போதிய கட்டடப்பொருள்கள் இல்லாமையும், ஆளணியின்மையுமே தாமதத்துக்கு காரணங்களாகும். பெரிய கட்டடத்துக்கு சிமெந்து வேலைக்கு கண்டாவளை மண் கிடைக்காதது முக்கிய பிரச்சினையாகும்.

### மாணவர் பாதுகாப்பு

★ கேள்வி:-கல்வி பயிலும் மாணவர்கள் நிலை எப்படி?

★ பதில்:- மாணவர்களில்

(VIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

## (21 - 06 - 1997 முதல் 27 - 06 - 1997 வரை)

| சனி | | | சூ* வெ பு |
|---|---|---|---|
| கே | இராசிச் சக்கரம் | | |
| வி | | | ரா |
| சந் | | | செ |

மாற்றம்
25 இல் கடகத்தில்—வெள்ளி

ஆவணிக்குப் பின்பு வரும் பேச்சுக்களுக்கு தகுந்த் தாக்கங்களை கிரகங்கள் கொடுக்கின்றன.

மக்கள் தமது குல தெய்வ வழிபாடுகளையும்,வேண்டுதல்களையும் செய்து வரல் வேண்டும். அழிவுகளும் - ஆக்கங்களும் மாறிமாறிச் செயற்படும் பலன்கள் காணப்படுகின்றன. வெளிநாடுகளின் தலையீடு ஏற்படக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

**மேடம்:** உங்களுக்குத் தலைக்கு மேல் செலவு வந்தாலும் தயங்காது எடுத்த காரியத்தை முடிக்கப் பாருங்கள். எதையும் இரகசியமாகச் செயற்படுத்துங்கள்; வெற்றி கிடைக்கும். அடிக்கடி வரும் கோபத்தையும், வேகத்தையும் கொஞ்சம் கட்டுப்படுத்துங்கள். பல தடைகளுக்கு மத்தியிலே வாழப் பழகிக் கொள்ள வேண்டாமா? தொழில் ஸ்தானத்தில் அலட்சியத் தன்மையும், அதிக ஓய்வு எடுத்தலும் தவிர்க்கப்படவேண்டும். மற்றவர்களின் அபிப்பிராயத்தை விரும்பாத நீங்கள், நீங்களாகவே நிதானமாக நடந்து கொள்வது நல்லது.

**இடபம்:** எல்லாம் கலந்ததுதானே உலகம்? சடுபுடு என்று காரியம் ஆகவேண்டுமென்று கொதிப்படையாமல் மற்றவர்களையும் கவனித்து நடந்து பாருங்கள். காரியங்கள் தானே அனுகூலமாகும். அதிகம் பேசிக் காலத்தைப் போக்காமல் அமைதியாக இருந்து செயற்பாடுகளைச் செய்யுங்கள். குடும்பத்தில் உங்கள் கருத்திற்கு மதிப்பிருக்காது. புத்திரரால் அல்லது சகோதரர்களால் பொருள் செலவுகள் கொடுக்கும். அடிக்கடி மனப்பயம் கொடுத்தபடி இருக்கும்.

**மிதுனம்:** உங்களுக்கு அடிக்கடி பல பிரச்சினைகள் கருவாகி உருவாகியபடி இருக்கும். வீட்டில் அடிக்கடி புயல் வீசி ஓயும். நண்பர்களாலும் —உறவினர்களாலும் அடிக்கடி மனஸ்தாபங்கள் ஏற்பட இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் சமாளித்து மேலதிகாரிகளின் அன்பைப் பெறுவீர்கள். திடீர் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இடமாற்றங்கள் நன்மை தராது. பொருட் செலவைக் கட்டுப்படுத்துவது நன்று.

**கடகம்:** உங்களுக்கு வாக்குக் கலகமும், கைகால் உளைவும் கொடுக்கும். வீட்டில் அமைதி நிலவும். சகோதரங்கள் குறைகூறுவார்கள்; வேதனையும், சோதனையும் வருகின்றதெனக் கலங்காதீர்கள். அதைத் தாங்கினால்— அனுபவம் என்னும் பொக்கிஷப்படிப்பு தானே வரும். குலதெய்வ வழிபாடும் சோதிட வழிகாட்டலும் நன்மை தரும்; தொழில் ஸ்தானத்தில் செல்வாக்கும், சொல்வாக்கும் செயற்படும். வைத்தியச் செலவு முரசுக்கோ, உளைவுக்கோ, வயிற்றுநோவுக்கோ வர இடமுண்டு.

**சிங்கம்:** நீங்கள் அதிகம் யோசிக்க வேண்டாம். விடாமுயற்சியால் அதிக நன்மைகள் ஏற்படும். இடைக்கிடை வாக்குக் கலகம் கொடுக்கத்தான் செய்யும். குடும்பப் பாசம் கொண்ட நீங்கள் புத்திரர்களுக்காக அதிக செலவுகள் செய்வீர்கள். தெய்வ பக்தியால் கஷ்டங்கள் குறையும். உங்கள் தொழிலில், கடமையில் கண்ணாக இருங்கள். அதனால் நன்மைகள் ஏற்படும்.

**கன்னி:** 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பதற்கு உதாரணமான பின்போகலாம். இலாபம் சற்றுக் குறைவுதான். எல்லா விசயங்களையும் இலாபம் பார்க்க முடியாதுதானே. உங்கள் ஊக்கத்தால் தொழில் ஸ்தானத்தில் நல்லதைச் செய்வீர்கள். வீட்டில் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும்.

**தனுசு:** உங்களால் எதையும் நிதானப்படுத்த முடியாது. அடிக்கடி ஏதாவது விசயங்கள் வந்து மனம் குழம்பியபடி இருக்கும். உறவினரும், சகோதரங்களும் உங்களிடம் பொருள் தேடிவரலாம். வீட்டில் சலசலப்பு ஏற்படும். எதை எடுத்தாலும் தடங்கலாகும். ஆலயதரிசனம் அமைதியைக் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் உறுதியான செயல்களும் — நல்லமாற்றங்களும் பெரியவர்களின் உதவிகளும் கொடுக்கும்.

**மகரம்:** நீங்கள் எக்காரியத்தையும் பொறுமையுடன் செய்து வெற்றிபெற முயல வேண்டும். அடிக்கடி வரும் கொபத்தை நிதானப்படுத்துங்கள். இராகு, கேது மாற்றங்களால் பொருள் கஷ்டங்கள் கொடுக்கும். சகோதரங்களாலும், நண்பர்களாலும் பொருள் செலவுகள் கொடுக்கும். அம்மனை வழிபட்டு நன்மை பெறுங்கள். சனீஸ்வரன் திசை நடப்பவர்கள் சோதிடரை நாடுங்கள்.

### சோதிட சஞ்சீவி

நீங்கள் தடை, தாமதங்களை நீக்க முயலவேண்டும். அடிக்கடி கோபங்கள் வந்தபடி இருக்கும். அமைதியாக இருக்க முயலுங்கள். வீடு மனையில் கொண்டாட்டங்கள் இருக்கும். இராகு கேது மாற்றத்தால் கை, கால் உளைவு அடிக்கடி கொடுக்கும். சிலருக்கு கை கால் வீக்கம் கூடக் கொடுக்கும். புத்திரரால் அதிக செலவுகள் காட்டும். தொழில் ஸ்தானத்தில் ஆதரவும், எதிர்ப்பும் கலந்த பலன் நடக்கும்.

**துலாம்:** உங்களுக்கு பொருள்செலவுகள் அதிகரிக்கும். தூரப்பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பொருளைப் பெரிதாக எண்ணாத நீங்கள் இம்முறை செலவு செய்வதில் நிதானமாக இருக்க வேண்டும். அல்லது கடன்பட நேரிடும். தொழில் ஸ்தானத்திலும், வீட்டிலும் இடைக்கிடை மனக்கருத்துக்கள் வேற்றுமையாகலாம். சமாளித்துக் கொள்ளுங்கள். சாப்பாட்டை நிதானப்படுத்துங்கள் அல்லது வயிற்றில் நோய் வரும். உங்கள் கருமங்களில் கண்ணாயிருந்து செயற்படுங்கள். அதனால் வெற்றிவரும்.

**விருச்சிகம்:** உங்கள் வாக்குச் சாதுரியத்தால் காரியானுகூலங்கள் ஏற்படும். ஏட்டிக்குப் போட்டி போடாமல் அமைதியாக இருந்து செயற்பாடுகளைச் செய்யுங்கள். தொழில் ஸ்தாரன்த்தில் பம்பரமாகச் சுற்றி வருவீர்கள். ஆனால் காரியங் கைகூடாமல்

**கும்பம்:** உங்களுக்கு அடிக்கடி கோபம் வரும், பலதையும் கதைத்து, வரும் நன்மைகளையும் இழந்துவிடச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். உங்களைச் சுற்றிவரும் நண்பர்களால் ஓரளவு ஆறுதல்கள் ஏற்படும். அவர்கள் உதவிகள் செய்வார்கள். மனம் அமைதி இராது. தொழில் ஸ்தானதில் தடங்கல்களும் — ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளும் ஏற்பட்டபடி இருக்கும். ஏழரைச்சனி இடைக்கிடை தேவை

### மகாதேவா ஜோதிடம்

யற்ற பல பிரச்சினைகளை கருவாக்கி உருவாக்கும். செலவுகளை சற்று நிதானப்படுத்துங்கள். கடன்பட்டு கலங்க இடம் உண்டு. மற்றவர்களின் விசயங்களில் தலையிடாதீர்கள் அதனால் வீண் பழி கேட்பீர்கள்.

**மீனம்:** நீங்கள் நிதானமாகச் செயற்படுங்கள். இந்த உலகத்தில் மனிதனால் சாதிக்க முடியாதது உண்டா? மனிதன் எவ்வளவைச் செய்கின்றான்? பேசாமல் பயந்து கொண்டிராமல் காரியங்களைச் செய்யுங்கள். இராகு, கேதுக்களால் கைகால் பிடிப்பு,சனித் தொல்லை கொடுக்கும். வீடு மனையிலும், தொழில் ஸ்தானத்திலும் மாற்றங்கள் ஏற்படும். பொருள் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளாலோ சகோதரர்களாலோ அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டபடி இருக்கும். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

## குறள் வெள்ளம்

வள்ளுவர் கடவுள் என்று யாரையும் தெளிவாக அடையாளம் காட்டவில்லை. கடவுள் வாழ்த்தில் கூட, வள்ளுவர் சம்பிரதாயத்துக்கேனும் கடவுளை வணங்கிக் குறளைச் சொல்லத் தொடங்கவில்லை. கடவுளை விவரிக்கின்றார், கடவுளின் குணங்களை இயல்புகளாய் போற்றுகின்றார்; அவற்றை உணர்! அப்படி நீயும் நடக்க முனை! — என்கின்றார்.

உலகம் உத்தம குணமுடைய ஒருவனை — சிறந்த இயல்புகளைக் கொண்டவனை — கடவுளாகக் கொண்டு அவனை முன்வைத்து அவன் வழி தொடர்கிறது. அவனே ஆதி பகவன்; அவனே உலகத்துக்கு உயிர் மூச்சு! எப்படி? எதைப் போல?

எழுத்துக்கள் எல்லாம் ஆரம்பத்தில், உயிர் எழுத்தில் தொடங்குவது போல.


அனைத்து மொழிகளிலும் அகரமே முதலெழுத்து. அனைத்து ஒலிகளிலும் உயிர் ஓசை கலந்திருக்கும், உயிர் ஓசை கலவாமல் ஓர் ஒலி உலகினில் பிறவாது; உலகமே நிசப்தமாகிவிடும். அது போலவே இறைவனும் உலக இயக்கங்கள் அனைத்திலும் சக்தி வடிவாகக் கலந்துள்ளான். இதையே "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு." —என்றார் வள்ளுவர்.

(தொடரும்)

—அம்பிகைபாகன்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 03




சொற்சிலம்பம் இல. 03
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

..........................................

—— இங்கே வெட்டுக ——

### முடிவு திகதி: 27 - 06 - 1997

**இடமிருந்து வலம்**

1. பதினொராம் திதி. 5. உண்மை.7. கருத்தூன்றி நோக்கல். 9. மடியில் பெறுவது. 10. மஜ்னுவின் காதலி. 11. ஈரலில் சுரக்கப்படுவது. 13. கந்தன் துணைவி. 14. சேனைக்குத் தலைவன். 17. நூறு செய்யுளையுடைய பிரபந்தம். 19. வஞ்சகம். 21. புறாவுக்கு தன் சதை தந்தவன். 22. சில அல்ல. 23. அறப் படித்து கூழ் பானைக்குள் வீழ்வது. 24. ஒழுங்கு சேரும் இடம்.

**மேலிருந்து கீழ்**

1. வித்தை கற்பிக்காத குருவுக்கு தட்சணையாக தன் விரலைத் தந்தவன். 2. காவல் செய்யும் நபர். 3. பிற சேருமதி இல்லை. 4. முத்தின் தாயகம் 6. தூர அலகு. 8. நூல். 12. களம் 16. திரிகடுகத்தில் ஒன்று. 18. சான்று 19. புணர்ச்சி. 21. சக்கரம். 22. பிரி.

**கீழிருந்து மேல்**

15. இந்திய நகரம் இப்போது மாறிவிட்டது. 20. ஒரு கீரை.

### சொற்சிலம்பம் இல. 01 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அந்தாதி 4. கோ 6. கருவி 8. பாடு 9. சுகம் 11. சதுரம் 13. வைரி 14. பார்வதி 15. சகதி 18. மனைவி 19. கம்பன் 21. தையல் 22. தனி 23. புறா 24. துவி 25. விலை

**மேலிருந்து கீழ்**

1. அறுசுவை 2. தாகம் 3. திரு 5. சுடும் 7. விசர் 8. பாரதி 10. கரிசனை 12. துவரம் 14. பாதி 16. கவிதை 17. முன்னிலை 18. மரபு 19. கல்வி 20. பதவி

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற் பரிசு:- செல்வி ச. நளினி,
91, செட்டித் தெரு, நல்லூர்.

★ இரண்டாம் பரிசு:- க. பரமானந்தன்,
4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

★ மூன்றாம் பரிசு:- செல்வி ரஜீவனா மயில்வாகனம்,
பொன்னாலை வீதி, மானிப்பாய். மேற்கு.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுகள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150.00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100.00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50.00

★ புதிர்ப்போட்டி இலக்கம். 02 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிவரும் விலங்கினங்களின் எச்ச சொச்சங்களையாவது மனிதன் விட்டு வைப்பானா?

'ஜுராசிக் பார்க்' என்ற திரைப்படம் அண்மையில் சக்கைபோடு போட்டது. சுமார் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்து விட்ட 'டைனோசர்' விலங்குகளை இன்றைய தலைமுறைக்கு காட்ட அத்திரைப் படத்தில் பெருமுயற்சி எடுக்கப்பட்டது.

இவை முற்றிலும் அழிந்து போனமைக்கான காரணங்களை ஆய்வாளர்கள் பலரும் தேடியிருக்கிறார்கள்; கிடைத்த தடயங்களைக் கொண்டுஅவற்றை கற்பனையில் வடிவமைக்க முயன்றிருக்கிறார்கள், சிறார்களும் தமது கற்பனைக்கும் வளத்துக்கும் ஏற்ப இவற்றை வரைந்து மகிழ்கிறார்கள்.

ஒரு புறம் இந்தத் தேடுதல் முயற்சிகள் நடைபெறும் அதேவேளை, மறுபுறம் இன்று கண்முன்னே அழிந்து கொண்டிருக்கும் பல உயிரினங்கள்; இவற்றை காக்கவழி தெரியாமல் திணறும் பிராணியாக மனிதன்.

சிங்கம் கூட்டில் வாழும் என ஒரு மாணவன் எழுதி விட்டான். ஆசிரியருக்கோ அது காட்டில் வாழும் எனப் படித்த ஞாபகம். ஆனால் இன்னும் இரண்டொரு தலைமுறைகள் கடந்து விட்டால், ஆசிரியரின் வாதம் அடிபட்டுப் போகும்.

இன்று நாம் இயற்கையில் காணும் எத்தனை உயிரினங்களை நாளைய மனிதனும் காண விட்டுவைக்கப் போகிறோம்? அவர்கள் இவற்றையும் நாளை ஒரு 'ஜுராசிக் பார்க்கில்' தான் பார்க்க வேண்டிவருமா? என்றெல்லாம் கேள்விகள் எழாமல் இல்லை.

வீடியோ,புகைப்படக்கருவிகளை காவிக்கொண்டு காட்டிலும், கடலிலும் விலங்குகளைத் தேடி அலைபவர்களெல்லாம் முன்பு போலச் சுலபமாக அவற்றை சந்திக்க முடிவதில்லை என்றே கூறுகிறார்கள்.ஆராய்ச்சியில் சந்திரனையும், சூரியனையும் எட்டமுனையும் மனிதன், அந்த அளவுக்கு எமது மண்ணில் உள்ள வளங்களைப் பாதுகாக்க— மதிக்க நினைப்பதில்லை போலும்.

## இயற்கை அழிவுகள்

29 மில்லியன் ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியை நெருங்கும் ஒரு நட்சத்திரம் இங்கு பேரழிவுகளை ஏற்படுத்தி வருவதாகக் கருதப்படுகிறது. இதன் தாக்கத்தினாலேயே டைனோசர் இனங்கள் முற்றாக அழிந்திருக்கலாம் எனவும் கருதஇடமுண்டு. இதைவிட பூமியை அவ்வப்போது நெருங்கும் பெருமளவு தூசிப்படைகள், சிறியது முதல் பெரிய விண்கற்கள், வால் வெள்ளிகள் என்பனவும் உயிரின அழிவுகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் போட்டியாகத்தான், கூடி இருந்து அறுத்து அழிக்கும் சக்தியாக செயற்படுகிறான் மனிதன்.

## திமிங்கிலம்

இன்று கடலிற் தென்படும் அதிசய விலங்கான திமிங்கிலம் மனிதனிடம் இருந்து அச்சுறுத்தலை எதிர் கொள்கிறது. இதன் சந்ததிகள் சமுத்திரத்தில் இன்னும் பல காலம் தென்படுமா என்பதே இப்போதைய கேள்விக் குறி. சுமார் நூறு அடி நீளமானதும், 120 தொன் எடையுள்ளதுமான இக் கடல் வாழும் பாலூட்டும் விலங்கு இன்றும் உயிர் வாழும் ஓர் அதிசயமாகவே கருதப்படுகிறது.

இதன் குட்டியோ 16 மாதங்கள் தாயின் வயிற்றில் வளர்கிறது. பிறக்கும் போதே 14 அடி நீளமும், ஒரு தொன் எடையையும் எட்டி விடுகிறது. ஒரு மாத காலத்தில் தாயின் நீச்சல் வேகமான 20 கடல் மைல்களை (Knots) எட்டுகிறது.

காய்த்த மரம்தான் கல்லெறி படும் என்பார்கள். திமிங்கிலத்தின் பிரமாண்டமான உடலோ ஒரு நடமாடும் உணவுக் களஞ்சியம். அது மட்டுமா? அது கொண்டிருக்கும் பல தொன் எடையுள்ள எண்ணெய், மூலப்பொருள்கள், எலும்புகள் என்பவற்றின் சந்தைப் பெறுமதியோ ஆனை விலை, குதிரை விலை. இவற்றில் இருந்து தயாரிக்கப்படும் சவர்க்காரம், சருமப்பூச்சு மருந்துகள், மாஜரீன், படச்சுருள்கள், வாசனைப் பொருள்கள், 'சப்பாத்து பொலிஷ், டென்னிஸ் றக்கெட்ஸ், பிசின், எலும்புப் பசளைகள் என்பவற்றுக்கு சந்தையில் நல்ல கிராக்கி.



இவற்றுக்காக மட்டுமன்றி திமிங்கில வேட்டையை ஒரு வேட்கையாகக் கொண்டு கடலில் அலைபவர்களும் இருக்கிறார்கள். இதைவிடக் கடலில் கப்பல்கள் விடும் கழிவுகள், இரசாயனப் பொருள்கள், தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் எண்ணெய் மற்றும் அணுக் கசிவுகள் என்பனவும் கடல்வாழ் உயிர்களைக் காவுகொண்டு வருகின்றன.

## ரியூனா மீன் இனம்

ரியூனா (Thunnus thynnus) என்ற — 500 கிலோ எடை வரை வளரக்கூடிய — மீன் மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் நீரைக் கிழித்துக்கொண்டு நீந்தவல்லது. இன்றைய சமுத்திர ஜெந்துகளில் மிக வேகமாகப் பயணம் செய்யும் உயிரினம் இதுவென்றால் மிகையாகாது. ஐந்து வருடங்கள் வளர்ந்து 50 கிலோ எடையை எட்டும் போதே இதற்கு இனவிருத்திப் பருவம் வந்து விடுகிறது. ஆனால் அதற்கிடையில் அதிநவீன மீன் பிடிப்புச் சாதனங்களுடன் கடலில் புகும் மீன்பிடிக் கப்பல்கள் இலட்சக்கணக்கில் இவற்றை அள்ளிச் சென்றுவிடுகின்றன.

ஜப்பானிய மற்றும் அமெரிக்க ஹோட்டல்களில் இவற்றுக்கு நல்ல கிராக்கி. சர்வதேச சட்டங்கள் மூலம் பாதுகாக்கப்படும் இவ்வினங்கள் அழியாமல் காக்க சரியான திட்டங்கள் இல்லை என்றே கூறலாம்.

இவையெல்லாம் சமுத்திரத்தில் எங்கோ ஒரு தொலைவில் நடக்கும் நிகழ்வுகள் என நினைத்துக் கவனத்தில் கொள்ளாது வாளாவிருக்கும் மனித சமுதாயம் தனது எதிர்கால சந்ததிக்கும், இயற்கைக்கும் செய்யும் துரோகத் தனத்தை என்னென்பது?

தாவரங்களைக் கணப்பொழுதில் கருக்கிப் பொசுக்கிவிடும் பரக்குவாட் Paraquat — கிரமொக் (சான்) மற்றும் கிருமி நாசனிகள் — சிறிய விலங்கினங்களைக் கட்டுப்படுத்தும் பூச்சிகொல்லிகள் என்பன இன்று தவிர்க்கமுடியாத விவசாயத் தேவைகள் ஆகி விட்டன. இவை தவறாகவோ, அளவுக்கு அதிகமாகவோ பாவிக்கப் படும் போது ஏற்படுத்தும் தாக்கங்கள் சொல்லி மாளாது.

1983 களில் தாய்லாந்தின் ஏரிகளில் திடீரெனப் பல மில்லியன் மீன்கள் இறந்து மிதக்கத் தொடங்கி விட்டன. விழித்துக்கொண்டனர் ஆய்வாளர்கள். ஏரிகளைச் சூழ உள்ள வயல்களின் உச்ச மருந்துப் பாவனை, சூழலில் ஏற்படுத்திய தாக்கங்களின் விளைவுகள் அப்போது உணரப்பட்டன. இயற்கை நீருடன் கலக்கும் இவ்விரசாயனப் பொருள்கள் படிப்படியாகவோ, திடீரெனவோ விலங்கினங்களின் உடல் உறுதியைப் பலவீனப்படுத்தி விடுகின்றன. இவற்றின் தாக்கத்திற்கு மனிதன் மட்டும் விதிவிலக்கு ஆகிவிடலாம் என்றில்லை.

## கூட்டில் வலு இழக்கும் காட்டு மிருகம்

'சிங்கம்'. இது காட்டு மிருகங்களின் இராசா என்பது கதைகளின் கருத்து. கம்பீரமான அதன் தோற்றமும், தங்கக் கபில நிறமேனியும், கழுத்துச் சடையும்,மீசையும், மிடுக்கான பார்வையும் எத்துணை வசீகரம் தரவல்லன? இயற்கையில் அதன் கர்ஜனையும் அட்டகாசமும் கொஞ்ச நஞ்சமல்ல. இதையெல்லாம் கேள்விப்படும் போது மிருகக் காட்சிச்சாலையில் பசு போலப் படுத்திருப்பதுவும் சிங்கமா என்ற கேள்வி எழுகிறது.

என்னதான் வசதிகளை ஏற்படுத்தி செயற்கையாக விலங்குகளை பேணமுயன்றாலும் அவற்றின் சந்ததிகள், இயற்கையுடன் இணைந்து காட்டில் வாழும் இனங்களின் அளவுக்கு வலிமை உள்ளவையாக அமைதல் இல்லை. எனவே காலப்போக்கில் கூட்டில் வாழும் காட்டு இனங்கள் வலு இழந்த சந்ததிகளையே தோற்றுவிக்கும்.

வேட்டைப் பிரியர்களும் பண்டைய அரசர்களும் கொன்று குவித்த சிங்கங்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. உலகின் பல பிரதேசக் காடுகளிலும் காணப்பட்ட இவை இப்போது தென்னாபிரிக்கக் காடுகளில் மட்டுமே தென்படுகின்றன. அங்கும் பல சிறந்த இனங்கள் முற்றிலும் அருகிப் போய் விட்டன. இவ்வினங்கள் எங்காவது தென்படுகின்றனவா எனக் கையில் கமெராவினைத் தூக்கிக் கொண்டு காடுகளில் அலையும் விலங்குப் பிரியர்களுக்கு எஞ்சுவது ஏமாற்றமே.

## அருகி விட்ட புலிகள்

இமாலயப் பிரதேச காடுகள் புலிகளின் சொர்க்கம் எனப்பெயர் பெற்றவை. இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பல லட்சம் புலிகள் காணப்பட்ட இப்பகுதிகளில் இன்று அவை சுமார் 5,000 அளவில் குறுகிவிட்டன. அவற்றையும் அழியாமல் காக்க இந்திய அரசு போராட வேண்டி உள்ளது. புலித்தோல், புலி நகம், புலிப்பல் என்றால் மவுசு அதிகம். இவற்றைப் பெற புலிவேட்டையில் காட்டுக்குள் இறங்கும் கும்பல்களைக் கண்டால் வன அதிகாரிகளுக்கோ வயிற்றை கலக்கம்.

**.... சிங்கம், புலி, யானை, கங்காரு, திமிங்கிலம் போன்ற ஜீவராசிகளை நாளைய தலைமுறை 'ஜுராசிக் பார்க்கில்' தான் காணும் நிலை வருமா.....?**

## நிம்மதி இழக்கும் கங்காருகள்

ஆஸ்திரேலியா என்றதும் ஞாபகத்துக்கு வருவது கங்காருதான். நிம்மதி தேடி பலநாட்டு மனிதர்களும் சென்று குடியேறும் இந்த மண்ணில் கங்காரு இனங்கள் நிம்மதி இழந்து கொண்டே வருகின்றன. ஓர் இறாத்தல் எடையுள்ள சிறிய இனங்கள் முதல் 200 இறாத்தல் எடையுள்ள பெரிய வகை ஈறாக அறுபது இனங்கள் அங்கே காணப்பட்டன. குட்டியை வளர்க்க வயிற்றில் பை கொண்ட அதிசய விலங்கு இது என்பதை அறியாதோர் இல்லை எனலாம். வளர்ந்து விருத்தியடைந்த பின்னங்கால்களால் தெத்திப் பாய்ந்து ஓடவல்ல இதன் வேகம் சாதாரணமாக மணிக்கு 25 கி.மீ.களை எட்டும். நீளம் பாய்தல்,உயரம் பாய்தல் ஓட்டம் என்பவற்றில் இது சம்பியன்.

கங்காருவின் பல இனங்கள் அருகி மறைந்து வருகின்றன என ஆஸ்திரேலியா கவலை கொள்ளத் தொடங்கி விட்டது. இவ்வழிவுகளுக்கு வரட்சி, வேட்டையாடும் விலங்குகள் (மனிதன் உட்பட) என்பன துணை போகின்றன.இதன் இறைச்சி விற்பனையையும், வேட்டையையும் ஆஸ்திரேலிய அரசு தடைசெய்து நீண்ட காலம்



மனிதன், யானை, கார் ஆகியவற்றுடன் திமிங்கிலத்தின் உடற்பருமன் ஒப்பீட்டளவில்.

ஆகிறது. எனினும் நிலைமைகள் பின்னடைவையே காட்டுகின்றன.

இந்தியக் காடுகளில் 17ஆம் நூற்றாண்டில் இறுதிக் காட்டு எருது கொல்லப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அன்றே அந்த இனங்களின் இயற்கை வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது. இன்று பசு ஒரு வீட்டு மிருகம். நாளை எது எது எல்லாம் இப்படி உரு மாறுமோ ?

விலங்குகள் அருகிவரும் வேளையில் இவற்றின் தோல், மயிர் என்பவற்றை வாங்க பல நிறுவனங்கள் தயாராக உள்ள போது சட்டங்களை உதறித் தள்ளி, உயிரைத் துச்சமென மதித்து, ஆயுதம் ஏந்தி, காடுகளில் இறங்கும் கும்பல்களின் கண்ணில் இருந்து இவ் விலங்குகள் தப்ப முடிவதில்லை.

கிறிஸ்டியன் — நடீன் தம்பதிகள் உலகினை வலம் வந்து அழிந்து வரும் விலங்கினங்களை தமது கமிராக்களில் சிறைப்பிடிக்கும் பணியே வாழ்க்கை எனக் காலங் கழிக்கின்றனர். இவர்கள் இலங்கை, இந்தியக் காடுகளையும் விட்டுவைக்கவில்லை. இங்கு இவர்கள் பல சவால்களையும் எதிர்நோக்கியுள்ளதாகக் கூறியுள்ளனர்.

இந்தியாவில் வேட்டைக்காரரின் பொறியில் அகப்பட்ட பெண் புலியைக் காக்கப் போராடி, இயலாத போது அதன் அவஸ்தையை படம் பிடிக்க இவர்கள் முயலவும் அக்கணம் பாய்ந்து தாக்கிய ஆண்புலியிடமிருந்து மயிரிழையில் மீண்டு வந்திருக்கிறார்கள்.

இலங்கையிலும் காலில் சுடப்பட்ட யானை ஒன்றினை படம்பிடிக்க முயன்ற போது அதுவே தன்னைச் சுதாகரித்துக்கொண்டு தாக்க வந்ததையும் தாங்கள் தவித்ததையும் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இவர்களைப் போன்றவர்களின் மென்மனப் போக்குகளும் இயற்கையின் இனிய கொடைகளும் வனத்திடையே புதையல் தேடி ஆயுதத்துடன் அலைபவர்களுக்கு எங்கே புரியப் போகிறது?

தந்தம் வளர்ந்த யானைகளை காடுகளில் காண்பது அரிதாகி வருகின்றது. இத் தந்தங்களே அவ்வினத்துக்கு ஓர் அழிவினைத் தேடித் தரும் எதிரியாகி விட்டன. நவீன யுகத்தில் பாரிய வேலைகளைச் செய்ய யானையை ஏன் கட்டி மேய்க்க வேண்டும்? எனவே காலப்போக்கில் இதுவும் ஓர் டைனோசர் ஆகிவிடலாம்.

## இயற்கைச் சமநிலை

இயற்கைச் சமநிலையைக் குழப்பி விலங்குகளை அவற்றின் பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து குடிபெயரச் செய்வதிலும் மனிதன் மகா சூரன். காடழிப்பு இதனால் தாவரவர்க்க அழிவுகள். ஏன் கடலில் மிதக்கும் பல லட்சம் சதுரமைல் பிளாங்ரன் (Plankton) பாசிவகைத் தாவரங்கள் கூட எண்ணெய்க் கசிவுகளினால் கணப்பொழுதில் அழிக்கப் படுகின்றன. இதனால் உலகுக்கு உணவு ஊட்டும் வர்க்கம் — வளியில் ஒட்சிசன் சமநிலையைப் பேணும் தாவரங்கள் — தவிக்கின்றன. இச் செயற்பாடுகளின் விளைவுகள் உலகினை ஓர் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

இயற்கை அழிவுகளும் இயற்கைத் தவறுகளும் திருத்தப்பட முடியாதன; தவிர்க்க இயலாதன என்றால் மனிதனை மாற்றி இயற்கையின் மனமறிந்து ஒழுகச் செய்தல் அதை விடக்கடினமாக உள்ளதே...?

**- அம்பிகா -**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### அமெரிக்காவைக் கலக்கிய

# குண்டு வெடிப்புச் சூத்திரதாரிக்கு விஷ மருந்து ஊசி ஏற்றப்படுமா?

அமெரிக்க மண்ணில் மிக மோசமான பயங்கரவாதச் செயல் எனக் கருதப்படும் ஒக்லஹோமா நகரக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரியான திமொதி மெக்வேய்க்கு (வயது 29) மரண தண்டனை விதிப்பது என அமெரிக்க நீதி மன்றம் ஒன்றின் ஜூரர்கள் சபை முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

அக்கைதிக்கு விஷமருந்து ஊசி ஏற்றி உயிரிழப்பை ஏற்படுத்தும் விதத்தில் மரணதண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

விஷ ஊசி ஏற்றிக் கொல்லப்பட வேண்டிய மெக்வேய் என்பது ஐயம் திரிபற நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் மெக்வேயின் மரணதண்டனை நிறைவேற்றப்படுமா? —இது தான் இப்போது எழுப்பப்பட்டிருக்கும் கேள்வி.

ஆனால் அதற்கு இப்போதைக்கு வாய்ப்பு இல்லை என்றே சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

தனக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து உயர்நீதிமன்றம் உட்பட பல்வேறு சட்ட நீதிமன்றங்களிலும் மெக்வேய் மேன்முறையீடு செய்ய வசதி இருக்கின்றது.

இந்த மேன்முறையீடுகளில் மெக்வேய் வெற்றி பெற முடியாமல் போனால் கூட — விடுதலைத் தீர்ப்பைப் பெற முடியாமல் போனால் கூட— இந்த மேன்முறையீடுகள் மூலம் தனக்கு எதிரான மரணதண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவதை ஐந்து வருடங்களுக்கு மேல் தள்ளிப் போடச் செய்ய அவனுக்கு வாய்ப்புக்கிட்டும்.

அவனது மேன்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டாலும் சமஷ்டி அரசு அவனுக்கு எதிரான மரணதண்டனை தீர்ப்பை செயற்படுத்துமா என்பதும் கேள்வியாகவே உள்ளது.

கொலராடோ மாநிலத்தில் 1963 இற்குப் பின்னர் மரணதண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




மற்றைய சந்தேகநபர் டெரி நிக்கிலஸ்

இதன் காரணமாக 1963 இற்குப் பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்ட 12 கைதிகள் சமஷ்டி அரசின் கீழ் இருக்கின்றார்கள். அவர்களின் அணியோடு புதிய ஒருவனாக மெக்வேய் சேர்க்கப்படுவானே ஒழிய மரணதண்டனை நிறைவேற்றப்பட்டு உலகில் இருந்து அவன் வெளியேற்றப்படப் போவதில்லை என்கின்றனர் அவதானிகள்.

அமெரிக்காவில் மொத்தமாக இவ்வாறு 3 ஆயிரத்து 214 பேர் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரும் அது நிறைவேற்றப்படாமல் சிறைக் கூடங்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களின் கூட்டத்துள் ஒருவனாக மெக்வேய் சேர்க்கப்படுவான். அவ்வளவே.

மேற்படி மிகப் பயங்கரச் சேதத்தை ஏற்படுத்தும் வெடிகுண்டை மெக்வேய் தயாரிப்பதற்கு உதவினார் எனக் கூறப்படும் டெரி நிக்கிலஸ் என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவருக்கு எதிரான— தனியான— வழக்கின் விசாரணை இன்னும் இரண்டொரு மாதங்களில் ஆரம்பமாக இருக்கின்றது. அந்த வழக்கில் நிக்கிலஸ் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவரும் மெக்வேய் போன்று மரணதண்டனையை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்கின்றன சட்டவட்டாரங்கள்.



கைதியை விஷ ஊசி ஏற்றுவதற்கு வசதியாக படுக்க வைத்து 'பெல்ட்' போட்டு கட்டும் படுக்கையையே படத்தில் காண்கிறீர்கள். படத்தின் இடது மேல் மூலையில் மரணதண்டனைக் கைதி மெக்வேயின் முகத்தோற்றம்.

அவரது உயிர்த்துடிப்பு மற்றும் உடலியக்கங்கள் பற்றிய கணிப்புக்களைத் தரும் கருவிகளும் கட்டிலின் பக்கத்தே காணப்படுகின்றன.

1995 ஏப்ரல் 19 ஆம் திகதி அல்பிரிட் பி. முரா என்றஅரசுக்கட்டடத்தைத் தகர்த்தெறியும் விதத்தில் பாரிய குண்டுவெடிப்பை நடத்தி 168 அப்பாவிகள் கோரமாக உயிரிழப்பதற்கும் சுமார் ஐந்நூறு பேர் படுகாயமடைவதற்கும் காரணமாக இருந்தவன்

# கல்வியில் ஆண்களை முந்தும் பெண்கள்

அமெரிக்காவில் உயர்கல்வியில் அதிக பெறுபேறுகளை ஈட்டும் பெண்களின் வீதம் வேகமாக உயர்ந்து வருகின்றது. அதேசமயம் உயர்கல்வியில் சித்திபெறும் ஆண்களின் வீதம் வேகமாகச் சரிந்து வருகின்றது.

அமெரிக்க கல்வி அமைச்சு அண்மையில் வெளியிட்ட புள்ளிவிவரங்கள் இத்தகவலை உறுதிப்படுத்தியிருக்கின்றன.

அங்கு பல்கலைக்கழக முதல் பட்டம் பெற்ற பெண்களின் வீதம் 1985 இல் ஆயிரத்துக்கு 140 பேர் என்ற அளவில் இருந்தது. இது 1995 இல் 205 ஆக உயர்ந்து விட்டது.

1985 இல் இதேயளவாகவே— ஆயிரத்துக்கு 140 பேர் என்ற அடிப்படையிலேயே —பல்கலைக்கழக முதல் பட்டம் பெற்ற ஆண்களின் வீதமும் இருந்தது. ஆனால் அது 1995 இல் ஆயிரத்துக்கு 200 பேர் என்ற அளவிலேயே உயர்ந்திருக்கின்றது.

இதே போன்று முதுமாணிப் பட்டம் பெற்ற பெண்களின் வீதம் 1985 இல் ஆயிரத்துக்கு 6 ஆக இருந்து, 1995 இல் 16 ஆக உயர்ந்து, பத்து சதவீத அதிகரிப்பைக் காட்டியது! ஆனால் ஆண்களின் பெறுபேற்று வீதம் 1985 இல் ஆயிரத்துக்கு 23 ஆக இருந்து 1995 இல் ஆயிரத்துக்கு 27 ஆகவே உயர்ந்துள்ளது.

2006 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பல்கலைக்கழக முதல் பட்டம் மற்றும் முதுமாணி பட்டம் பெறுபவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் பெண்களாக இருப்பர் என்கின்றது அந்தப் புள்ளி விவரம்.

# பெனாஸிர் பூட்டோ பின் வாங்குகின்றாரா?

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ பல்வேறு சிக்கல்களில் மாட்டித் தவிக்கிறார். முதலில் பாகிஸ்தான் ஜனாதிபதி அவரது ஆட்சியைத் திடீரென 'டிஸ்மிஸ்' செய்தார். அடுத்து பொதுத் தேர்தலில் அவரது கட்சிக்குப் படுதோல்வி. தொடர்ந்து புதிதாகப் பதவியேற்ற நவாப் ஷெரீப்பின் அரசு



பெனாஸிர் குடும்பத்துக்கு எதிராகக் கடும்போக்கை வெளிப்படுத்தத் தொடங்கியது. பெனாஸிரின் கணவர் சர்தாரி கைதாகிச் சிறைக்கு உள்ளே. அவருக்கு எதிராக கிரிமினல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள். பெனாஸிரின் ஆட்சிக்கால நடவடிக்கைகள், ஊழல்கள் குறித்து விசாரணைகள் மறுபுறத்தில்.

இவ்வாறு பல முனைகளில் இருந்தும் வரும் நெருக்கடிகளால் குழம்பிப் போயிருக்கின்றாராம் பெனாஸிர்.

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் பின்வாங்கும் மனோநிலைக்குப் பெனாஸிர் வந்துவிட்டார் என்கின்றன பாகிஸ்தான் பத்திரிகைகள்.

அதற்கு முதல்படியாகத் தனது மூன்று குழந்தைகளையும் லண்டனில் உள்ள ஒரு பிரபல பள்ளியில் சேர்ப்பதற்கு அவர் முயற்சிக்கின்றார் என்றும் ஒரு தகவல்.

பாகிஸ்தான் அரசியலிலிருந்து பெனாஸிர் விலகிவிட்டால் சிறையிலிருக்கும். அவரின் கணவரை விடுவித்து விடுவதாகக் குறிப்பிட்டு, தற்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப் பெனாஸிருடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றார் என்று கூறுகின்றது 'சண்டே ரெலிகிராப்' பத்திரிகை.

ஆனால் தென்கிழக்கு ஆசியாவில் மக்கள் தலைவர்களாக உயர்ந்த பெண்மணிகள் பின்னர் வந்த இத்தகைய நெருக்குதல்களுக்கு இலகுவில் அடிபணிந்து விடுவதில்லை என்பதே நவீன வரலாற்று உண்மையாகும்.

இந்தியாவின் இந்திரா, இலங்கையின் சிறிமா, பிலிப்பீன்ஸின் கொரஸின் அக்கினோ, பர்மாவின் ஆகா சூகி, இந்தோனேஷியாவின் மேகவதி சுகர்ணபுத்திரி ஆகியோர் இதற்கு சில உதாரணங்கள் ஆவர்.

# இலங்கைப் பல்கலைக்.....

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பகுதியினர் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள். மறு பகுதியினர் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். வெளியிடத்து மாணவர்கள் குறுகிய காலத்தில் தங்கள், தங்கள் ஊருக்குப் போய்வருவது சிரமமாக இருப்பதால் அவர்கள் தமது உறவினர், உற்றார் குறித்து கவலைப்படுகின்றனர். மற்றும் அவர்களது பெற்றோரும் யாழ்ப்பாண நிலைமை பற்றித் தெளிவான விளக்கம்இல்லாததால் ஸ்திரமற்ற மனநிலைக்கு உள்ளாகிறார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சூழல், மாணவர்களுக்கு கல்வி பயில ஏற்ற இடமாகவுள்ளது. அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக முன்னேற்பாடான பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். காணாமற்போன எமது பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் பேசியுள்ளோம்.

## எதிர்காலத் திட்டங்கள்

★ கேள்வி:- பல்கலைக் கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

★ பதில்:- கல்விசார் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்யும் பொருட்டு புதிய கற்கை நெறிகளை ஆரம்பித்தல், புதிய கலைத்திட்டங்களை முன் எடுத்தல், உற்பத்திகளை, வேலைவாய்ப்புக்களை பெருக்க உதவும் ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல் என்பனவாகும்.

புதிய பீடங்கள், வளாகம், துறைகள் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

வடமாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியை யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக 1-4-97இல் இருந்து இணைத்துள்ளோம், அங்கு வர்த்தக, பிரயோக விஞ்ஞான பீடங்கள் ஆரம்பிக்கப்படும்.

1974 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்று வரை அமைக்கப்படாத சட்டத்துறை, விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய துறைகளையும், 1990 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறியியல் பீடத்தையும் விரைவில் அமைக்க முயற்சிகள் எடுக்கப்படும். இவற்றை அமைக்கும் பணி மிகக் கடினமாயினும் முயற்சி தொடரும்.

பல்லைக்கழக பேரவையாலும், மூதவையாலும் முன்மொழியப்பட்ட கடற்றொழிலியல் பீடம், சித்த வைத்திய பீடம், அரசறிவியற்றுறை, வர்த்தக— முகாமைத்துவ பீடம் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வதும் எமது திட்டமாகும்.

எமது பிரதேசத்துக்குத் தேவையான நீரியல் துறை அமைக்க முயற்சி எடுக்கப்படும்.

★ கேள்வி: தற்போதுள்ள பல்கலைக்கழக அனுமதி முறை பற்றி......?

★ பதில்: பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அனுமதிக்குத் தகுதி பெற்றவர்களில் இன்னும் கூடுதலானவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். திறமை அடிப்படையில் தெரிவாகும் விகிதம் அதிகரிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகத்துக்கு வருவதற்குக் காத்திருக்கும் கால அளவைக் குறைக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் குறைந்த கால எல்லைக்குள் படிப்பை முடிக்க ஆவன செய்யப்பட வேண்டும். ★

# செலூலர் தொலைபேசியால் ஆபத்து!

போகும் இடம் எங்கும் கையில் கொண்டு செல்லக் கூடிய செலூலர் தொலைபேசி அல்லது 'ஹாண்ட் போன்' இப்போது கொழும்பில் முக்கியத்துவம் பெற்று வருவது தெரிந்ததே. ஆனால் இந்தத் தொலைபேசிகளால் இப்போது புதிய ஆபத்தும் சேர்ந்து வந்திருக்கிறது.

செலூலர் தொலைபேசி மூலம் பேசும்போது வெளியாகும் நுண் அலைகளால் மூளைக்குப் பாதிப்பு ஏற்படுமாம். இதன் விளைவாக நரம்புத் தளர்ச்சி, நினைவாற்றல் குறைதல் போன்ற நோய்கள் வரும் என வாஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செக்ஸ் வழக்கில் சிக்கினார் கிளின்டன்!



கிளின்டன்



பவுலா

பெண்கள் மற்றும் பாலியல் விவகாரங்களில் சிக்காத மேற்குலக அரசியல் தலைவர்களே இல்லை எனலாம்.

உண்மையோ, பொய்யோ — அவர்களின் அரசியல் விஸ்வரூபத்தையே பொடிப் பொடியாகச் சிதற வைப்பதற்கு இத்தகைய விவகாரங்கள் எப்படியாயினும் முளைந்து விடும்.

இந்த வகையில் இப்போது சிக்கிக்கொண்டிருப்பவர் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்லியம் ஜெபர்ஸன் கிளின்டன் தன்னைக் கெடுக்க முயன்றதாக அழகி பவுலா கோபின் ஜோன்ஸ் வழக்குத் தொடர்ந்திருக்கின்றார்.

1991 இல் - ஆறு ஆண்டுகளுக்கு முன் - நடந்த ஒரு சம்பவத்துக்காக பில் கிளின்டன் இரண்டாவது தடவையாக ஜனாதிபதிப் பதவியேற்ற பின்னர் இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கின்றார் அந்த அழகி.

அப்போது மாநில ஆளுநராக (கவர்னராக) கிளின்டன் இருந்தார். அவரின் கீழ் பணிபுரியும் ஓர் ஊழியராகப் பவுலா ஜோன்ஸ் கடமையாற்றினார்.

அந்தச்சந்தர்ப்பத்தில்தான் இது நடந்ததாகப் பவுலா ஜோன்ஸ் குறிப்பிடுகின்றார்.

''1991 மே மாதம் 8 ஆம் திகதி பிற்பகல் வேளை. 'எக்ஸ்ஸெல்ஸியர் ஹோட்டலின்' மேல் மாடியில் அறை ஒன்றில் கிளின்டன் தனியாக இருந்தார். என்னை அழைத்தார். நான் அறைக்குள் போனேன். உடனே கிளின்டன் அறைக் கதவைச் சாத்தித் தாழிட்டார். தனது உடைகளை அவிழ்த்துப் போட்டுவிட்டு நிர்வாணமாக என்னை நெருங்கினார். நான் பயந்து ஓடிவந்துவிட்டேன்.'' - இவ்வாறு குற்றம் சுமத்துகின்றார் இப்போது முப்பது வயதில் ஏழு மாதக் குழந்தை ஒன்றுக்குத் தாயான பவுலா ஜோன்ஸ்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி கிளின்டன் மறுக்கின்றார்.

''எக்ஸ்ஸெல்ஸியர்'' ஹோட்டலில் 1991 மே 8 ஆம் திகதி பவுலா ஜோன்ஸைச் சந்தித்ததாக எனக்கு நினைவில்லை.

''ஆனால் ஹோட்டலில் என்னைச் சந்தித்ததாக அவர் கூறுவதை நான் பிழை என்று மறுக்கவில்லை. அவரைப் பல தடவை சந்தித்திருக்கின்றேன். ஆனால் நான் அவருடன் தவறான பாலியல் உறவு ஏதும் கொண்டிருக்கவில்லை''.— என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டார் ஜனாதிபதி கிளின்டன்.

தனது முதலாவது முறை ஜனாதிபதி பதவிக் காலத்தில் இதுபோன்ற பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுக்களைச் சந்தித்தவர் கிளின்டன். ஆனால் அதில் எல்லாம் எப்படியோ உச்சிக் கொண்டு வந்து தப்பிவிட்டார்.

ஆனால் இந்த வழக்கு மிகவும் சிக்கலானது என்று கூறப்படுகின்றது.

நீண்ட காலம் கிளின்டனின் விசுவாசமுள்ள ஊழியனாகவும், அரசாங்கப் பணியாளராகவும் கிளின்டனுக்குக் கீழ் வேலை செய்தவரும், பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவருமான டனி பேர்குசன் என்பவரின் சாட்சியம்தான் கிளின்டனுக்கு பெரும் அவப்பெயரை வாங்கித் தரப் போவதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

கிளின்டனின் அறைக்கு பவுலா ஜோன்ஸை தானே கூட்டிச் சென்றதாகவும் —

திரும்பி வரும்போது, கவர்னரின் பெண்நண்பியாகப் பொழுதைக் கழித்து விட்டுத்தான் திரும்பி வருவதாக பவுலா ஜோன்ஸ் தன்னிடம் கூறியதாகவும் — டனி பேர்குசன் செய்தி நிறுவனங்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கின்றார்.

கிளின்டன் பாலியல் உறவுக்கு தன்னை வற்புறுத்தியதாகவும், தான் தப்பி வந்துவிட்டதாகவும் பவுலா ஜோன்ஸ் கூற —

அவரைக் கிளின்டனிடம் கூட்டிச் சென்றதாகக் கூறிக்கொள்ளும் பேர்குசன், கிளின்டனுடன் பவுலா ஜோன்ஸ் உல்லாசமாக - சல்லாபமாக பொழுதைக்கழித்தார் என்று தன்னிடம் கூறியதாகக் குறிப்பிடுகின்றார்.

இந்த முரண்பாடு சில வேளைகளில் கிளின்டனுக்குச் சாதகமாக வழக்கைத் திருப்பக்கூடும்.

எனினும் வழக்கை முளையில் கிள்ளி எறிய கிளின்டன் தரப்பு எடுத்த முயற்சி தோற்றுப்போய்விட்டது.

'நாட்டின் சிரேஷ்ட தலைவர்களுக்கு எதிராக--அவர்

(X ஆம் பக்கம் பார்க்க)

## பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

# தஞ்சைப் பெரிய கோயில் தீ விபத்து: முன்னரே துர்க்குறி காட்டியது?

அண்மையில்—

தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில் (தஞ்சைப் பெரிய கோயில்) மகாகும்பாபிஷேகத்துக்கு முதல் நாள், பிரமாண்டமான அளவில் அமைக்கப்பட்டிருந்த யாகப்பந்தலில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் அறுபதுக்கும் அதிகமானோர் உயிரிழந்தது தெரிந்ததே.

அந்தச் சம்பவத்துக்கும் அதற்கு முதல் நடந்த ஒரு நிகழ்ச்சிக்கும் முடிச்சுப் போட்டு இப்போது கதை அடிபடத் தொடங்கியிருக்கின்றது.

கும்பாபிஷேகம் நடப்பதற்கு முன்னர் நடந்த நிகழ்ச்சி அது.

தஞ்சைப்பெரிய கோயிலின் உச்சியிலிருக்கும் விமானம் சுமார் எண்பது தொன் எடை கொண்ட தனிக்கல்லால் ஆனது. அத்தனை எடை கொண்ட தனிக் கல்லை இருநூறு அடிக்கும் கூடிய உயரத்துக்கு—கோபுரத்துக்கு மேலே—கொண்டு போய் எவ்வாறுவிமானத்தை அமைத்தான் மன்னன் இராஜ இராஜேஸ்வரன் என்று இன்னும் தொல்பொருள் ஆய்வாளர்கள் மூக்கில் விரலை வைத்து யோசித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்தவிமானத்தில் ஆறு தேன் கூடுகள்! ஒவ்வொரு தேன்கூடும் ஐந்து அடி, ஆறு அடி 'மெகா ஸைஸில்' தொங்கிக் கொண்டிருந்தன.

தஞ்சாவூரில் உள்ள மக்கள் அது ஏதோ 'வினை' என்று தான் பேசிக்கொண்டார்கள் என அப்போதே தமிழக வார இதழ்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

மகாகும்பாபிஷேகத்தை ஒட்டி அந்தத் தேன்கூடுகளை அகற்றிவிடத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு நாள் இரவு தீப்பந்தங்களுடன் — போர்த் தாக்குதலுக்குத் தயாராவது போன்ற ஏற்பாடுகளுடன்-- கோபுரம் வழியாக நான்கு பேர் ஏறி அந்தக் கூடுகளை தீப்பந்தங்களால் தாக்கி அழித்தனர். தேனீக்கள் தீயில் வெந்து ஆலயக்கோபுரம் மீது வீழ்ந்தன. அடுத்த நிமிடமே அந்த ஆறு தேன் கூடுகளிலும் இருந்து சுமார் முப்பது லீற்றர் தேன்—தஞ்சாவூர் பெரியகோயில் விமானத்துக்கு தேனாபிஷேகமாக வழிந்தது.

விமானத்தில் வழிந்த தேன், தீப்பந்த வெளிச்சத்தில் ஜொலித்தது. வழிந்த தேனில் சுமார் ஐந்து லீற்றரைத்தான், தேன் கூட்டை அழித்தவர்களால் சேகரிக்க முடிந்தது.

இந்தத் தேன் கூட்டுத் தாக்குதல் குறித்து மே மாதம் கடைசி வாரத்திலேயே தமிழக சஞ்சிகையில் விவரமாக செய்திகள் வந்திருந்தன.

தேன் கூட்டு அழிப்பால் என்ன துர்நிகழ்வு ஏற்படுமோ என பக்தர்கள் அஞ்சிய விவரமும் அந்த சஞ்சிகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

அந்த அச்சம் நியாயமானது தான் என்பதை நிரூபிப்பது போல —

இரண்டு வார காலத்துக்குள் —

ஆலயக் கோபுரத்தில் தேனீக்கள் தீயில் வெந்து வீழ்ந்தது போல —

ஆலய முன்றலில் யாகக் கொட்டகையில் பக்தர்கள் தீயில் வெந்து இறந்தார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றார் பக்தர் ஒருவர். ★

# நடுக்க நோயினால் அவதியுறும் முகம்மது அலி

உலக அதிபார குத்துச்சண்டை வீரராக இருந்து உலகை ஒரு கலக்குக் கலக்கியவர் கஸியஸ் கிளே எனப்படும் முகம்மது அலி.

அறுபதுகளின் பிற்பகுதியிலும் எழுபதுகளிலும் குத்துச்சண்டை உலகில் முடிசூடிய மன்னனாக இருந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர் அவர் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஐம்பத்தைந்து வயதாகும் அலியின் இன்றைய நிலை என்ன?

உப்பிய முகம்; பார்வை மங்கிய கண்கள்; நடுங்கும் கைகள். தேகாரோக்கியத்தைப் பொறுத்தவரை இவற்றுடன் 'நடைப்பிணமாகத்' திரிகின்றார் அலி. நடுக்க நோய்அவரை பெரிதும்பாதித்திருக்கின்றது.

ஆனால் அவர் மனம் தளர்ந்து விடவில்லை. உலக அதிபார குத்துச்சண்டை வீரனாக விளங்கிய காலத்தில் அவர் சம்பாதித்த பணம் பல்வேறு வியாபாரத்துறைகளில் விருத்தியுற்று, அவரை ராஜாவாக வைத்திருக்கின்றது.

சிக்காக்கோவுக்கு அருகே 88 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள ஓய்விடம் ஒன்றில் அவர் தமது காலத்தை மகிழ்ச்சியாகக் கழித்து வருகின்றார். பழைய ஆரவார வரவேற்புகள், பந்தாக்கள் இல்லை.

பெரும்பாலும் வருடத்தின் பெரும்பகுதியை— முக்கால் வாசிப்பகுதியை — வெளிநாட்டுப் பயணங்களில் செலவிடுகின்றார் அவர். அனேகமாக சிறுவர்கள், பாதிக்கப்பட்டோர், நலிவுற்றோர் போன்றோருக்கு நிதி திரட்டும் நிகழ்ச்சிகளில் அவர் பங்குபற்றுகின்றார்.

குத்துச்சண்டை உலகில் பிரகாசித்தபோது தலையில் அவர் வாங்கிச் சேகரித்த குத்துக்கள், இப்போது பார்க்கின்ஸன் (Parkinson) என்ற— நடுக்கத்தைத் தருகின்ற — நரம்பு சம்பந்தமான நோயை அவருக்குத் தோற்றுவித்திருக்கின்றன என்கின்றனர் டாக்டர்கள்.

(X ஆம் பக்கம் பார்க்க)

# ஊசியாகக் குத்தும் ஊசி விநியோகம்!

நோயாளருக்கு ஊசிமருந்துகளைச் செலுத்தும் ஊசிகளில் பெரும் மோசடி செய்யப்பட்டிருப்பது அம்பலத்துக்கு வந்திருக்கின்றது.

இதனால் நோயாளர்களுக்கு பெரும் சுகாதாரச் சீர்கேடும், உயிரிழப்பும் ஏற்படும் ஆபத்தும் ஏற்பட்டிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு அரச மருத்துவமனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் இதுபற்றிய அபாய அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்கள்.

முன்னைய காலங்களைப் போல் இப்போது ஒரே ஊசி பல தடவைகள் தொற்று நீக்கப்பட்டு பலருக்குப் பயன்படுத்தப்படுவதில்லை.

ஊசியை எவ்வாறு தொற்று நீக்கினாலும் ஒரு நோயாளியில் இருந்து மற்றொரு நோயாளிக்கு நோய் மற்றும் கிருமிகள் தொற்றுவதை முற்றாகத் தடுக்க முடியாது என்பது கண்டறியப்பட்ட பின்னர் தற்போது, ஒரு தடவை மட்டும் பாவித்து விட்டு தூக்கி எறியும் ஊசிகளே (Disposable Syringes) பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் 'எயிட்ஸ்' போன்ற தொற்று நோய்கள் ஒரு நோயாளியிலிருந்து இன்னொரு நோயாளிக்கு ஊசி மூலம் பரவுவது தவிர்க்கப்பட்டு வருகின்றது.

ஆனால் இவ்வாறு பாவித்து விட்டுத் தூக்கி எறிந்த ஊசிகளையே மீண்டும் பொதி ('பாக்') செய்து புதிதாக அரச ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பியிருக்கும் பெரும் ஊழல் அம்பலத்துக்கு வந்திருக்கின்றது,

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரி, றாகம ஆஸ்பத்திரி போன்றவற்றில் வழங்கப்பட்ட—பாவித்து விட்டு தூக்கி எறியும் வகையைச் சேர்ந்த—புதிய ஊசிகளில் உராய்வு நீக்கியாகப் பயன்படுத்தப்படும் 'ஒயில்' படிவு காணப்படுவதை அவதானித்த டாக்டர்கள் அதிர்ந்தார்களாம். என்ன நடந்தது என்பதை ஆராய்ந்த போது தான் உண்மை தெரியவந்திருக்கின்றது.

பாவித்துவிட்டு தூக்கி வீசிய ஊசிகளை மீண்டும் விற்பனைக்கு விட்டிருக்கிறார்கள். இத்தகைய ஊசியை ஒரு தடவை பாவித்து விட்டால் அதன் பின்புறத்தில் இருக்கும் 'றபர்' மீண்டும் முன்போல வழுவழுப்பாக—நைஸாக—சொர சொரப்பற்றதாக இயங்காது. இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக பாவித்த ஊசிகளைக் கழற்றி அவற்றின் றபர்களுக்கு உராய்வு நீக்கும் ஒயிலைத் தடவி, மீண்டும் பொருத்தி, 'பாக்' செய்து புதிது போல் அனுப்பியிருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

இத்தகைய ஊசிகளைப் பயன்படுத்துவதால் நோயாளிக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என கொழும்பு பெரியாஸ்பத்திரி டாக்டர்கள் எச்சரித்திருக்கின்றார்கள்.

இரத்தக்குழாயூடாகச் செலுத்தப்படும் ஊசிமருந்துகளை ஏற்றுவதற்கு இந்த வகை ஊசிகளைப் பயன்படுத்தினால் அவற்றில் இருக்கும் எண்ணெய்ப் படிவுகள் இரத்தக் குழாய்களுக்குள் சென்று இரத்த சுற்றோட்டத்துக்கு தடையை ஏற்படுத்தி நோயாளிக்கு பக்கவாதத்தையோ அல்லது உயிரிழப்பையோ ஏற்படுத்தி விடலாம் என்கின்றனர் டாக்டர்கள்.

அத்தோடு முன்னர் பயன்படுத்திய ஊசிகள் இவை என்று தெரியாததால்— அவை புதிய ஊசிகள் எனக் கருதி—அவற்றை சுகாதார முறைப்படி தொற்று நீக்குவதற்கான திட்டவட்டமான நடவடிக்கை ஏதும் எடுக்காது —வைத்தியர்கள் பயன்படுத்துவார்கள். இதனால் ஏதேனும் ஒரு நோய்க்கு சிகிச்சைபெற வருபவர் மற்றொரு ஆபத்தான நோயை வாங்கிச் செல்லும் அவலமும் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய ஊசி மோசடிக்கு மூல இடம் எது என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதன் காரணமாக 'ஒஃசல' மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மருந்தகங்கள் தவிர வெளியிடங்களில் ஊசிகளை வாங்க வேண்டாம் என்று நோயாளர்களை டாக்டர்கள் எச்சரித்திருக்கின்றார்கள்.

அரச ஆஸ்பத்திரிகளில் இத்தகைய — மோசடி செய்யப்பட்ட— ஊசிகள் விநியோகிக்கப்பட்டிருப்பது குறித்து அரச மருந்து விநியோகப் பிரிவுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது; விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

விசாரணைகளின் போது மேலும் பல பூதங்கள் கிளம்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிசேன கூரே கைதின் பின்னணி!

ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் ஐ. தே. கவில் மிகப் பலம் வாய்ந்த பிரமுகராகவும், அக்கட்சியின் செயலாளராகவும், அமைச்சராகவும் இருந்த சிறிசேன கூரே கடந்த திங்கள் மாலை ராஜகிரியவில் லேக் டிரைவ் வீதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டதே தென் இலங்கை அரசியலில் இந்த வாரம் மிகப் பரபரப்பை ஏற்படுத்திய சம்பவமாகும்.

அவசர காலச் சட்டத்தின் 17 (I) பிரிவின் கீழ் — தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில்— பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் விசேட கைது உத்தரவு பெற்று, இரகசியப் பொலீஸார் அவரைக் கைது செய்தனர்.

கெப்பிட்டிப்பொல மாவத்தையில் உள்ள ஒரு வீட்டில் பலத்த பாதுகாப்புடன் அவரைத் தடுத்து வைத்து, உயர் மட்ட பொலீஸ் அதிகாரிகள் அவரை விசாரித்து வருகின்றனர்.

1994 பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சி பதவியிழந்ததை அடுத்து சிறிசேன கூரே நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

லலித் அத்துலத் முதலி படுகொலை குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு இக்கொலைச்சம்பவத்துடன் சிறிசேன கூரேக்கு உள்ளதாகக் கூறப்படும் தொடர்புகள் குறித்து விசாரணை செய்வதற்காக ஆணைக்குழு முன் வரும்படி கூரேக்கு நோட்டீஸ் பிறப்பித்திருந்தது.

வெளிநாட்டில் இருந்த சிறிசேன கூரே இந்த அழைப்பை உதாசீனம் செய்தார். அதனால் அவரைக் கைது செய்து ஆணைக்குழு முன் நிறுத்துமாறு ஆணைக்குழு 'வாரண்ட்' உத்தரவு பிறப்பித்தது. எனினும் வெளிநாட்டில் இருந்த கூரேயை கைது செய்ய முடியவில்லை.

ஆணைக்குழு விசாரணை முடிவுற்றதால், ஆணைக்குழுவின் 'வாரண்ட்' உத்தரவு செயல் இழக்க, கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி ஜம்மென்று நாடு திரும்பினார் கூரே.

இரண்டொரு நாள்கள் கழித்து பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டிய கூரே, தான் அரசியலில் இருந்து ஒய்வுபெற்று விட்டதாகவும், தான் ஐ.தே.கவில் இப்போது ஓர் உறுப்பினராகக் கூட இல்லை என்றும் அங்கு தெரிவித்தார்.

ஆனால் அடுத்த ஏழு வார காலத்துக்குள் சிறிசேன கூரே கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த ஏழு வார காலத்தில் நடந்தது என்ன?

நாடுதிரும்பியதும் பிரேமதாஸா நிலையத்தின் தலைமைப்பதவியைக் கைப்பற்றிய கூரே, தனது அரசியல் ஆசானான பிரேமதாஸாவின் பெயரில் இருக்கும் அந்த நிலையத்தை பலப்படுத்தவும், அதற்கு பெருத்த எடுப்பில் உறுப்பினர்களை சேர்க்கவும் முழு முயற்சியில் ஈடுபட்டார்.

இந்த ஏற்பாடுகளை அவதானித்த ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரேமா ஆதரவாளர்களை திரட்டி ஐ. தே. கவுக்கு எதிராக புதிய கட்சி ஒன்றை ஸ்தாபிப்பதற்கு கூரே அடித்தளம் போடுகின்றார் என்று சந்தேகம் கொள்ள ஆரம்பித்தார். இது இருவருக்கும் இடையில் பிணக்கையும், பூசலையும், பிரிவையும் ஏற்படுத்திற்று.

இந்தப் பிணக்கைத் தீர்க்கும் முயற்சியில் ஐ. தே. கவின் முன்னாள் அமைச்சரும், சட்ட அறிஞருமான கே. என். சொக்ஸி முழு மூச்சாக ஈடுபட்டார்.

கடந்த வாரம் லண்டனில் தங்கியிருந்த ரணிலைத் தொலைபேசியிலும் —

ஐ. தே. க. செயலாளர் காமினி அத்துக்கோறளையையும், ஐ. தே. க. பிரமுகரும், கொழும்பு மாநகர மேஜருமான கரு ஜெயசூரியாவையும் நேரிலும் —

மறுபுறத்தில் சிறிசேன கூரேயை அவரது இராஜகிரிய இல்லத்திலும் —

சொக்ஸி பல தடவைகள் சந்தித்து பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி பெருத்த எடுப்பில் நடத்துவதற்கு தான் திட்டமிட்டிருந்த பிரேமதாஸாவின் 73 ஆவது பிறந்ததின நிகழ்வுகளின் நிகழ்ச்சி நிரல் மற்றும் ஏற்பாடுகள் பற்றிய குறிப்புக்களை இந்தப் பேச்சுக்களின்போது கூரே சொக்ஸியிடம் கையளித்தார்.


அவற்றைச் சொக்ஸியிடம் பெற்று பரிசீலனை செய்த காமினி அத்துக்கோறளையும், கரு ஜெயசூரியாவும் அது தனிக்கட்சியை ஸ்தாபிப்பதற்கு அத்திவாரமிடும் நிகழ்ச்சி அல்ல எனத் திருப்திப்பட்டு அத்தகவலை ரணிலுக்குத் தெரிவித்தனர்.

நாடு திரும்பிய ரணிலுடன் சொக்ஸியும், கரு ஜெயசூரியாவும், காமினி அத்துக்கோறளையும் நடத்திய பேச்சுக்களை அடுத்து கூரேயுடனான வேற்றுமைகளை மறந்து இணங்கிப்போக ரணில் முன்வந்தார்.

அது மட்டுமல்லாமல், பிரேமா பிறந்தநாள் நிகழ்ச்சியில் முக்கிய உரையாற்றவும் ரணில் இணங்கியுள்ளதாகவும் தெரிகிறது.

கூரே — ரணில் இடையேயான பிணக்கு தீர்க்கப்பட்டு 24 மணிநேரத்துக்குள் கூரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கும் இடையில் பிணக்கு தீர்க்கப்பட்டதால் ஐ.தே.க. மீண்டும் எழுச்சி மிக்க சக்தியாக உருவாகும்



பிரேமா பூதம் கிளம்புகிறது

ஏதுநிலை ஏற்பட்டிருப்பதும் -

அந்த எழுச்சிக்கு கட்டியம் கூறும் நிகழ்வாக பிரேமா நினைவு நாள் நிகழ்வுஅமையப் போவதும்-

இரகசியப் பொலீஸாரின் தகவல்களின் மூலம் அரசுக்கு நிச்சயம் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

ஐ.தே.கவின் எழுச்சியை முளையில் கிள்ளி எறிய விரும்பிய அரசு கூரேயைக் கைது செய்து, அதனை நடைமுறைப்படுத்திக் கொண்டது என்ற சாரப்பட, கூரே கைது தொடர்பாக பிரேமா நிலையம் விடுத்த கண்டன அறிக்கை



இணக்கம் கண்ட ரணிலும் கூரேயும்

யில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது அமைச்சரவைக் காலத்தில் கூரே மேற்கொண்டதாகக் கூறப்படும் அத்துமீறல்கள், அவரைக் கைது செய்வதற்கு இலகுவான வாய்ப்பை அரசுக்கு தந்திருக்கக் கூடும்.

கூரேயுடனான கூட்டைத் தவிர்க்கும்படியும் —

அதேபோன்றோரைக் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என்றும் —

அதனை மீறினால் சிறிசேனகூரே போன்று முன்னாள் ஐ. தே. க. அமைச்சர்கள் — ரணில் உட்பட — எவரையும் கைது செய்ய முடியும் என்பதையும் —

கூரே கைது மூலம் ரணிலுக்கு அரச உயர்பீடம் [illegible] அவதானிகள் கருதுகின்றனர்.

சிறிசேன கூரே எது தொடர்பாக விசாரிக்கப்படுகிறார் என்பது இன்னும் தெளிவாகவில்லை. அவர் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் மேலும் பலர் கைது செய்யப்படவிருக்கிறார்கள் என்ற மொட்டையான தகவல் மட்டுமே வெளியாகியுள்ளது.

ஆனால் அத்துலத்முதலி கொலை தொடர்பான ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை பூர்த்தியாகவில்லை என்று ஆணைக்குழுச் செயலாளர் ஈ. யு. குணசேகரா சில தினங்களுக்கு முன் கூறியிருக்கின்றார்.

இது ஆணைக்குழு விசாரணை பூர்த்தியடையவில்லை என்ற சட்ட நிலைப்பாட்டைத் தருமா என்பதும் —

விசாரணை பூர்த்தியடையாததால் மீண்டும் ஆணைக்குழு அமர்வுகளை நடத்த முடியுமா என்பதும் —

அவ்வாறு அமர்வை நடத்தினால் கூரேயை பாதுகாப்பில் வைத்து ஆணைக்குழு முன் நிறுத்தலாமா என்பதும் —

போகப் போகத் தான் தெரியவரும்.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற ஐ. தே. க. நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் கூரே கைது குறித்து ஏதும் பிரஸ்தாபிக்கப்படாததும்—

அது குறித்து ஐ. தே. க. மேலோட்டமான கண்டன அறிக்கையை மட்டும் வெளியிட்டதும்—

இந்த விடயத்தில் ஐ. தே. க. ஒதுங்கியிருக்கவே விரும்புகின்றது என்பதையே காட்டுகிறது.

★ ★ ★

## அமைச்சரவை மாற்றத்தால் சலசலப்பு

கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் சலசலப்பு இன்னும் ஓயவில்லை.

1994 பொதுத்தேர்லுக்கு முன்னர், அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் என எண்பதுக்கும் அதிகமானவர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டிருந்ததை அப்போதைய எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கடுமையாகச் சாடி வந்தது.

தமது அரசு ஆட்சிக்கு வந்தால் அந்த அரசின் அமைச்சரவையில் இருபதுக்கும் குறைவான அமைச்சர்களே இடம்பெறுவர் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் — எழுத்து மூலம்— உறுதியளித்திருந்தது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி.

ஆனால் அந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் முதல் அமைச்சரவையில் 23 பேர் அங்கம் வகித்தனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, பல கட்சிகளின் கூட்டணி என்பதால் அக் கூட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் அமைச்சரவையில் இடமளிக்க வேண்டிய தேவை இருந்ததை மக்கள் உணர்ந்து கொண்டதால், தேர்தல் விஞ்ஞாபன உறுதியை மீறி 23 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதை அவர்கள் ஒரு பெரிய விடயமாக அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் தற்போதைய அமைச்சரவை மாற்றத்தை அடுத்து முழு அமைச்சர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது. பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையும் முப்பதிலிருந்து 35 ஆக அதிகரித்துள்ளது.

எனவே மொத்தமாக அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துவிட்டது.

ஒவ்வொரு அமைச்சருக்கும் தனிப் பாதுகாப்பு அலுவலர்கள், தனிப்பட்ட செயலாளர்கள், அந்தரங்கச் செயலாளர்கள், அலுவலக ஆளணியினர், வாகனங்கள், தொலைபேசிகள் என்று அரசாங்கத்தின் கஜானாவைக் காலியாக்கும் செலவினங்கள் அதிகரித்துச் செல்லப் போகின்றன.

இதற்கிடையில் —

தமக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சை கிழக்கு மாகாண புனரமைப்பு என குறுக்கியதையும் —

தமது கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஹிஸ்புல்லா தபால் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் பதவியிலிருந்து மாற்றப்பட்டதையும்—

ஆட்சேபித்து அமைச்சர் அஷ்ரப் ஜனாதிபதி சந்திரிகாவுடன் கடுமையான நிலையை எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

அஷ்ரப்பின் குறையைக் கேட்டு அதனை விரைவில் நிவர்த்தி செய்வதாக ஜனாதிபதி அஷ்ரப்புக்கு நேரில் உறுதியளித்திருந்தார். ஆனால் அந்த உறுதிமொழியை உடன் நடைமுறைப்படுத்தும்படியும், இல்லையேல் அதுவரை அமைச்சரவைக் கூட்டதைத் தான் பகிஷ்கரிக்கப் போவதாகவும் அஷ்ரப் மிரட்டி வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்குக்கான புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் என்ற பதவி வழங்கப் பட்டிருந்தாலும்—

வடக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய இடங்கள் அனைத்துக்கும் பொறுப்பான புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக அஷ்ரப் செயற்படலாம் என்றும் ஜனாதிபதி அஷ்ரப்பிடம் நேரில் கூறியிருந்தாராம். ஆனால் அந்தப் பதில் அஷ்ரப்பை திருப்திப்படுத்தவில்லை என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. ★

உள்ளும் புறமும் — குறுமுனி

## நடுக்க நோயினால்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகளின் நலனில் அதிக சிரத்தை காட்டும் அலி, ''குழந்தைகள் சொர்க்கத்திலிருந்து வந்த அகதிகள்'' என்கின்றார். ஆர்வத்துடன் இஸ்லாம் போதனைகளைப் பின்பற்றுகின்றார்.

மூன்று விவாகரத்துகளின் பின்னர், நான்காவது துணையாக அவர் கைப்பிடித்த லோனி வில்லியம்ஸ் எப்போதும் அலிக்குத் துணையாக இருக்கின்றார்.

## செக்ஸ் வழக்கில்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் தனிப்பட்ட நடத்தைகள் தொடர்பாக—நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. அத்தகைய பாதுகாப்பை அரசமைப்பு வழங்குகின்றது' என்ற சாரப்பட ஜனாதிபதி கிளின்டன் சார்பில் இந்த வழக்கில் எழுப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை அமெரிக்க உயர் நீதிமன்றம் அண்மையில்நிராகரித்து விட்டது. ஒன்பது நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை ஏகமனதாக வழங்கியுள்ளது,

இத்தீர்ப்பின்படி பவுலா ஜோன்ஸின் வழக்கு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. இனி, நடந்த சம்பவங்கள் நீதிமன்றத்தில் அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்து உதறப்படும்.

அப்போது கிளின்டனின் மானம் கப்பலேறலாம்; பதவிபறிபோகலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org